ANGLO ASIAN MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly

முரசு: 5 23 – 29 செப்டெம்பர் 1999 முழக்கம்: 245

CAR CHECK
Mot & Repair Center
உங்களுடைய சகல திருத்த
வேலைக்கும், M.O.T க்கும்
தொடர்புகொள்ளவேண்டிய இடம்:
(Honda & Nisson Dealer க்கு அருகாமையில்)
Unit 17 Stonefield Close.
Off Stonefield Way
Ruislip - Middx.
தொடர்புகளுக்கு: 0181-841 1880
(சுகுமார்)
Pub.

# வன்னியில் திலீபனின் நினைவெழுச்சி

## போரெழுச்சிக் குழு - போராளிகள் சந்திப்பு

(20.09.99)

ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உண்ணாநோன்பிருந்து வீரச்சாவை தழுவிக் கொண்ட லெப்.கேணல் திலீபனின் 12ஆம் ஆண்டு நினைவெழுச்சி நிகழ்வுகள், விடுவிக்கப்பட்ட பகுதிகள் எங்கும் உணர்வு பூர்வமாக நினைவுகூரப்பட்டு வருகிறது. வன்னியில் திலீபனின் நினைவாக அடையாள உண்ணா விரதங்களும், சிரமதானப்பணிகளும், கலை நிகழ்வுகளும் இடம் பெற்று வருவதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

திலீபனின் உண்ணாநோன்பு ஆரம்பமாகிய நாளான 15ம் திகதியில் இருந்து கிராமங்கள் தோறும் மக்கள் ஒன்று கூடி பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடாத்திவருகின்றனர்.

இதேவேளை திலீபனின் நினைவெழுச்சி தினத்தில் போரெழுச்சிகுழுவினர் புலிகளின் சிராட்டிக்குளம், மற்றும் விளாங்குளத்தில் அமைந்திருக்கும் முன்னரங்க காவல் நிலைகளுக்கு சென்று அவர்களுடன் சந்திப்புக்களையும் நடாத்தியுள்

(☞ 2ம் பக்கம்)



## புலிகள் மிகப் பலமாகவுள்ளனர்

### - சண்டே டைம்ஸ் எச்சரிகை

போரில் முதன்முறையாக புலிகள் மரபு ரீதியான சமரொன்றிற்கு கனரக ஆயுதங்களை பெருமளவு ,பயன்படுத்தும் உத்தியை இப்போது பாவித்துள்ளனர். 120மிமீ—81 மிமீ எறிகணைகள், 122மிமீ பீரங்கிகள், பல குழல் பொருத்தப்பட்ட ஏவுகணைச் செலுத்திகள் என்பனவற்றை புலிகள் மன்னார் பள்ளமடுவில் கையாண்டதாக இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி இக்பால் அத்தாஸ் செய்தி வெளியிட்டுள்ளார்.

இது புலிகள் மிக அதிக அளவிலான பல குழல் கொண்ட் ஏவுகணை செலுத்திகளை அண்மையில் தமது படையணிகளில் இணைத்துள்ளதாக இராணுவ அதிகாரிகள் கருதுகின்றனர். மேலும் புதிய 122மிமீ, 81மிமீ எறிகணைகள் பெருமளவு புலிகளுக்கு கிடைத்துள்ளது.

புலிகளால் தமது இராணுவத் தளவாடங்களின் எண்ணிக்கை அதிகரிக்க முடிந்தமையானது சிறீலங்கா கடற்படைக் கண்காணிப்பை மீறி புலிகளினால் ஆயுத தளவாடங்களைக் கொண்டு செல்ல முடிவதை நிரூபித்துள்ளது என இராணுவ உளவு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக இக்பால் அத்தாஸ் செய்தி வெளியிட்டுள்ளார்.

இராணுவ உளவுத்துறை புலி

(☞ 2ம் பக்கம்)

## பரந்தனில் 'றலபஹர'

### * கவசவாகனங்கள் சேதம் * MI-24 மீது தாக்குதல்

(20.09.99)

ஆனையிறவில் இருந்து மீண்டும் படையினர் முன்னேற எடுத்த முயற்சி புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது. கடந்த புதனன்று காலை பரந்தனில் இருந்து மேற்கு கிழக்கு பகுதிகளினூடாக றலபஹர (அலைவீச்சு) என்ற குறியீட்டுப் பெயருடன் டாங்கிகள் கவச வாகனங்கள் சகிதம் படையினர் முன்னேறத் தொடங்கினர். இவர்களின் முன்னேற்ற நகர்விற்கு உதவியாக கிபீர் குண்டு வீச்சு விமானங்களும் உலங்கு வானூர்திகளும் புலிகளின் முன்னரங்க காவல் நிலைகள் மீது தாக்குதலை நடாத்தின.

முன்னேற முனைந்த படையினரை வழிமறித்து புலிகளின் தாக்குதல் அணியினரும், விக்கடர் கவச எதிர்ப்பு படையணியும் எதிர் தாக்குதலை தொடுத்தன. இதன் போது இரு கவச வாகனங்கள் பலத்த சேதமடைந்தது.

இதேவேளை தாக்குதலை நடாத்திய விமானப் படையினர் மீது விமான எதிர்ப்புப் படை

(☞ 2ம் பக்கம்)

## பிரெஞ்சு, சுவீடன் தூதுவர்கள் செம்மணிக்கு விஜயம்

(20.09.99)

செம்மணிப் புதைகுழிகளை பார்வையிடுவதற்காக கடந்த வியாழனன்று சிறீலங்காவுக்கும் மாலைதீவிற்குமான பிரெஞ்சு தூதுவரான எலிசபெத் டெஹறன், சுவீடன் தூதுவரான கலீட்டன் இவர்களுடன் அமெரிக்க தூதரக அரசியல் பிரிவை சேர்ந்த செல்வி பத்மினி ராஜதுரையும் சென்றிருந்தனர். வியாழன் காலை செம்மணிப் பகுதிக்கு நேரடி விஜயம்செய்த இவர்கள், புதைகுழிகள் தோண்டப்படுவதை நேரடியாக பார்வையிட்டுள்ளனர்.

இதேவேளை இப்புதைகுழி தோண்டும் நடவடிக்கைகளில் பங்கேற்றுள்ள நிபுணர்களை சந்தித்து உரையாடியுமுள்ளனர். அத்துடன் காணாமல்

(☞ 2ம் பக்கம்)

## தட்சணாமருதமடுவில் தாக்குதல்

### 12 படையினர் பலி 20 – பேருக்கு மேல் காயம்

(20.09.99)

வன்னி. தட்சணாமருதமடுப் பகுதியில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலிலும் நேரடி தாக்குதலிலும் 12 படையினர் கொல்லப்பட்டு 20 மேற்பட்ட படையினர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். மடுவில் இருந்து வியாழன் காலை 7.30 மணியளவில் 30ற்கும் மேற்பட்ட படையினரை ஏற்றிக்கொண்டு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த் இராணுவ வாகனத்தின் மீது தட்சணாமருதமடுவில் வைத்து விடுதலைப்புலிகள் கிளைமோர் கண்ணிவெடி தாக்குதலை மேற்கொண்டனர். இதன் போது 2 படையினர் கொல்லப்பட்டதுடன் சிலர் காயமடைந்தனர். இதேவேளை இராணுவவாகனம் தாக்குதலுக்குள்ளானதும் விடுதலைப்புலிகள் அதில் வந்த படையினரை நோக்கி துப்பாக்கி ப்ரயோகம் மேற்கொண்டனர். இதன்போது 10 படையினர் கொல்லப்பட்டு

(☞ 2ம் பக்கம்)

தமிழினி
பல்பொருள் அங்காடி
TAMILINI Cash and Carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France

E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
Leama
Tel: 0208 2053650
Fax: 0208 2053651

டென்மார்க்:
T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: மக்கள் கடை
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin,
Swiss.
Natel: 079 635 02 16

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஹரி - Tel: 07887874177

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109
Homebush South
N.S.W 2140
Australia
E-Mail:tccsydney@one.net.au

# மன்னாரில் தேடுதல் 500ற்கும் மேற்பட்டவர்கள் கைது

*(20.09.99)*

மன்னார் நகர்ப் பகுதியில் இன்று காலை 9 மணியளவில் சிறீலங்கா பொலிசாரினாலும் இராணுவத்தினராலும் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்பட்டது. காலை 9 மணியளவில் ஆரம்பமான தேடுதல் நடவடிக்கை மதியம்வரை தொடர்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இத் தேடுதலின்போது 500ற்கும் மேற்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் கைதுசெய்யப்பட்டு முகாமிற்குக் கொண்டுசெல்லப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

மன்னார் நகர்ப் பகுதியில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஊடுருவியுள்ளதாகத் தகவல் கிடைத்ததையடுத்தே இச் சுற்றிவளைப்பு—தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சிறீலங்கா பாதுகாப்பு படைகளுக்கு தகவல் கொடுத்து வந்தவர்களும், இராணுவ உளவாளிகளும் மன்னார் நகர்ப்பகுதியில் தொடர்ந்து கொல்லப்பட்டு வருவதற்கு மன்னார் பகுதியில் ஊடுறுவியுள்ள விடுதலைப் புலிகளே காரணமென மேலும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## இராணுவ வாகனம் விபத்தில் சிக்கியதில் அதிரடிப்படையினர் காயம்

*(20.09.99)*

அம்பாறை மாவட்டத்தில் கொண்டவெட்டுவான் இராணுவ முகாமில் விசேட இராணுவப் பயிற்சி பெறச்சென்ற 20 விசேட அதிரடிப் பெண் பொலிஸார், சென்ற வாகனம் மங்களகம எனும் இடத்தில் விபத்துக்குள்ளானபோது படுகாயமடைந்தனர். வெஹ்யட்ட கடியாவில் சந்தும்பு அதிரடிப் பொலிஸ் படை முகாமிலிருந்து சென்று கொண்டிருந்த போதே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் வீரமுனை என்ற தமிழ்க் கிராமம் இன்று நண்பகலுக்குப் பின்னர் விசேட அதிரடிப் பொலிஸ் படையினரால் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தப்பட்டது. விடுதலைப்புலிகள் வீரமுனைக் கிராமத்தினுள் ஊடுருவியதாகக் கிடைத்த தகவலை அடுத்தே தேடுதல் நடத்தப்பட்டதாக படை வட்டாரங்கள் கூறின.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### புலிகள்...

கள் பலவீனமாகிவிட்டதாகக் கூறிவந்தது. ஆனால் புலிகள் தமது வீரர்களுக்கு ஆயுதம் வழங்கியும் புதிய போராளிகளுக்கு பயிற்சி வழங்கியும் தம்மை பலப்படுத்தி விட்டனர். தற்போது புலிகளின் செயற்பாட்டுப் பரப்பு அதிகரித்துள்ளது எனத் தெரிவித்த அத்தாஸ், புலிகளின் போர் உத்திகள் இப்போது எறிகணைகளை மையப்படுத்தி இடம்பெறுகின்றதாயினும் இராணுவம் அதனை தடுக்க முடியாதுள்ளதாகக் கூறியுள்ளார்.

புலிகளின் பீரங்கி-எறிகணை நிலைகளை விமானத்தாக்குதல் மூலமோ அல்லது தரை மார்க்கமாகவோ இராணுவத்தால் அழிக்கமுடியவில்லை எனவும் புலிகளின் பீரங்கி நிலைகளை அறிவதற்கான ராடர்கள் தற்போதைய போர் முனைகளுக்கு ஏற்புடையவையல்ல எனவும் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

புலிகள் கனரக ஆயுதங்கள் மூலம் சேதம் ஏற்படுத்துவதால் அதனைத் தடுக்கும் ஆற்றலை பெறமுடியாமை இராணுவத்திற்கு ஏற்பட்ட தோல்வியாகும்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### வன்னியில்...

ளனர். போராளிகளுடன் சந்தித்து உரையாடி, அவர்களை உற்சாகப்படுத்திவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பிலும் திலீபனின் நிகழ்வுகள் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்று வருகின்றன. கடந்த ஆண்டுகளில் திலீபனின் நினைவு நாட்களில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியது போன்று இம்முறையும் தாக்குதல் நடாத்தலாம் என்ற அச்சம் படையினர் மத்தியில் பரவலாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் ஆனையிறவில் இருந்து கிளிநொச்சி மற்றும் பூநகரி பகுதிகளை நோக்கி அதிகாலை ஒரு மணியில் இருந்து நான்கு மணிவரை தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. கிழக்குப் பகுதிகளிலும் திலீபனின் நினைவு நாள் தாக்குதல் இடம்பெறலாம் என்ற அச்சம் படையினர் மத்தியில் பரவலாகத் தென்படுவதால் அங்கு சோதனைளும் கெடுபிடிகளும் அதிகரித்துள்ளதாக கிழக்கு செய்திகள் தெரிவிக்கின்றன.

பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்
13வது ஆண்டாக நடாத்தும்

சிறுகதை – கவிதைப் போட்டி

தமிழ் இலக்கிய எழுத்தாளர்களிடமிருந்து தரமான, சிறந்த சிறுகதைகள், கவிதைகள் போட்டிக்காக எதிர்பார்க்கப்படுகின்றன.
முதலாவதாக தேர்ந்தெடுக்கப்படும் சிறுகதைக்கும், கவிதைக்கும் பாரிஸ் தமிழர் கல்வி நிலையத்தினால் தங்கப்பதக்கங்கள் பரிசாக வழங்கப்படும்.

எழுத்தாளர்களின் கவனத்திற்கு

போட்டியின் நெறிமுறைகளுக்கமைய 8X13 (A4) வெள்ளைத்தாளில் எழுதப்பட்டு, 10 பக்கங்களுக்குக் கூடாமல், காலத்தை ஒட்டிய சிறுகதையாக இருத்கவேண்டும். அத்துடன் ஏற்கனவே பிரசுரித்த கதைகள், கவிதைகள், பிறமொழித் தழுவல்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதையும் அறியத் தருகின்றோம். சொந்த ஆக்கங்களே போட்டிக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

தேர்ந்தெடுக்கப்படும் சிறுகதை, கவிதை என்பன பாரிஸ் தமிழர் கல்வி நிலையத்தின் ஆண்டு நிறைவு மலரான "உன்னையே நீ அறிவாய்" மலரில் பிரசுரிக்கப்படும்.

நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதும், முடிவானதுமாகும். ஆக்கங்கள் யாவும் சொந்த முகவரியிட்டு 01.11.99க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

வளர்ந்துவரும் எழுத்தாளர்களே! வளரத்துடிக்கும் எழுத்தாளர்களே!
உங்கள் இலக்கிய ஆற்றலை வெளிப்படுத்துங்கள்.
தங்கப்பதக்கத்தை பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்

ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
P.T.E.C
C/O. Mr. T. Thillainadesan,
15, Avenue du Belair,
94100 Saint Maur des Fosses, FRANCE.
Tel: 01 43 56 17 91
email: assptec@aol.com

Pub இங்ஙனம் மலர்க்குழு

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### தட்சணாமருதமடு...

20ற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

தாக்குதலை முடித்துக் கொண்டு புலிகள் பின்வாங்கியதும் அங்கு வந்த மேலதிக படையினர் காயமடைந்தவர்களை உடனடியாக அவசர சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர். காயப்பட்டவர்களில் மூவரின் நிலை மிகவும் ஆபத்தானதாக இருந்ததால் அவர்கள் கொழும்பிற்கு அனுப்பிவைத்துள்ளது எனவும் இராணுவதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. இத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகளால் படையினரிடம் இருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### பிரெஞ்சு...

போனோர் பாதுகாவலர் சங்க தலைவரையும் உறுப்பினர்களையும் சந்தித்து செம்மணி புதைகுழி தொடர்பாக அவர்களது கருத்துக்களையும் கேட்டறிந்துள்ளார்கள் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் செம்மணி புதைகுழி தோண்டும் நடவடிக்கைகளை சில நாட்கள் தங்கியிருந்து இவர்கள் நேரடியாக பார்வையிட உள்ளனர் எனவும் யாழ்ப்பாண செய்திகள் தெரிவிக்கின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### பரந்தனில்...

யணி நடாத்திய தாக்குதலில் MI-24 உலங்குவானூர்தி ஒன்று பலத்த சேதமடைந்த நிலையில் ஆனையிறவுத் தளத்தில் உடனடியாகத் தரையிறக்கப்பட்டது.

பலத்த இழப்புக்களுடன் படையினர் தொடர்ந்து முன்னேற முடியாது தமது 'அலை வீச்சு' நடவடிக்கையை கைவிட்டு பின்வாங்கினர். இதன்போது படையினரில் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்ற போதிலும், இத் தாக்குதல் பற்றிக் கருத்து தெரிவித்த படைத்தரப்பு, இவ் இராணுவ நடவடிக்கையின்போது தமது தரப்பில் ஒரு படையினன் கொல்லப்பட்டதுடன், ஐந்து பேர் காயமடைந்ததாகவும், தமது படையணி, புலிகளின் பல காவலரண்களை அழித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. அத்துடன் இது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை எனவும் தெரிவித்துள்ளார்.

சில மாதங்களின் முன்னர் இதே பகுதியூடாக பூநகரியில் தரையிறக்கப்பட்ட படையினருடன் இணைவதற்காக 'சூறாவளி' என்னும் படை நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது. புலிகளின் கடும் தாக்குதலால் அந் நடவடிக்கை கைவிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ERRANCES TRAVELS

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

# வடதமிழீழச் செய்திகள்

# முல்லைத்தீவில் விமானக்குண்டுவீச்சு

## ● 22 பொதுமக்கள் பலி ● 40-ற்கு மேற்பட்டோர் காயம்

(19.09.99)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் சிறீலங்கா விமானப்படையின் இரு கிபீர் குண்டுவீச்சு விமானங்கள் கடந்த புதன் அன்று காலை நடாத்திய வெறித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதலில் பாடசாலை மாணவர்கள், பெண்கள் உட்பட 22 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 40-ற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். புதுக்குடியிருப்புச் சந்தைப்பகுதியில் காலை 10 மணியளவில் வீசப்பட்ட இக்குண்டுவீச்சில் 41 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். வீடுகள், கடைகள் பொதுநிறுவனங்கள் என 50ற்கு மேற்பட்ட கட்டடங்கள் பலத்த சேதமடைந்துள்ளன. காலைவேளையில் மக்கள் தமது தேவைகளுக்காகப் புதுக்குடியிருப்புச் சந்தைப்பகுதியில் குழுமி நின்றுள்ளனர். அப்போது திடிரென வானில் தோன்றிய கிபீர் விமானங்கள் தொடர்ச்சியான குண்டுவீச்சினை மேற்கொண்டன. கடைகளில் வீடுகளில் என வீழ்ந்து வெடித்த குண்டுகளில் பலர் கொல்லப்பட்டனர். பலரது தலை துண்டிக்கப்பட்ட நிலையில் கிடந்ததாக தெரிவிக்கப்படுகிறது. கட்டடங்களின் இடிபாடுகளுக்குள் அகப்பட்டு சிலர் பலியானதுடன், பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. கட்டட இடிபாடுகளுக்குள் இன்னும் பல சடலங்கள் இருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களையும் தேடும்பணி இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காயம்பட்டவர்களில் பலர் தீவிர சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் தமது அங்கங்களை இழந்துள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களுக்கான அவசர உதவிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் தொண்டர் நிறுவனங்களும் வழங்கி வருகின்றன.

குண்டுவீச்சு. இடம்பெற்ற பின்னர் அப்பகுதி எங்கும் மனித அவயவங்கள் சிதறிக் கிடந்ததாகவும் அப்பகுதி முழுவதும் இரத்தமயமாகக் காட்சியளித்தாக புதுக்குடியிருப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறீலங்கா அரசின் மிலேச்சத்தனமான இத் தாக்குதலைப் பல சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கண்டித்துள்ளன. முதலில் இத் தாக்குதல் புலிகளின் இராணுவ நிலைகள் மீதே நடாத்தப்பட்டன எனத் தெரிவித்த சிறீலங்கா அரச தரப்பினர் பின்னர் இத் தாக்குதலில் பொதுமக்களும் அகப்பட்டு பலியாகியிருக்கலாம் எனத் தெரிவித்துள்ளனர். இவ் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 22 பொதுமக்களின் பெயர் விபரங்களும், 33 காயப்பட்ட பொதுமக்களின் பெயர் விபரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இதில் கொல்லப்பட்ட 22 பொதுமக்களின் விபரங்கள் கீழே வருகின்றன.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர்களான சங்கரப்பிள்ளை செல்லமாணிக்கம் (70), அந்தோனி தேவராசா திரேசம்மா (50), பாக்கியநாதன் ரீற்றாம்மா (56), அந்தோனியோ கிறிஸ்றியா பொளொரோன்ஸ் (54), ஞானசேகரம் இலட்சுமிப்பிள்ளை (43), சின்னையா யுகபாலசிங்கம் (35), சின்னத்தம்பி தம்பு (55), மந்துவில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த அரியநாயகம் கஜந்தினி (12), அந்தோனிப்பிள்ளை செபமாலைமுத்து (45), தனதாஸ் ஜெனோடி (25), ஆறுமுகம் ஜெயராமன், (50), ஜெயராமன் சந்திரகுமார் (20), ஜெயம் ஜெய்சங்கர் (33), அந்தோனியோ மெல்றோஸ் (29), பத்மராசா ஜெனிதா (15), சவரியன் (50), தேவநாயகம் செவஸ்ரியான் பிள்ளை (52), முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த செல்லையா ஆறுமுகம் (59), கணபதிப்பிள்ளை யோகராசா (36), அலாம் றோஸ் கொன்ஸ்தோசஸ்(20), இராசநாயகம் உதயரூபன்(18), ஆனந்தபுரத்தைச் சேர்ந்த தம்பையா சுப்பிரமணியம் ஆகியோரே ஆவர்.

# கடற்படையினர் மீது கடற்படையினர் ஐந்து மணிநேரத் தாக்குதல் மூன்று படையினர் பலி

(19.09.99)

வடமராட்சி - வெற்றிலைக்கேணிப் பகுதியில் கடலில் இருந்து கரையை நோக்கி வந்த படகொன்றினை நோக்கி கரையிலிருந்த கடற்படையினர் தாக்கியதில் அப் படகில் வந்த மூன்று கடற்படையினர் கொல்லப்பட்டனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு எட்டு மணியளவில் தாளையடி கடற்கரையில் முகாம் அமைக்கப்பட்டிருந்த பகுதியை நோக்கி ஒரு படகு வேகமாக வந்துள்ளது. இதனை அவதானித்த படையினர் உடனடியாக அப் படகுடன் தொடர்புகொள்ள முயற்சித்துள்ளனர். எனினும் பதில் கிடைக்கவில்லை. இதனால் விடுதலைப்புலிகளின் கரும்புலிப் படகுதான் வந்துகொண்டிருக்கிறது எனக்கருதி படகின் மீது தாக்குதலைத் தொடுத்துள்ளனர். இரவு எட்டு மணியிலிருந்து அதிகாலை ஒரு மணி வரை சுமார் ஐந்து மணித்தியாலங்களாக அப் படகு கரையை நெருங்கிவர முடியாதவாறு துப்பாக்கிச் சூடும், எறிகணைத் தாக்குதலும் நடாத்தப்பட்டுள்ளது. விடிந்த பின்னர் அப் படகு தானாகவே கரையொதுங்கியபோது அதனைச் சுற்றிவளைத்துப் படையினர் ஆராய்ந்தபோது தான், அது தமது முகாமைச் சேர்ந்த படையினரின் படகு என்பதையும் அவர்கள் தொலைத் தொடர்புக் கருவி எதையும் கொண்டு செல்லவில்லை என்பதையும் அறிந்துள்ளனர். அப் படகில் கடற்படையைச் சேர்ந்த மூன்று படையினர் பலத்த காயங்களுடன் இறந்தநிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

# கெற்பிலியில் எலும்புக்கூடு மூடிவிட்டுச் செல்லுமாறு படையினர் உத்தரவு

(19.09.99)

யாழ். சாவகச்சேரி கச்சாய் பகுதியில் பிட்டியாக இருந்த மண்ணை வெட்டியள்ளிச் செல்லமுனைந்த பொதுமக்கள் சிலர் அம் மண்ணை வெட்டியள்ளும்போது எலும்புக்கூடு ஒன்றைக் கண்டுள்ளனர். இது பற்றி உடனடியாக அருகில் இருந்த சிறீலங்கா இராணுவ முகாமில் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவற்றைக் கேட்ட சிறீலங்காப் படையினர் அவர்களை விசாரித்துவிட்டு அம்மண்ணை மூடிவிட்டு வேறு பகுதியில் மண்ணை அள்ளிச் செல்லுமாறு உத்தரவிட்டதுடன், இது பற்றி வெளியில் எங்கும் சொல்லவேண்டாம் எனவும், இவைபற்றி எங்கும் முறைப்பாடும் செய்யவேண்டாம், முறைப்பாடு செய்யப்பட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்து அனுப்பியுள்ளனர். படையினர் தமது விபரங்களைப் பதிந்து வைத்திருப்பதால் இவ் எலும்புக்கூடு பற்றிய தகவலை அவர்கள் முறைப்பாடு செய்யமுடியாது உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் இச் செய்தி எப்படியோ பல வழிகளிலும் பரவி விட்டதால் படையினர் தம்மீது சந்தேகம்கொண்டு தம்மைக் கைது செய்து சித்திரவதைக்கு உட்படுத்தலாம் என இம் மண்ணகழ்வில் ஈடுபட்டவர்கள் அச்சம் கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### ஈழமுரசில் வெகுவிரைவில்....
### உலக வரலாற்றில் பதிவானவர்கள்

கடந்த 20 நூற்றாண்டுகளில் உலக வரலாற்றில் தங்கள் செயற்பாடுகளின் மூலம் ஒரு பதிவினை ஏற்படுத்திச் சென்றவர்களை, மனித வரலாற்றுப்போக்கில் பல மாறுதல்களை ஏற்படுத்திய பல்வேறு மனித முகங்களை உங்கள் முன் ஈழமுரசு தொடராகத் தருகின்றது. நூற்றுக்கணக்கான இவ் வரலாற்றுப் பதிவாளர்களை வாரம் ஒருவராக பதிவு செய்கின்றது ஈழமுரசு.

ஆ-ர்

# அரியாலை கோவில் புதைகுழிகளில் 4 எலும்புக்கூடுகள் மீட்பு

(19.09.99)

அரியாலை கிழக்கு கொட்டுக்கிணற்றடிப் பிள்ளையார் ஆலயத்தின் வளவினுள்ளும் ஆலயக் கேணியிலும் புதைகுழிகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவை கடந்த வியாழனன்று (16.09.99) தோண்டப்பட்டபோது, மூன்று எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. 11வது நாளாக செம்மணி புதைகுழி தோண்டப்பட்டபோதே 3 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. தோண்டப்பட்ட கேணிக்குள் மேலும் எலும்புக் கூடுகள் இருக்கலாம் எனத் தெரிவித்ததை அடுத்து, மறுநாள் வெள்ளிக்கிழமை அக் கேணி மேலும் தோண்டப்பட்டது எனினும் உடல்கள் எதுவும் காணமுடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரியாலையின் பிறிதொரு பகுதியில் தோண்டப்பட்டபோது தென்னைமரத்திற்கு அருகில் புதைக்கப்பட்டிருந்த உடலொன்றும் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட நான்கு எலும்புக் கூடுகளில் இரண்டு எலும்புக் கூடுகளின் இரு முழங்கால் சிரட்டைகளும் பாரிய ஆயுதங்களால் தாக்கி நொருக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பலமான சித்திரவதையின் மூலமே கொல்லப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொட்டுக்கிணறு பிள்ளையார் கோவில் கேணியில் குழி தோண்டும் போது நீர் நிரம்பிவிடுவதால் தோண்டும்பணி பெரும் சிரமமாக இருப்பதாகவும் எனினும் எலும்புக்கூடுகள் இருப்பதற்கான அடையாளம் தெரிவதால் நீர் இறைக்கப்பட்டு தொடர்ந்தும் தோண்டப்பட உள்ளதாக இப் பணியில் ஈடபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை வரை மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளுடன் இதுவரை செம்மணி பகுதியில் இருந்து 15 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

## இது குசும்புங்கோ...!

★ சிங்கள மக்கள் ஐக்கியப்படாதுபோனால், வடக்கு முழுவதும் தமிழர் கைக்குப் போய்விடும், கிழக்குப் பகுதி முழுவதும் முஸ்லீம்களின் கைக்குப் போய்விடும், மலைநாடு தொண்டமானின் தோட்டத்தொழிலாளர் கைக்குப் போய்விடும். இந் நிலைமை நீடித்தால் சிங்கள மக்களுக்கு என்ன மிஞ்சப்போகிறது.

*- பௌத்த பிக்குவான மகாநாயக்க தேரோ*

★★★

★ சிறுபான்மை இனமாகிய தமிழர்கள் எமது இனத்தையும் கலாச்சாரத்தையும் அழித்துக் கொண்டிருக்கிறார்கள்

*- சிங்கள இனவாத அமைப்பான வீரவிதான*

★★★

★ புலிகளின் இராணுவ இலக்குகள் மீதே எமது விமானப் படை தாக்குதல்களை மேற்கொண்டது. இதன்போது சில வேளைகளில் பொதுமக்களும் அகப்பட்டிருக்கலாம். இதற்கு நாம் பொறுப்பில்லை.

*- புதுக்குடியிருப்பு விமானத் தாக்குதல் தொடர்பாக சிறீலங்கா ஜனாதிபதி.*

★★★

# தென்தமிழீழச் செய்திகள்

## சத்துருக்கொண்டான் படுகொலையை நினைவுகூரியதால் படையினர் புதிய கட்டளை

(19.09.99)

மட்டு. சத்துருக்கொண்டான் படுகொலையின் 9ஆம் ஆண்டினை மக்கள் நினைவுகூரியதைத் தொடர்ந்து சத்துருக்கொண்டானில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் புதிய கட்டளை ஒன்றினை பிறப்பித்துள்ளனர். அக் கட்டளையின்படி அப் பகுதி மக்கள் மாலை 7 மணிக்குப் பின்னர் வீட்டிற்கு வெளியே எக்காரணம் கொண்டும் நடமாடக் கூடாது என அறிவித்துள்ளனர். மாலை ஏழு மணிக்குப் பின்னர் வெளியில் செல்வோர் கைதுசெய்யப்படுவார்கள் எனவும் படையினரால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் இப் புதிய அறிவிப்பினால் தூர இடங்களுக்குத் தொழிலுக்குச் சென்று திரும்பும் மக்கள் பெரும் நெருக்கடிக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சத்துருக்கொண்டான் படுகொலையை நினைவுகூரியதே படையினரின் இப் புதிய உத்தரவிற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## திலீபனின் 12வது நினைவெழுச்சி

(09.09.99)

லெப்.கேணல் திலீபனின் 12ம் ஆண்டு நினைவெழுச்சி நிகழ்வுகள் மட்டக்களப்பில் எழுச்சிபூர்வமாக நினைவுகூரப் பட்டுவருகிறது. மட்டக்களப்பில் சிறீலங்கா இராணுவத்திடம் இருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளில் கடந்த, வியாழக்கிழமையில் இருந்து நினைவெழுச்சி நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன. வீதிகள் அலங்கரிக்கப்பட்டு சந்திகளில் திலீபனின் நிழற்படங்கள் வைத்து மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தி வருகின்றனர். எதிர்வரும் 26-ம் திகதி தியாகி திலீபன் உயிர்நீத்த நாள் வரை பல்வேறு கலை நிகழ்வுகளும், பேச்சுக்களும், அடையாள உண்ணாவிரதங்களும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச் சோலையில் எதிர்வரும் 26ம் திகதி விசேட கூட்டங்களும் கலைநிகழ்வுகளும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளன. இந் நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் பல முக்கிய உறுப்பினர்கள் உரையாற்ற உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பில் திலீபனின் நினைவுநாள் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து படையினர் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தீவிர பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. திலீபனின் நினைவு தினங்களில் புலிகள் கடந்த காலங்களில் பல தாக்குதல்களை நடாத்தியதுபோல் இம்முறையும் தாக்குதலை மேற்கொள்ளலாம் என்ற அச்சம் படையினர் மத்தியில் அதிகரித்துள்ளதாகவும் மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஒரே நேரத்தில் கிழக்கில் இரு தாக்குதல்கள்

(17.09.99)

சிறீலங்கா படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு கதிரவெளி பகுதியில் ரோந்து சென்ற இராணுவ அணி மீது கடந்த செவ்வாய் மாலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடாத்தினர். இதன்போது ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதுடன், ஒருவர் படுகாயமடைந்தனர். தாக்குதலை அடுத்து முகாமிற்குத் தப்பியோடிய படையினர் தலைமை முகாமான வாகரை படை முகாமிற்கு அறிவிக்க, அங்கிருந்து கதிரவெளியில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் வராத பிரதேசங்களை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

கதிரவெளியில் தாக்குதல் நடாத்தப்பட்ட அதேவேளை அம்பாறைப் பகுதியில் மகா ஓயா என்னும் இடத்தில் மாலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில், சிறீலங்கா ஊர்காவல் படையை சேர்ந்த இருவரும், தொண்டர் படையைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட படையினரிடம் இருந்த ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிச் சென்றுவிட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இத் தாக்குதலின் பின்னர் அவ்விடத்திற்கு வந்த படையினர் நடாத்திய தாக்குதலில் பொதுமகன் ஒருவரும் கொல்லப்பட்டார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வவுணதீவில் பீரங்கித் தாக்குதல்

(19.09.99)

மட்டு. வவுணதிவு இராணுவ முகாமிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை நோக்கி சிறீலங்கா இராணுவத்தினர் பீரங்கி, மற்றும் ஆர்.பீ.ஜி எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர். கடந்த வியாழன் காலை ஆறுமணியளவில் படையினர் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து விடுதலைப்புலிகளின் பீரங்கிப் படையினரும் பதில் தாக்குதலை நடாத்தியுள்ளனர். புலிகள் நடாத்திய தாக்குதல்களின் போது குண்டுகள் வவுணதீவு இராணுவ முகாமிலும், வெபர் முகாமினுள்ளும் வீழ்ந்து வெடித்துள்ளன. இதன்போது தமது தரப்பில் ஒரு படையினர் காயமடைந்ததாக இராணுவ தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் இதன்போது படையினரின் பல கட்டடங்களும் சேதமடைந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அம்பாறையில் வீரவிதான துண்டுப்பிரசுரம்
### குறிப்பிட்ட நாட்களுக்குள் தமிழர்கள் வெளியேற வேண்டும்

(19.09.99)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழர்கள் மற்றும் முஸ்லீம் மக்களை திகாமடுல்ல பகுதியை விட்டு வெளியேறுமாறு சிங்கள இனவிரோத அமைப்பான வீரவிதான துண்டுப்பிரசுரம் மூலம் தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட நாட்களுக்குள் அப்பகுதியைவிட்டு மக்களை வெளியேறுமாறு எச்சரிக்கப்பட்டுள்ளதுடன், சிறுபான்மை இனமாகிய தமிழர்கள் தமது இனத்தை, கலாச்சாரத்தை அழித்துக் கொண்டிருப்பதாகவும் அத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவித்துள்ளனர்.

இத் துண்டுப்பிரசுரம் அப்பகுதி மக்களுக்குப் பரவலாக விநியோகிக்கப்பட்டு வருவதுடன் அம் மக்கள் அவர்களால் எச்சரிக்கப்பட்டும் வருகின்றனர். இதேவேளை மக்களை வெளியேறுமாறு கோரும் பதாகைகள் வீதிகள் தோறும் இவர்களால் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## படசாலை மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மாணவன் படுகாயம்

(19.09.99)

மட்டு. வாழச்சேனை சுங்காங்கேணிப் பகுதியில் படையினர் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மாணவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். வாழச்சேனை பொலிஸ் நிலையத்தில் இருந்து சுங்காங்கேணி நோக்கி கடந்த புதன்கிழமை காலை 10 மணியளவில் ரோந்து சென்ற படையினர், பாடசாலையடியில் வந்ததும் பாடசாலையின் வகுப்பறைகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் நடாத்தியுள்ளனர். இதன்போது சுங்காங்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 3ம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த எஸ். ருஷாந்தன் (8) என்ற மாணவன் வயிற்றில் சூடுபட்டு படுகாயமடைந்த நிலையில் வாழச்சேனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு இயலாது என்ற நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

## மாஞ்சோலையில் தாக்குதல் இரு பொலிசார் பலி

(18.09.99)

திருமலை – கிண்ணியா பிரதேசத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 12.30 மணியளவில் விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் இரு சிறீலங்கா பொலீஸார் கொல்லப்பட்டனர். மாஞ்சோலைச் சேனைப் பகுதியில் குட்டிக்கரைச்சியிலிருந்து தேணா நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொலிசாரின் வாகனத்தின் மீதே விடுதலைப் புலிகள் இத் திடீர்த் தாக்குதலை நடத்தியுள்ளனர், தாக்குதல் நடைபெற்றபோது அவ் வாகனத்தில் பொலிஸ் அதிகாரி உட்பட ஐந்து பொலிசார் பயணம் செய்துள்ளனர். தாக்குதல் இடம்பெற்றதும் கொல்லப்பட்டவர்களையும் பயணம்செய்த வாகனத்தையும் அவ்விடத்திலேயே விட்டுவிட்டு ஏனைய பொலிசார் தப்பியோடியுள்ளனர்.

இதேவேளை மாஞ்சோலைச் சேனைப் பகுதியில் மின்மாற்றி ஒன்றும் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இச் சம்பவங்களை அடுத்து இப்பகுதிகளுக்குள் விடுதலைப்புலிகள் அதிகளவில் ஊடுருவியுள்ளார்கள் எனத் தெரிவித்து இப் பகுதிகள் பொலிசாரினாலும், படையினராலும் தீவிர சுற்றிவளைப்பிற்கும் தேடுதல்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளன.

## கடற்படை பீரங்கிப்படகுகள் தாக்குதல் இரு பொதுமக்கள் படுகாயம்

(19.09.99)

திருமலை. மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள சம்பூர் கிராமத்தை நோக்கி சிறீலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் படுகாயமடைந்துள்ளனர். கடந்த புதனன்று இரவு 9 மணியளவில் படையினர் தாக்குதலை மேற்கொண்டதாகவும். தொடர்ச்சியாக அரைமணி நேரமாகத் தாக்குதலை நடாத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன்போது சம்பூர் 7ம் வட்டாரத்தைச் சேர்ந்த வேலாயுதம் கனகரத்தினம் (48), விமலாதேவி (45) ஆகிய இருவரும் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஜேர்மனி பொன் (Bonn) நகரில்

யாழ் ரவல்ஸ்

YARL TRAVELS

Thomas Mann Str 21,53111 Bonn

உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்

பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்

சிறீலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா

ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.

தொலைபேசி இலக்கம்: 0228/9652885 – தொலைநகல்: 0228/9652985

GE-Pub.

# பெரிய மடுவில் கண்ட தோல்வி – கொழும்பின் கதறல்

## மிகச்சிறந்த படைப்பிரிவின் தோல்வி

ரணகோசா 5 பள்ளமடு தடையை உடைத்து தரைமட்டமாக்க ஆரம்பிக்கப்பட்டது.

புலிகள் இதனை எதிர்பார்த்து காத்திருந்தனர்.

12 செப்.99 சண்டையின் ஆரம்ப நாளாக இருக்க வேண்டியது. ஆனால் அதுவே முடிவு நாளாகவும் அமைந்துவிட்டது.

மிகப்பாரிய அளவிலான பீரங்கி குண்டுவீச்சுக்களுடனும், எறிகணைத் தாக்குதலுடனும் நடவடிக்கை அதிகாலை ஆரம்பமாகியது. பொழுது புலரத் தொடங்கும் போது கிபீர் ஜெட்டுக்களும் மி24 ரக உலங்குவானூர்திகளும் உள்நுழைந்தன. புலிகளின் நிலைகளை 250 கிலோ கிராம் குண்டுகளாலும் ஏவுகணைகளாலும் இயந்திரத் துப்பாக்கிகளாலும் அவை தாக்கின.

இதன் பின் இராணுவத்தின் தலைசிறந்த பிரிவுகளான 53ம், 55ம் பிரிவுகள் பெரியமடு நோக்கி இரு முனைகளில் நகரத் தொடங்கின. பெரியமடு பல காட்டு வீதிகளின் சந்தியாகும். ஆனால் அவர்கள் புலிகளின் குறி தப்பாத எறிகணை மழைக்குள் நடந்து சென்றனர்.,சில மணிநேரங்களில் ஐம்பதிற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர், பல நூறு படையினர் காயப்பட்டனர். அனைத்துப் படையினரும் காயப்பட்டதாகச் சொல்லலாம்.

மதியமளவில் மீளப் பின்வாங்குமாறு இராணுவத்திற்கு உத்தரவிடப்பட்டது. இதே வேளையில் 15 துருப்பினர் கொண்ட ஒரு குழு புலிகளினால் சுற்றி வளைக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

ரணகோசா 5 முற்றுபெற்றது.

***- The sunday island 19th Sept. 1999***

★ ★ ★

## 'ரணகோச 5' கொழும்பில் போடப்பட்ட திட்டம்

கடந்தவாரம் பெரியமடுவில் மண்கவ்வியதை அடுத்து முல்லைத்தீவில் மக்கள் நிறைந்த சந்தை மீது குண்டுவீசி கேவலப்பட்டுக் கொண்டது சிறீலங்கா அரசு.

இவ் வருடத்தில் இராணுவத்தின் மோசமான தோல்வியாக பெரியமடு அமைந்துள்ளது. நூற்றிற்கும் மேற்பட்டவர்களைப் பலி கொடுத்தும், 700 பேருக்கும் மேற்பட்டவர்களை, 'காயங்கள் 1, 2, 3' என வகைப்படுத்தியும் அரச வைத்தியசாலைகளை நிரப்பியும் உள்ளது.

ரணகோசா 5 கொழும்பில் இராணுவத் திட்டமிடலாளர்கள் எனக் கூறப்படுபவர்களால் பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் தயாரிக்கப்பட்டது. அதற்கு தனது எல்லைத் திககிகளால், தலைப்புச் செய்திகளைப் பிடிக்கும் ரத்வத்தை தலைமை தாங்கினார்.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சிறீலால் வீரசூரியா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிசில் திஸரா, விமானப்படைத் தளபதி ஜெயலத் ஜெயக்கொடி, இராணுவ பிரதான அதிகாரி மேஜர் ஜெனரல் பலகெல்ல மற்றும் பல உயரதிகாரிகள் இவ் அதிசக்தி மிக்க. பாதுகாப்புச் சபை கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

அவர்கள் இக் கூட்டத்தில் ரணகோசா 5 நடாத்தப்படுவது சற்று கடினமானது எனத் தெரிவித்தனர். இராணுவத் தளபதியை லால் எனக் கூப்பிடும் ரத்வத்தை மறுத்தார். உங்களால் நடவடிக்கை ஆரம்பிக்கப்படாவிட்டால், அது ஆரம்பிக்கப்படுவதை நான் உறுதிப்படுத்துவேன் என அவர் கூறினார். சிறீலால் வீர சூரியா அமைதிகாத்து அமைச்சரை கதைக்க விட்டார். இதன் முடிவில் ஞாயிறு காலை நடவடிக்கை ஆரம்பமாகும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

***- Sunday leader 19th Sept. 1999***

★ ★ ★

## தொலைந்த 5 படையினரும் உயர்தர தொலைத்தொடர்புக் கருவியும்

நடக்கப்போவது பற்றி எப்போதும் இராணுவ உளவுத்துறை சரியான தகவல்களைத் தருவதில்லை. ஆனால் இந்தத் தடவை அவர்கள் கிட்டத்தட்ட சரியான தகவல்களைத் தந்தனர்.

மன்னாரில் விடத்தல் தீவு பாலமோட்டை பகுதியில் இராணுவ முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு புலிகள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர். செல்வராசா தலைமையில் சுமார் 150 புலிகளைக் கொண்ட அணி ஒன்று பாலக்காய் முனை ஊடாக மன்னாரில் தாக்குதல்கள் நடாத்த ஊடுருவியுள்ளனர். இராணுவ நிலைக்ள் மீது பாப்பாமோட்டை விடத்தல்தீவு ஊடாக அவர்கள் தாக்குதல் நடாத்தப்படக் கூடும்.

இவ் எச்சரிக்கை ஒரு மாதம் பழைமையானது. எதுவித தாக்குதல்களும் இடம்பெறவில்லை. ஆனாலும் இராணுவ உளவுத்துறை புலிகள் இராணுவத்தை தடுக்கும் திடசங்கற்பத்தைக் கொண்டுள்ளனர் என்ற தகவலை உறுதியாக நிரூபித்துள்ளது.

....அவை (புலிகளின் எறிகணைகள்) கடும் மழை போல பொழிந்தன என 53வது படையில் சண்டையில் ஈடுபட்ட இளம் கப்டன் ஒருவர் குறிப்பிட்டார். அது மிகத் தீவிரமானது. தம்மைப் பாதுகாத்துக் கொள்ள படையினர் கலைந்து ஓடினர். அவர்கள் வீழ்ந்த மோட்டார்களால் தாக்கப்பட்டனர் என தன்னை இனம் காட்ட விரும்பாத கப்டன் கூறினார்.

இக் குழப்பத்தில் முன்னேறிய படையணியொன்று ஒரு கொகூர் தொலைத்தொடர்பு கருவியொன்றை கீழேவிட்டுவிட்டது. ஒரு வீரமுள்ள இராணுவக் கப்டன் அவ் வெகுமதியான தொலைத் தொடர்புக் கருவி எதிரியின் (புலிகளின்) கைகளில் விழாமல் தடுக்க முயன்றார். இக் கருவி மூலம் இடைமறித்துக் கேட்க முடியாத தொலைதூர சம்பாசணைகளை எதிரிகளால் கேட்கமுடியும். 4 படையினர் முன்னேறி பாதுகாப்புக் கொடுக்க முனைந்தனர். அவர்கள் கடுமையாகச் சண்டையிட்டனர். ஆனால் அவர்கள் தமது படையினரிடம் இருந்து பிரிக்கப்பட்டனர். அந்த தொலைத் தொடர்புக் கருவி இழக்கப்பட்டுவிட்டது. இதற்கு என்ன நடந்தது எனத் தெரியாது. அந்த 5 படையினரும் தொலைந்துவிட்டனர் என அழைக்கப்படுகின்றனர்.

***- The Sunday times 19th Sept. 1999***

★ ★ ★


உங்கள் தலைமுடி உதிர்கின்றதா?
கவலை வேண்டாம்
இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு

தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!

இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

**இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.**

**Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.**

இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.

எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்க்ளையும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது Naturina® தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules. Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.

***இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!***






**எமது ஸ்தாபனத்தின் தயாரிப்புக்களை உபயோகித்து பலன் பெற்றோர் கூறுவதைக்கேட்டு நீங்களும் பயன்பெறுங்கள்.**

**சுவிற்சலாந்திலிருந்து: திரு. ராஜன்.**
*நான் இந்த Naturina® தயாரிப்புக்களைக் கடந்த 3 மாதங்களாகப் பாவித்து குறுகிய காலத்தில் எனது தலைமயிர் உதிர்வைக் குறைத்துக்கொண்டேன்.*

**டென்மார்க்கிலிருந்து: திருமதி துரைராஜா.**
*நான் Naturina® மாத்திரைகளைப் பயன்படுத்தி எனது தோல் பிரச்சினைகளையும் நக அழகையும் பேணிக்கொண்டுள்ளேன்.*

**இங்கிலாந்திலிருந்து: திருமதி ரேணுகாதேவி.**
*இந்த Naturina® தயாரிப்புக்களைப் பற்றி பத்திரிகையில் படித்தபோதும் அதன் பிரதி பலன்களை நான் முழுமையாக நம்பவில்லை. இருந்தும் இவற்றை பயன்படுத்தியதில் முழுப் பலனையும் அடைந்துள்ளேன்.*

மேலதிக விபரங்களுக்கு:
**Intercare Handels GmbH**
Munster str 5, 59065 Hamm-Germany
**Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349** (நாம் தமிழும் கதைப்போம்)
**Internet: http://www.intercare-naturina.com**

பிரித்தானிய தொடர்புகளுக்கு:
Naturina® Uk LTD London
**Tel: 0171-5150550**
**Mobil: 07930-471356**

# பள்ளமடுவின் இராணுவ அதிசயங்களும் முன்களமாகும் பின்தளங்களும்

**கொழும்பு ஆய்வாளர் தராகியின் கட்டுரையைத் தழுவி**

'ரணகோஷா-V' இன் இலக்கு மீண்டும் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது. முன்னேறுவதும் பின்வாங்குவதும் மீண்டும் முன்னேறி பின்நோக்கி ஓடுவதுமாக தொடர்கிறதே தவிர, அதன் உரிய இலட்சியத்தை அடைய முடியவில்லை. இராணுவம் தற்போது நிலைகொண்டுள்ள பிரதேசத்தில் இருந்து கிழக்காகவும் மேற்காகவும் ஒரு சில கிலோ மீற்றர் தூரத்திலேயே பள்ளமடுச் சந்தி அமைந்துள்ளது. இதனை விடத்தல்தீவுச் சந்தி என்றுதான் அழைக்கிறார்கள். இப் பிராந்தியத்தின் உட்புற வீதிகளை இராணுவம் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டுள்ளது. வவுனியாவின் வடக்கில் இருந்து செல்லும் A-9 பிரதான வீதியில் தாண்டிக்குளத்தில் இருந்து பிரியும் ஓர் வீதியும் இதற்குள் அடங்குகிறது. மேலும் சுற்றுப்புறத்தில் மன்னார் பூநகரி வீதியை பள்ளமடு சந்தியுடன் இணைக்கும் வீதி கூட இரணை இலுப்பைக்குள சந்தியூடாக பாலம்பிட்டி வழியாக வருகிறது. இராணுவம் இப் பாதையையும் பெரியமடு கிராமம் மற்றும் அதன் சுற்றுப்புறங்கள் போன்றவற்றை அண்மையில் கைப்பற்றி இருந்தது.

இது நடந்தது சந்திக்கு வெகு தூரத்திலும் அல்ல, பள்ளமடு சந்திக்கு தெற்காக உள்ள நிலம் சமதரையையும் வறண்ட பகுதிகளையும் கொண்டதாகும். மற்றும் சனநெருக்கடியற்றதும் வெட்டவெளிகளையும் கொண்ட ஓர் பகுதி என்றும் இதைக் கூறலாம். மிக நீண்ட தூரத்தையும் இலகுவாக பார்த்தறியக் கூடிய ஓர் தன்மையைக்கொண்டது இப் பகுதி. ஜெயசிக்குறுய் இராணுவம் வவுனியாவின் வடக்கே அடர்ந்த காட்டுப் பகுதிகளுக்குள் பெரும் இழப்புக்களை எதிர்கொண்டது இச் சந்தியில் இருந்து வெகுதூரத்தில் அல்ல. இராணுவம் நாயாற்றுவெளி மற்றும் சற்று முன்நோக்கி நெடுவாம்பு போன்ற பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறது. மேலும் இச் சந்திக்குச் சூழ உள்ள பிரதேசம் விமானப்படை, எறிகணைகளின் உதவியுடன் பீரங்கிகள் சகிதம் முன்னேற மிகவும் சாதகமான ஓர் பகுதியாகும். (பாலைவன பாதுகாப்பு நிலைகளுக்குள் இருந்த ஈராக்கிய படைகளை நினைவு கூரலாம்).

ஞாயிறு காலை இராணுவம் முன்னோக்கி நகர்வதற்கு உதவியாக விடுதலைப் புலிகளின் ரணகோஷா பாதுகாப்பு நிலைகள் நோக்கி எறிகணைகளாலும் 50 T-56 (45 இரண்டாவது வகை) மற்றும் எட்டு ஆர்.பி.ஜீகள், ஒரு பி.கே.எல்.எம்.ஜி, 5550 தோட்டா சுற்றுக்கள் மற்றும் ஆர்.பி.ஜி எறிகணைகள், கிளைமோர் கண்ணிகள் போன்றவற்றை ரணகோஷா-V படையினரிடம் இருந்து கைப்பற்றியிருந்தனர் எனக்கூறினர். மேலும் விடுதலைப் புலிகளின் தகவல்கள் படி இச் சண்டையின் போது தாம், 23 இராணுறப்படுத்தப்பட்டன. நாம் ஏற்கனவே அப் பகுதியின் நிலம் இராணுவத்திற்கு வசதியானதென்றும் நீண்ட தூர கண்காணிப்பை கொண்டுள்ளதென்றும் மற்றும் பள்ளமடு சந்தியில் உள்ள விடுதலைப்புலிகளின் நிலைகள் மூன்று முனைகளாலும் சுற்றிவளைக்கப்பட்ட நிலையிலேயே இருந்தன என்று கூறியிருந்தோம்.

53வது படைப்பிரிவின் விசேட எல்லாமே அதி உயர் பாதுகாப்பு வலையத்திற்குள் அமைந்துள்ளன. அதுவும் ஒரே ஞாயிறு இரவில் நடந்துள்ளன.

அத்துடன் வவுனியாவில் விடுதலைப் புலிகள் விசேட அதிரடிப்படையினர் மீதும், இராணுவத்தினர் மீதும் கிளைமோர் குண்டுகள் கொண்டும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். பள்ளமடுச் சந்தியையும் விடத்தல்

## அமெரிக்க சிறப்பு பயிற்சிபெற்ற இராணுவத்தளபதி வழிநடத்தியும் 10மணிநேரத்தில் 800 படையினரை காயப்படுத்த புலிகளால் எப்படி சாத்தியமானது?

மோட்டார்களாலும் தள்ளாடி முகாம் இராணுவத்தினர் பெரும் தாக்குதலை நடாத்தினர். அத்துடன் இப் பகுதிகளில் இருந்த விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது சிறீலங்காவின் விமானப் படை விமானங்களும் தாக்குதல்களை இடைவிடாது மேற்கொண்டன. இவ் இராணுவ நடவடிக்கையின் பூரண கட்டுப்பாடானது மேஜர் ஜெனரல் வசந்த பெரேராவின் கைகளிலேயே ஒப்படைக்கப்பட்டது. அண்மையில் இவர் அமெரிக்காவில் இராணுவ மேற்கல்வியைக் கற்று திரும்பியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அமெரிக்க இராணுவம் போர் நடவடிக்கைகளில் கையாளவேண்டிய தந்திரங்களையும் நகர்வுகளையும் பற்றிய பயிற்சிகளை வழங்குவதில் மிக ஆர்வம் கொண்டுள்ளமை அறிந்ததே. ஆகையால், விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதில் மேஜர் ஜெனரெல் வசந்த பெரேரா சரியானவர்தான் என்பது உறுதியானது.

இராணுவத்தின் 55வது படைப் பிரிவும், 53வது படைப் பிரிவின் விசேட எலைட் அணிகளும் பெரியமடு, (இப்பகுதி சந்தியில் இருந்து தென்கிழக்காய் அமைந்துள்ளது) பள்ளமடு, சீராட்டிக்குளம் போன்ற பகுதிகளில் இருந்து ஞாயிறு காலை முன்னேறத் தொடங்கின. இம் முன்னேறும் அணிகளை விடுதலைப்புலிகள் எதிர்கொண்டனர். காலை 6 மணிக்கு உக்கிரமான யுத்தம் மூண்டது. மாலை 4 மணி வரை அதாவது பத்து மணி நேரங்களாக இப் பிரதேசம் பெரும் யுத்தகளமாக மாறியிருந்தது. வவுனியாவின் நம்பகரமான தகவல்கள் விடுதலைப் புலிகள் வத்தின் உடல்களை கைப்பற்றியதாகக் கூறின. அவற்றில் நல்ல நிலையில் இருந்த 15 உடல்களைக் கடந்த செவ்வாயன்று சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் மூலம் இராணுவத்திடம் ஒப்படைத்தனர்.

நம்பகமான தகவல்களின்படி ரணகோஷா-5ல் 108 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் 700ற்கும் மேற்பட்ட படையினர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். (அநுராதபுரம், கொழும்பு வைத்தியசாலை வட்

**நம்பகமான தகவல்களின்படி ரணகோஷா-5ல் 108 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் 700ற்கும் மேற்பட்ட படையினர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். (அநுராதபுரம், கொழும்பு வைத்தியசாலை வட்டாரங்கள் இத் தொகையை மேலும் அதிகரித்தே கூறுகின்றன) எப்படி ஓர் முழுப் பட்டாலியன் படையணியும் மற்றையதின் அரைவாசிக்கும் மேற்பட்டதும் ஓர் பத்துமணிநேர யுத்தத்தில் களத்தில் இருந்து தாக்கி அப்புறப்படுத்தப்பட்டன.**

டாரங்கள் இத் தொகையை மேலும் அதிகரித்தே கூறுகின்றன) எப்படி ஓர் முழுப் பட்டாலியன் படையணியும் மற்றையதின் அரைவாசிக்கும் மேற்பட்டதும் ஓர் பத்துமணிநேர யுத்தத்தில் களத்தில் இருந்து தாக்கி அப்பு படைப் பிரிவுகள் அமெரிக்க எலைட் கொமாண்டோக்களால் பயிற்றுவிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இவ் அணிகளே ரணகோஷா-5ல் பள்ளமடு பகுதியில் நிலை கொண்டுள்ளன.

நடந்துமுடிந்த இந்தப் பெரும் இழப்பிற்கு என்ன பதில். ஒன்று 'ரணகோஷ V' இன் மூலம் பெரும் குறிக்கோள்களை அடைய வேண்டும். மற்றயது விடுதலைப் புலிகளின் வன்னிக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இரண்டு அல்லது அதற்கு மேலான முனைகளில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இங்குதான் இராணுவம் பிரச்சினைகளை எதிர்நோக்கும். யுத்த களத்தில் இன்று மிகவும் பரந்து கால் பதித்துள்ள நிலையில் இராணுவ தலைமை ஒன்றுக்கு மேற்பட்ட யுத்த நகர்வை விசேட கொமான்டோக்கள். விமான உதவி, கனரக ஆயுதங்கள் போன்றவற்றுடன் மேற்கொள்வதில் உள்ள சிரமங்களை எதிர்கொள்கிறது.

வன்னியின் வடக்குக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைப் பிரிக்கும் முன்னணிப் பாதுகாப்பு வலையத்துக்கும் பின் தளத்துக்கும் இடையேயுள்ள தூரம் நீண்டு போய் உள்ளது.. ஆனால் இராணுவத்தின் மிக முக்கியமான இந்த பின் தளங்களில் எல்லாம் விடுதலைப்புலிகளும் சாதாரணமாக நடமாடுகின்றனர். இங்கு வவுனியாவையும் அதன் சுற்றுப் பிராந்தியங்களையும் குறிப்பிடலாம். கடந்த திங்களன்று இப் பகுதியில் மூன்று மின் மாற்றிகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன. வவுனியா படைத் தலைமையகத்தின் முன்பாக அமைந்துள்ள போக்குவரத்துச் சபை டிப்போ மீது தாக்குதலை விடுதலைப்புலிகள் நடத்தினர். தீவையும் கைப்பற்றி மன்னார் தீவின் பாதுகாப்பை உறுதி செய்வதே ரணகோஷா இராணுவத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக உள்ளது. விடத்தல் தீவுக்கு ஊடாக வரும் விடுதலைப்புலிகள் மன்னார் தீவின் ஸ்திர நிலையை குலைத்துவிடுவார்கள் என இராணுவம் நம்புகிறது. வவுனியாவின் இன்றைய நிலைபோல் விடுதலைப் புலிகளுக்கு மன்னார் தீவுக்குள் வருவதற்கு நூறு வழிகள் உள்ளன.

தற்போது இராணுவச் சமநிலையைத் தோற்றுவிப்பதில் விடுதலைப் புலிகளின் நகர்வுகள் வன்னியில் நிரூபிக்கப்பட்டுள்ளன. இப்போது பிரபாகரன் பள்ளமடுச் சந்தி போன்ற முக்கியமான முனைகளில் பாரம்பரிய இராணுவ நகர்வுகளின் தரத்தை உயர்த்தியும், வவுனியா மற்றும் மன்னார் போன்ற பகுதிகளில் நகர்ப்புற கெரில்லா நடவடிக்கைகளை அதிகப்படுத்தியும் உள்ளார். விடுதலைப்புலிகள் இராணுவத்தைத் தமக்கு முக்கியத்துவமற்ற பகுதிகளுக்குள் வருவதை அனுமதிக்கின்றனர். (தற்போது கதிரவெளியில் இது நடந்தது) விடுதலைப்புலிகள் பலவீனமாக இருப்பதால்தான் சில பகுதிகளில் இருந்து விலக்கிக்கொண்டார்கள் என அறிவுள்ள ஒருவன் வாதிடுவான் என நான் நம்பமாட்டேன். இப்போது தனது பின் தளத்தைக் காப்பாற்றிக்கொள்ளவும் விடுதலைப்புலிகளின் தற்போதைய பாரம்பரிய யுத்த தாக்குதல் திறனை எதிர்கொள்ளவும் ஆட்பலத்தை அதிகரிக்க வேண்டிய நிலையில் இராணுவம் இருக்கிறது.

ஆனால் அரசாங்கம் அதைத்தான் செய்யவேண்டும் என்பதையும் பிரபாகரன் விரும்புகிறார்.

NÆRKØB -DKS Video
Danmark பதறேஸ்சியா
மாநகரில் (Nærkøb) நியர்குய்ப் DKSVideo
ஸ்தாபனத்தாரின் மந்றும் இரு சேவைகள்
இடமாற்றம் 01.09.99 முதல் NÆRKØB ரவல்ஸ் கு Mony Exchence
புதிய முகவரி
NÆRKØB ரவல்ஸ் 5
Vestcenter, Venvsvej-10,.7000 Freclericia, Danmark.
தொலைபேசி: 75915840 -75915841 / Fax: 75915842

Nærkøb Travels®
Nærkøb Tvavels புதிய நவீன படுக்கை வசதிகள் கொண்ட பஸ்சேவை - வாரம் 3 நாட்கள்

| | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark - London- | 540Kr | 890Kr |
| Danmark - Paris | 358Kr | 574Kr |
| Danmark - Hambvrg | 205Kr | 327Kr |

இலையுதிர்கால மலிவு பயணச்சீட்டுகள் October கடைசிவரை
பாரிஸ் சென்று அதே பஸ்சில் திரும்பிவர 398 Kr மட்டுமே
பிரான்ஸ் நாட்டில் இருக்கும் டிஸ்னிலான்ட்
(Disnny Land Paris) சென்று திரும்பிவர 6.78 Kr மட்டுமே
2 வயதிற்குமேல் 12 வயதுக்குட்பட்டவருக்கு 598 Kr மட்டுமே
உடன் தொடர்புகொண்டு ஆசனங்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள்: 75915840 - 75915004
Fax 75915842 Fax 75915806

Nærkøb Money Transfer
15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த இடத்துக்கும் கொடுக்கவோ/ பெற்றுக்கொள்ளவோ முடியும்.
இந்த Money Exchange அரச அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள்.

இவ்வாரம் முதல் Okotober 30ம் திகதி வரை
மலிவான விமானப் பயணச்சீட்டுக்கள்.
Copenhagen - Colombo - 3,200 Kr மட்டும் (Tax 165 Kr)
Copenhagen - Colombo - India (திருவனந்தபுரத்திற்கு) - 3800 Kr + Tax 185 kr
Pub

# சரித்திரத்தில் இடம்பெறும் ரணகோச - 5

கடந்த 10-ம்,11-ம் திகதிகளில் ஐக்கிய நாடுகளின் சுகாதார அமைப்பினால் போலியோ தடுப்பூசி போடுவதற்காக யுத்த நிறுத்தமொன்றினை விடுதலைப் புலிகளும், சிறீலங்கா அரசும் மேற்கொண்டனர். இதன் முடிவுநாளான அன்று அதிகாலை பெரும் சமரொன்று ஆரம்பமாகியது. அன்று மாலையாகிய போது ஏராளமான இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் காயமடைந்த நிலையில் அவசர அவசரமாக அப்புறப்பட்டுக் கொண்டிருந்தனர். 200 ற்கும் அதிகமானோர் மரணமாகியிருந்தனர். 1000 ற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர். இவ்வருடத்தின் இதுவரையான காலத்தில் மிகப்பெரும் சமரென இதனைச் சொல்லலாம். இது சரித்திரத்தில் நிச்சயம் இடம்பெறப் போகிறது. அதுவும் தாக்குதல் நடவடிக்கைகளில் எந்தவித இலக்கையோ அல்லது பிரதிபலன்களையோ ஏற்படுத்தாது பாரிய இழப்புக்களை மாத்திரம் ஏற்படுத்திய ஒரு தாக்குதலாக இது நிச்சயம் சரித்திரத்தில் இடம்பெறும்.

**அன்று ஜெயசிக்குறுய் படைகளை மாங்குளத்திற்கு அப்பால் செல்லமுடியாதவாறு விடுதலைப்புலிகள் தடுத்து வைத்திருந்தனர். அதேபோல்தான் இன்று ரணகோச படையினரை பள்ளமடுவிற்கு அப்பால் செல்ல விடுதலைப் புலிகள் அனுமதிக்க மாட்டார்கள். விடத்தல்தீவு அவர்களது முக்கியமான ஓர் பகுதி. அதனை விட்டுக் கொடுக்க அவர்கள்முட்டாள்களல்ல.**

மேலும் இதன் முக்கியம் வேறு வகையாகவும் கூறலாம். ரணகோச- 5 இன் தலைமைத் தளபதியாக மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா கடமையாற்றினார். இவர் கடந்த ஒருவருட காலமாக அமெரிக்காவின் வெஸ்ட் போயின்ற் இராணுவக் கல்லூரியில் பயிற்சி பெற்றுவிட்டு அண்மையில் தான் திரும்பி வந்திருந்தார். இவர் வந்தவுடன் செயற்படுத்திய முதலாவது தாக்குதல் இதுதான். அண்மையில் அதாவது இரண்டு வாரங்களிற்கு முன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் வன்னி இராணுவத் தலைமையகத்தின் ரணகோசாவின் தாமதம் பற்றிக் கவலை தெரிவித்திருந்தார். இதனையடுத்தே இத்தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. ரணகோச ஆரம்பிக்கப்பட்டது ஜெயசிக்குறுயின் முடிவிலேயே. யாழ் -கண்டி ஏ-9 வீதியைத் திறப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஜெய்சிக்குறு மாங்குளம் காட்டுக்குள் காணாமல்போனது. இந்தத் தோல்வியை மறைப்பதற்காக ரிவிபல ஆரம்பிக்கப்பட்டது. இந்த ரிவிபலவின் உடனடியான முடிவின் பின் ரணகோச தோற்றம் பெற்றது.

ஜெய்சிக்குறுயின் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாக விடுதலைப் புலிகளின் அதிகரித்த இழப்புக்கள் என்பது இருந்தது. ஆனால் அது நடைபெற்றதாகத் தெரியவில்லை. யாழ்-கண்டி பாதையைத் திறந்தபின் கிளிநொச்சியிலிருந்து கண்டிக்கு பஸ் விடப்போவதாகக் கூறி வந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்குப் பதிலாகக் கிடைத்தது கண்டி தலதாமாளிகையின் குண்டுவெடிப்புத்தான். அன்று ஜெயசிக்குறுய் படைகளை மாங்குளத்திற்கு அப்பால் செல்லமுடியாதவாறு விடுதலைப்புலிகள் தடுத்து வைத்திருந்தனர். அதேபோல்தான் இன்று ரணகோச படையினரை பள்ளமடுவிற்கு அப்பால் செல்ல விடுதலைப்புலிகள் அனுமதிக்கமாட்டார்கள். விடத்தல்தீவு அவர்களது முக்கியமான ஓர் பகுதி. அதனை விட்டுக் கொடுக்க அவர்கள் முட்டாள்களல்ல. அங்கு பலமான பாதுகாப்பு அரண்களை அமைத்து இராணுவத்தினர்மேல் பலத்த தாக்குதல்களை அவர்கள் நடத்த தயாராகுகின்றனர். நடந்து முடிந்த தாக்குதல்களின்போது முன்னர்போலன்றி ஒரே சமயத்தில் பலநூறு எறிகணைகள் இராணுவத்தின் மேல் விழுந்து வெடித்துள்ளன. இதனை வைத்துப் பார்க்கும்போது விடுதலைப்புலிகள் இப்போது ஒரே சமயத்தில் பல எறிகணைகளை ஏவக்கூடிய கருவிகளை ஏராளமாகப் பாவிக்கிறார்கள் என்பது தெரிகிறது.

அன்று 1987ல் வடமராட்சி இராணுவ நடவடிக்கை நடந்துகொண்டிருந்தபோது நெல்லியடி இராணுவ முகாமிற்கு விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர். அந்த முதலாவது தற்கொலைத் தாக்குதல் நடந்தவேளை அம் முகாமின் ஓர் மேஜராக இந்த வசந்த பெரேரா கடமையாற்றினார். இன்று அன்று நடந்ததற்கு பதிலடி கொடுக்கலாம் என அவர் இந்தத் தாக்குதலைத் திட்டமிட்டிருக்கலாம். ஆனால் விடுதலைப்புலிகளுக்கு பாடம் படிப்பிக்க வசந்த பெரேரா எண்ணும் முன்னரேயே விடுதலைப்புலிகள் பள்ளமடுவில் வசந்த பெரேராவிற்குப் பாடம் படிப்பித்துவிட்டார்கள்.

– லங்காதீப

## சிங்களம் கூறும் சில...

– மாந்தன் –

## ரணகோச - 5 நடவடிக்கை தோல்வியிலிருந்து தப்ப மற்றுமொரு யுத்தத்திற்கு தளபதிகள் தயார்

ரணகோச-5 நடவடிக்கையின்போது பாதுகாப்புப் பிரிவினர் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கவில்லை. இதனையடுத்து அங்கு ஏற்பட்ட இழப்புக்கள் மேலும் பாதுகாப்புத் தளபதிகளிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இப்போது கொழும்பின் பாதுகாப்புத் தலைமை தங்களுக்குள் மோதிக்கொள்ள ஆரம்பித்துள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன. தங்களது இலக்குகளை நிறைவேற்ற முடியாதுபோன ரணகோச -5 நடவடிக்கையின் கட்டளையிடும் அதிகாரியாக மேஜர் ஜெனரல் வசந்த பெரேராவை நியமித்தது பெரும் பிழை எனப் பல இராணுவ தளபதிகள் குறைகூற ஆரம்பித்துள்ளனர்.

அவர் நெல்லியடி, கறுப்புக்குத்தி மற்றும் முல்லைத்தீவு போன்ற படைத்தளங்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களின் போது ஏற்பட்ட இழப்புக்களுக்காக பதில் சொல்லவேண்டிய நிலையில் இருக்கிறார். இப்போது நடந்து முடிந்த பள்ளமடு சண்டையின் இழப்புக்களுக்கும் பதில் சொல்ல வேண்டிய நிலையில் அவர் உள்ளார். இவரை ஏன் ரணகோச-5 நடவடிக்கைக்கு ஒருங்கிணைந்த தளபதியாக நியமித்தார்கள் என்பதில் ஒரு பிரிவு உயர்மட்ட தளபதிகள் பாதுகாப்பு அமைச்சிடம் தங்களது எதிர்ப்புக்களைத் தெரிவித்துள்ளார்கள்.

வசந்தபெரேரா தாம் நடந்து முடிந்த இராணுவ நடவடிக்கையின் இழப்புக்களுக்குக் காரணம் கூறவேண்டியவரல்ல என வாதிடுகிறார். இது மேஜர் ஜெனரல் லயனல் பலகெல்ல அவர்களால் திட்டமிடப்பட்ட ஒன்று என்றும் இந்தத் தோல்விக்கு அவரே பொறுப்பேற்கவேண்டும் ஏன்றும் கூறுகிறார்.

ரணகோச 1,2,3,4 போன்ற நடவடிக்கைகளின்போது தளபதியாகக் கடமையாற்றியவர் மேஜர் ஜெனரல் லயனல் பலகெல்லவே. அவர் இராணுவ பயிற்சி ஒன்றிற்காக அமெரிக்கா செல்லவேண்டிய நிலையில் அவரது பொறுப்புக்கள் அவசர அவசரமாக பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையின் ஆலோசனையின் பேரில் வசந்த பெரேராவிடம் ஒப்படைக்கப்பட்டது. வசந்த பெரேரா முல்லைத்தீவு படைத்தளத்தில் கடமைபுரிந்த காலத்தில் 96-ம் ஆண்டு விடுதலைப்புலிகளால் அப்படைத்தளம் மீது தாக்குதல் நடாத்தப்பட்டது. அங்கு தாக்குதல் நடந்த சமயம் இவர் அங்கு இல்லாதிருந்ததும் பின்னர் பெரும் இழப்புக்களுடன் அப்படைத்தளம் அழிக்கப்பட்டதும் இராணுவ உயர்மட்டத்திடையே பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. அதற்காக ஏற்படுத்தப்பட்ட விசேட இராணுவ கமிஷன் முன் இவர் தோன்றவேண்டுமென்று கூறப்பட்டது. அந்த இராணுவக் கமிஷனின் அறிக்கைகூட முப்படைத் தலைமையகத்திற்கு இன்றுவரை வந்துசேரவில்லை என்பது கவலைக்கிடமானது.

– யுக்திய



# 31ம் நாள் நினைவஞ்சலி

## திருமதி சிவபாக்கியம் முத்தையா

(கொட்டடி யாழ்ப்பாணம்)

அன்னை மடியில்: 14-05-1924 ஆண்டவன் அணைப்பில்: 09-07-1999

*எங்கள் அன்புத்தாயே!*

*அன்பு பண்பு பாசத்துடன் எம்மை சீராட்டி வளர்த்த எம் அன்புத் தெய்வமே*
*துக்கமின்றி காத்தீர்கள் துயரமின்றி வளர்த்தீர்கள்*
*இது தான் வாழ்க்கை என்று இன் சொல்லால் வழிகாட்டி வளர்த்த பண்புத் தெய்வமே!*
*எங்கள் அன்புகண்டு, நல்வாழ்வுகண்டு மகிழ முன்பு*
*இனியும் உங்களைக் காண்போம் என எதிர்பார்த்த வேளையில்....*
*வெற்றியாட்டான் இடியால் வந்து உங்களைக் கவர்ந்து சென்றானே!!*
*அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.*

*தகவல்: குணம் குடும்பத்தினர் (மருமகன்)*
*பேர்லின். (ஜேர்மனி)*
*தொலைபேசி: 0173/ 2392160*

# 98 தேர்தலைவிட பா.ஜ.கவிற்கு 28 இடங்கள் அதிகம்

## - தூர்தர்ஷன் கணிப்பு -

மக்களவைத் தேர்தல் இரு கட்டமாக கடந்த 5-ம் ,11-ம் திகதிகளில் தேர்தல் நடைபெற்றது. பல்வேறு மாநிலங்களில் இரு நாட்களிலும் 268 தொகுதிகளில் வாக்குப் பதிவு நடைபெற்றது.

இந்தத் தொகுதிகளில் வாக்காளர்களிடம் தூர்தர்ஷன் (தொலைக்கட்சி) கருத்துக்கணிப்பு நடத்தியது. 78 தொகுதிகளைத் தேர்ந்தெடுத்து அங்கு வாக்களித்த 18,000 வாக்காளர்களிடம் கருத்துக் கேட்கப்பட்டது. பின்னர் கம்பியூட்டர் மூலம் 268 தொகுதிகளின் முடிவு கணிக்கப்பட்டது. அதன்படி பா.ஜ.க. கூட்டணிக்கு 45 சதவீத வாக்குகளும், காங்கிரஸ் அணிக்கு 39 சதவீத வாக்குகளும் மற்றக் கட்சிகளுக்கு 16 சதவீத வாக்குகளும் கிடைக்கும் எனத் தெரிய வந்துள்ளது.

★ இந்த வாக்குகள் அடிப்படையில் பா.ஜ.க. கூட்டணிக்கு 145 இடங்களும், காங்கிரஸ் அணிக்கு 105 இடங்களும், மற்றக் கட்சிகளுக்கு 18 இடங்களும் கிடைக்கும்.

★ 1998 தேர்தலைவிட பா.ஜ.க. கூட்டணிக்கு கூடுதலாக 28 இடங்கள் கிடைக்கின்றன. கூட்டணி கட்சிகளால் இந்த ஆதாயம் பெறுகிறது.


★ காங்கிரஸ் கூட்டணிக்குக் கடந்த தேர்தலைவிட 2 இடங்கள் குறைவாக கிடைக்கிறது. இந்தக் கணிப்பில் 2 சதவீதம் தவறு ஏற்படக்கூடும் எனவும் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 39 தொகுதிகளிலும் தேர்தல் முடிவடைந்துவிட்டது.

இந்த தேர்தலின் மூலம் மராட்டியத்தில் சரத்பவார் மவுசு குறைந்துவிட்டது தெரிய வந்தது. அந்தக் கூட்டணிக்கு 6 தொகுதிகளே கிடைக்கும் எனக் கருத்துக்கணிப்பு கூறுகிறது.

சரத்பவார், காங்கிரசில் இருந்து பிரிந்ததால்- பாரதிய ஜனதா, வசேனா கூட்டணிக்கு சாதகமாக உள்ளது. தமிழ்நாடு, கர்நாடகம், ராஜஸ்தான், அரியானாவில் பா.ஜ.க. கூட்டணிக்குக் கூடுதல் பலன் கிடைக்கிறது. ஆனால் பஞ்சாபில் இருந்ததையும் பா.ஜ.க. அணி இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதேபோல் ஜெயலலிதாவின் தொலைக்காட்சியும் தேர்தல் முடிந்த 25 தொகுதிகளில் வாக்காளர்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தியது. இதில் பாரதிய ஜனதா கூட்டணிக்கு 139 இடங்கள் கிடைக்கும் எனத் தெரிய வந்துள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு 92 இடங்களே கிடைக்கும் என கருத்துக்கணிப்புக் கூறுகிறது. இந்த கருத்துக்கணிப்பில் பாரதிய ஜனதா கூட்டணிக்கு முந்தைய தேர்தலைவிட கூடுதலாக 10 இடங்கள் கிடைக்கும் என்றும், காங்கிரசுக்கு 35 இடங்கள் கிடைக்கும் என்றும் கருத்துக்கணிப்பு கூறுகிறது. இந்த கருத்துக்கணிப்பில் பாரதிய ஜனதா கூட்டணிக்கு முந்தைய தேர்தலைவிட கூடுதலாக 10 இடங்கள் கிடைக்கும் என்றும், காங்கிரசுக்கு 35 இடங்கள் இழப்பு ஏற்படும் என்றும் அத் தொலைக்காட்சி கணிப்புத் தெரிவித்துள்ளது.




# பா.ஜ.க 300 இடங்களைக் கைப்பற்றும்

## - நியூஸ் வீக் -

இந்திய பாராளுமன்றத்துக்கு 543 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பொதுத் தேர்தலில் 2-வது கட்ட ஓட்டுப்பதிவு நடந்து முடிந்துவிட்டது. இதுவரை 268 தொகுதிகளில் வாக்குப்பதிவு இடம்பெற்றுள்ளது. இனி 275 தொகுதிகளுக்கு மூன்று கட்டமாக வாக்குப் பதிவு நடக்கிறது.

இந்திய தேர்தல் தொடர்பாக 'நியூஸ் வீக்' என்ற அமெரிக்க பத்திரிகை பி.ஜே.பி. தலைமையிலான தேசிய ஜனதா முன்னணி, குறைந்தது 300 இடங்களைக் கைப்பற்றும் என்றும் பெரும்பாலான கருத்துக் கணிப்புகள் தெரிவிப்பதைச் சுட்டிக்காட்டி இது உண்மைதான் என்று எழுதியிருக்கிறது.

'தி ஏசியன் வால்ஸ்ட்ரீட் ஜோர்னல்' என்கிற பத்திரிகையும், 'தி பாரீஸ்டேன் எக்கனா மிக் ரிவியூ' என்ற பத்திரிகையும் இதே கருத்தை வெளியிட்டிருக்கிறது.

இந்தியாவில் உள்ள மிகவும் பிரபலமான தொழிற்சாலைகளின் தலைமை நிர்வாகிகள் 197 பேரைச் சந்தித்து அவர்களிடம் கருத்துக்கேட்டு அவர்களில் 61 சதவீதம்பேர் வாஜ்பாய் மீண்டும் பிரதமராக வரவேண்டும் என்று விரும்புகிறார்கள் என்று வால்ஸ்ட்ரீட் ஜோர்னல் குறிப்பிட்டிருக்கிறது.

# சென்றவர்களை தேடும் பணி தீவிரம்

தூத்துக்குடியிலிருந்து கடந்த 12-ம் திகதி சென்ற கப்பல் நடுக்கடலில் மூழ்கியபோது, அதில் பயணம் செய்த 12 பேரைத் தேடும் பணி தீவிரமாக நடைபெறுவதாக இந்திய அமைச்சகம் கூறியுள்ளது.

கடந்த 12-ம் திகதியன்று 12 பேருடன் எம்.வி.மரிய ஆண்டோராஜ் கப்பல் தூத்துக்குடியில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றது, ஆனால் இக் கப்பல் மூழ்கியதாக தூத்துக்குடி மீன் துறைக்கு தகவல் வந்தது. இதைத் தொடர்ந்து கப்பல் படையினரும், விமானப்படை உலங்குவானூர்திகளும் தேடும் பணியில் ஈடுபட்டன.

இதன்போது தூத்துக்குடியின் தென் கிழக்கில் 50 மைல் தொலைவில் கப்பலின் உடைந்த மரப்பாகங்களும், சாக்கு மூட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

கடற்படையினர் தீவிர மீட்புப் பணியில் ஈடுபட்டனர். ஆனால் இதுவரை அதில் சென்றவர்களின் உடல்கள் ஏதும் மீட்கப்படவில்லை. தேடும் பணி தீவிரமாகத் தொடர்ந்து நடத்தப்படுகிறது என இந்திய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

லாசப்பலில் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது

தர்சனா உணவகத்தின்

கந்தசாமியின் நேரடி மேற்பார்வையில், சகோதர உணவகம்

பிரஷா உணவகம்

தர்சனாவின் மற்றுமோர் சகோதர நிறுவனமான நவீன வசதிகளுடன், 70 இருக்கைகளுடன் கூடிய பிரஷா உணவகம் 18.09.1999 அன்று சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

வட இந்திய, தென் இந்திய உணவு வகைகள், தண்டூரி, சீஸ் நாண், பிரியாணி வகைகள், மற்றும் மசாலாதோசை போன்ற உணவு வகைகள் உட்பட வேறு பலவகையான உணவு வகைகளையும் உண்டு மகிழ்ந்திட நாடுங்கள்.

பிரஷா உணவகம்

54, Rue louis Blanc, 75010 Paris.

Tel: 01 53 26 39 41

Mº: La Chapelle ou Louis Blanc

Pub

# தேர்தல் முடிந்த பின்னர்தான் ஜெயலலிதாவால் பா.ஜ.கவிற்கு தலைவலி; காங்கிரசுக்கோ தேர்தல் நடக்கும்போதே தலைவலி !

மத்தியில் மூன்றாவது அணி ஆட்சி அமைக்கும் என்று ஜெய்லலிதா தெரிவித்த கருத்து, காங்கிரஸ் தலைவர்களுக்குக் கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

மத்தியில் மூன்றாவது அணி ஆட்சி அமைக்க வாய்ப்பு உண்டு என்றும், காங்கிரஸ் தனித்து ஆட்சி அமைப்பதை ஏற்க இயலாது என்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் ஹர்கிஷன் சிங் சுர்ஜீத்துடன் நடத்திய ஆலோசனைக்குப் பிறகு ஜெயலலிதா கருத்துத் தெரிவித்திருந்தார்.

ஜெயலலிதா மீது ஊழல் வழக்குகள் உள்ள நிலையிலும் காங்கிரஸ் கட்சி, அதி.மு.கவுடன் கூட்டணி வைத்துக்கொள்ள முன்வந்தது.

இதற்கு, சரத்பவார் மற்றும் சில முக்கிய காங்கிரஸ் தலைவர்கள் சோனியாவுக்குக் கூறிய ஆலோசனைதான் காரணம் என்று காங்கிரஸ் வட்டாரங்கள்

**- காங்கிரஸ் -**

தெரிவித்துள்ளன. ஜெயலலிதாவுடன் கூட்டணி வைக்காமல் மூப்பனாருடன் கூட்டணி வைத்திருந்தால், குறைந்தபட்சம் மூன்று அல்லது நான்கு தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்க முடியும். தேர்தலுக்குப் பிறகு, காங்கிரஸ் அரசு அமைக்கும் நிலை ஏற்பட்டால் மூப்பனார் நிபந்தனையற்ற ஆதரவு தருவார்.

தற்போது தேர்தலின் மத்தியில் ஜெயலலிதாவும், சுர்ஜீத்தும் ஏற்படுத்தியுள்ள குழப்பம் பா.ஜ.க.வுக்கு பலத்தையும், காங்கிரஸ் பிரச்சாரத்தில் பின்னடைவையும் ஏற்படுத்தும் என்று காங்கிரஸ் தலைவர்கள் கருதுகின்றனர்.

கடந்த முறை தேர்தல் முடிந்த பிறகுதான் பா.ஜ.க வுக்கு தலைவலியைக் கொடுக்க ஆரம்பித்தார் ஜெயலலிதா. ஆனால், தற்போது தேர்தல் நடக்கும் போதே காங்கிரசுக்குத் தலைவலியாகிவிட்டார். அதற்கு முன்னோடியாகத்தான் விழுப்புரம் கூட்டத்துக்கு வராமல் சோனியாவை ஜெயலலிதா அவமதித்தார் என்று காங்கிரஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

# கருணாநிதி-சிவாஜி சந்திப்பு

கலைஞர் கருணாநிதியும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் கருணாநிதியின் இல்லத்தில் சந்தித்து உரையாற்றினர். சுமார் 30 நிமிடங்களாகச் சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சந்திப்புப் பற்றி சிவாஜி மகன் ராம்குமாரிடம், சிவாஜி தி.மு.க.வில் சேரப்போவதாக வதந்தி பரவுகிறதே. அதுபற்றித்தான் முதலமைச்சருடன் பேசினீர்களா? என்று பத்திரிகையாளர்கள் வினாவியபோது நாங்கள் அரசியலை விட்டே ஒதுங்கிவிட்டோம். தி.மு.க.வில் சேரப்போவதாக வந்த வதந்தியில் எந்த உண்மையும் இல்லை. சூரக்கோட்டையில் உள்ள எங்கள் விவசாயப் பண்ணையில் மின் இணைப்புத் தொடர்பாகச் சில பிரச்சினைகள் உள்ளன. அது தொடர்பாகத்தான் முதல்வருடன் பேசினோம். இது தொடர்பாக எனது தந்தை (சிவாஜி) ஏற்கனவே முதல்வருடன் பேசியிருக்கிறார் என்று கூறினார்.

# கருணாநிதியிடம் வாஜ்பாய் உறுதி

(19.09.99)

காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் வாஜ்பாய் முதல்வர் கருணாநிதிக்கு நேற்று முன்தினம் தொலைபேசியில் உறுதியளித்துள்ளார். காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி மேட்டூர் அணைக்குப் போதிய அளவு தண்ணீரைக் கர்நாடக அரசு திறந்துவிட ஆவன செய்ய வேண்டும் என்று கோரி பிரதமருக்குக் கருணாநிதி கடிதம் அனுப்பியிருந்தார்.

இதனையடுத்தே கருணாநிதியுடன் தொடர்புகொண்டு பேசிய பிரதமர் மேட்டூர் அணைக்கு நீர் கிடைக்க ஆவன செய்வதாக உறுதியளித்தார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

# தேர்தல் வன்முறைக்கு மத்தியில் இந்திய மக்களவைக்கான மூன்றாம் கட்ட வாக்குப்பதிவு !

(18.09.99)

இன்று நடந்த மக்களவைக்கான மூன்றாம் கட்ட தேர்தல் வன்முறையில் 44 பேர் கொல்லப்பட்டதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. மூன்றாம் கட்ட வாக்குப்பதிவாக உத்தரப் பிரதேசம், பீகார், மத்திய பிரதேசம், ஆந்திரம், ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் 76 மக்களவைத் தொகுதிகளுக்கு வாக்குப் பதிவுகள் நடைபெற்றன. இந்தத் தேர்தலைப் புறக்கணிக்குமாறு பல்வேறு இடதுசாரிப் போராளி அமைப்புகள் அழைப்பு விடுத்திருந்தனர். குறிப்பாக பீகார், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் இடதுசாரி அமைப்புகள் தங்கள் கோரிக்கையை வலுவாக முன்வைத்திருந்தன. ஜம்முவில் காஷ்மீர் தேசிய இன விடுதலையை வலியுறுத்தி ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி உள்ளிட்ட அமைப்புகள் அழைப்பு விடுத்திருந்தன. இந்நிலையில் வாக்குப் பதிவு இன்று தொடங்கியபோது இடதுசாரி அமைப்புகள் தேர்தல் தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தினர். பீகார் மாநிலம் முழுவதும் அவர்கள் நடத்திய வெவ்வேறு தாக்குதல்களில் பொலிசார், தேர்தல் அதிகாரிகள், நீதிபதி உட்பட 24 பேர் கொல்லப்பட்டனர். போராளிகளின் நிலக்கண்ணி வெடித் தாக்குதல்களில் பெருமளவு பொலிசார் உயிரிழந்தனர். ஆந்திரத்தில் இரண்டு வாக்குச்சாவடிகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. ஆந்திரத்தின் தெலுங்கானா பகுதியில் மிகவும் மந்தமான வாக்குப்பதிவு காணப்பட்டது.

வன்முறை காரணமாகப் பீகாரில் 34 பேரும், காஷ்மீரில் 2 பேரும், ஆந்திரத்தில் ஒருவரும் கொல்லப்பட்டதாகத் தலைமைத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். பீகாரில் நிகழ்ந்த கண்ணி வெடியில் சிக்கி 25 பாதுகாப்புப் படையினர், 2 தேர்தல் அதிகாரிகள், உட்பட 34 பேர் கொல்லப்பட்டனர். பீகார், ஆந்திர மாநிலங்களில் வாக்குச் சீட்டுப் பறிப்பு கிழிப்பு எரிப்பு வாக்குப் பெட்டிகளை வெளியே வீசுதல், அதிகாரிகளை மிரட்டுதல் போன்ற சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

# காவிரி நதிநீர்ச் சிக்கல் தமிழ்நாட்டு விவசாயம் பாதிப்பு !

(18.09.99)

தென் இந்தியாவின் நெற்களஞ்சியமான தஞ்சாவூர் மாவட்டம் காவிரி நீர்ப்பாசனப் பகுதியாகும். ஆனால் தற்போது காவிரியில் போதிய நீரில்லாததால் நெற்பயிர்கள் கருகிவிட்டன. தமிழ்நாட்டுக்கான காவிரி நீரைத் தரக் கர்நாடகம் மறுத்ததால் இந்நிலை தோன்றியுள்ளது. நூற்றாண்டுக்கும் மேற்பட்டதான இந்த நதிநீர்ச் சிக்கல் ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. அரசால் தீர்க்கப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டது. கர்நாடகாவில் இருந்து தமிழ்நாடு வழியாகக் கடலை அடையும் காவிரி நதியைக் கர்நாடக மாநிலம் அணைகளைக் கட்டி நீரைத் தேக்கிவைத்துள்ளது. இதனால் தமிழ்நாட்டு காவிரி வற்றிவிட்டது. இதன் மூலம் தேசிய நதி நீர்க் கொள்கை மீறப்பட்டு வந்தது. இதனைத் தீர்க்கும் வகையில் மத்திய அரசு இரு மாநிலங்களுக்கு மிடையில் உடன்பாடுகளை ஏற்படுத்தி வந்தது. ஆனால் நடைமுறையில் அவை கடைப்பிடிக்கப்படவில்லை.

கர்நாடக மாநிலம் தரும் தண்ணீர் தமிழ்நாட்டில் மேட்டூர் அணையில் தேக்கி வைக்கப்பட்டுப் பின்னர் பாசனத்திற்குத் திறந்து விடப்படுவது வழக்கம். மேட்டூர் அணையின் முழுக் கொள்ளளவு 93.48 டிஎம்சியாகும். ஆனால் அணையின் தற்போதைய நீர்மட்டம் 22.15 டி.எம்.சி. அணையில் இருந்து பாசனத்திற்கு வெளியேறும் நீரின் அளவு 16,655 கன அடி.

இதேவேளையில் கர்நாடகத்தில் இருந்து மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு 1344 கன அடிதான். இந்நிலை நீடித்தால் தற்போது அணையில் உள்ள நீர் அடுத்த 15 நாட்களுக்கும் மேல் போதாமல் இருக்கும். இதற்கான காரணம் காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை மதிக்கக் கர்நாடக அரசு தவறியதும், தமிழர்களின் வாழ்வியல் சிக்கலில் அக்கறை காட்ட இந்திய அரசு மறுப்பதும் தான் என தஞ்சை விவசாயிகள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

கடந்த ஜூன் மாதம் முதல் இம்மாதம் 14-ம் திகதி வரை தமிழ்நாட்டிற்கு வந்து சேர்ந்திருக்க வேண்டிய நீரின் அளவு 121.40 டிஎம்சியாகும். ஆனால் 101 டிஎம்சிதான் இதுவரை வந்து சேர்ந்துள்ளதாக அணையின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதன் விளைவாகப் பல இலட்சம் ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்ட குறுவைச் சாகுபடி கருகிப் போகும் நெருக்கடி தோன்றியுள்ளது.

# தந்தை பெரியார் 121வது பிறந்தநாள் தமிழ்நாட்டில் எழுச்சியுடன் கொண்டாட்டம் !

(17.09.99)

தந்தை பெரியார் எனத் தமிழர்களால் சிறப்பிக்கப்படும் திரு. ஈ.வெ.ராமசாமி அவர்களின் 121-வது பிறந்தநாள் இன்று தமிழ்நாடு முழுவதும் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. தமிழ்ச் சமூகம் தன்மானமும் அறிவும் விடுதலையும் பெற வேண்டுமெனத் தன் வாழ்நாள் முழுவதும் போராடிய அவரின் பிறந்தநாள் தேர்தல் காலமானதால் பல்வேறு அரசியல் கட்சிகளாலும் போட்டாபோட்டியுடன் கொண்டாடப்பட்டது.

சென்னை அண்ணா சாலையில் உள்ள தந்தை பெரியார் உருவச்சிலைக்குத் தமிழ்நாடு முதல்வரும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான மு.கருணாநிதி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதிமுக சார்பில் ஜெயலலிதா கலந்து கொள்ளாதபோதும் அவைத் தலைவர் நெடுஞ்செழியன் மாலை அணிவித்தார். இதேபோன்று மதிமுக செயலாளர் வைகோ, பாட்டாளி மக்கள் கட்சி, தமிழ்நாடு மாநில காங்கிரஸ் ஆகியவையும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, திமுக உருவான நாள் ஆகியவற்றை இணைத்து திமுக நடத்தும் முப்பெரும் விழா அன்று மாலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடத்தப்பட்டது. திமுக சார்பில் இந்த ஆண்டுக்கான தந்தை பெரியார் விருது திருச்சி செல்வேந்திரனுக்கும், அண்ணா விருது விடுதலை விரும்பிக்கும், கலைஞர் விருது டி.ராஜேந்தருக்கும் வழங்கப்பட்டன.

பல்வேறு கட்சிகளின் சார்பில் சிறப்புப் பொதுக்கூட்டங்கள் கருத்தரங்குகள் தமிழ்நாட்டில் பல இடங்களில் நடைபெற்றன.

# வாக்குப் பதிவின்போது பிகாரில் குண்டு வெடிப்புகள்
## 44 பேர் பலி

(19.09.99)

பிகாரில் நேற்று நடந்த தேர்தலின்போது இடம்பெற்ற குண்டு வெடிப்புகளின்போது, 27 பொலிசார் உட்பட 44 பேர் பலியாகினர். சாத்ரா மக்களவைத் தொகுதி, ஹசாரிபாக் மக்களவைத் தொகுதி, சசாராம் மக்களவைத் தொகுதி ஆகியவற்றில் இந்த குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றன. உயிரிழந்தவர்களில் பொலீசார், வாக்குச் சாவடி அதிகாரிகள் ஒரு மாஜிஸ்திரேட் ஆகியோர் அடங்குவர்.

தேர்தல் நடத்தக்கூடாது என்றும் தேர்தலை மக்கள் புறக்கணிக்கவேண்டும் என்றும் இயக்கம் நடத்திவரும் நக்சலைட்டுகளே இக்குண்டு வெடிப்புக்குக் காரணம் எனப் பொலிசார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.


**பாரிஸ் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத்தில் சுவாமி தத்வானந்தா அவர்களின்**

**சிறப்புச் சொற்பொழிவு**

மதுரை வேதாந்த நிலையப்பொறுப்பாளர் சுவாமி தத்வானந்தா அவர்கள் எதிர்வரும் 24.09.99 வெள்ளிக்கிழமை மாலை 8 மணிக்கு பாரிஸ் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் அமைதியான வாழ்க்கைக்குத் தியானத்தின் முக்கியத்துவம் என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார்.


தமிழ்ச்சோலை மண்டபம்
26, Rue du Department, 75018 Paris.
Metro: La Chepelle

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய பரிபாலனசபை

Pub Gra

# முதலாம் ஆண்டு நினைவு வணக்கம்



தாயின் மடியில்:
29.04.1970

தாயகத்தின் மடியில்:
30.09.1998

தாயின் மண்ணிற்காய் அர்ப்பணித்தாய்
உன் உயிரை மறந்தும் நாம்
இருப்போமோ மாநிலத்தில் நின்னுடலைத்தான்
சிதைக்க முடிந்தது கயவரால் நின்
ஆன்ம தாகத்தை சிதைக்கவும் முடியுமா?

உன் தாகம் தீரும் நாள் வரும்
நிச்சயம் இந்த கொள்ளையர்
கும்பல் அழியும் நாள் நிச்சயம்.

என்றும் நின் நினைவலைகளில் வாழும்

அப்பா, அம்மா, பெரியம்மா, அண்ணிமார், அக்கா, அத்தான், தம்பிமார், தங்கச்சிமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

## மேஜர் துளசி (ரவி)

இராஜரட்ணம் விஜயரவி
(ஆனந்தபுரம் கிளிநொச்சி)

தகவல்:
அண்ணன் இ.விஜயமோகன்
நோர்வே.

Pub

# முதலாம் வருட நினைவலைகளில்



## திருமதி கந்தசாமி இரத்தினம்

தோற்றம்:
10.03.1936

மறைவு:
05.10.1998

திதி: 24.09.1999

நடமாடும் தெய்வமாய் மனம் தொழும் தாயே
உடல்கொண்ட உயிருக்கும் ஆதாரம் நீயே
கருவறையில் எம்மைச் சுமந்து
கருணையிலே நனைந்தாயே
கண்காணா திசை மறைந்தும்
கருத்தினிலே நிலைத்தாயே
ஒவ்வொரு பொழுதினிலும்
உன் அன்பை நினைப்போமே
எப்படி அன்னையே உன் பிரிவை மறப்போம்.

இவ்வண்ணம் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கும், மகன்மார்கள், மருமகள்மார்கள், பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள் மற்றும் உற்றார் உறவினர்கள்.

தகவல்:
க. சந்திரன் (இலண்டன்) 0181 951 1632
க. சிங்கம் (ஜேர்மனி) 01724738191
க. குணா (கனடா) 06043230339
க.வினோத் (நெதர்லாந்து) 0651953711

Pub Lon




## வடகொரியா மீதான பொருளாதாரத் தடையை அமெரிக்கா தளர்த்தியது இருநாடுகளும் மீண்டும் வர்த்தகத்தில்!

(18.09.99)

அமெரிக்கா நான்கு தசாப்த காலத்திற்கு மேலாகக் கொண்டிருந்த வடகொரியா மீதான பொருளாதாரத் தடையைத் தளர்த்தியது. அமெரிக்க அதிகாரிகள் வடகொரியாவிடம் அதனது நீண்டதூர ஏவுகணையைப் பரீட்சிக்க வேண்டாமெனக் கோரியதுடன் அதனுடன் மீண்டும் பொருளாதாரத் தொடர்புகளை வளர்த்துக்கொள்ள விரும்புவதாயும் கடந்த வெள்ளியன்று தெரிவித்தனர். அதனைத்தொடர்ந்து அந்நாட்டின் மேல் விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையைத் தளர்த்திய அரசு பாவனையாளர் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களின் வர்த்தகத்தை ஆரம்பித்தனர். அத்துடன் அமெரிக்க விமான நிறுவனம் தனது விமான சேவையையும் அந்நாட்டுக்கு ஆரம்பித்துள்ளது. அமெரிக்க நிறுவனங்கள் வடகொரியாவில் முதலீடு செய்வதையும் அமெரிக்கர்கள் வடகொரியாவுக்குப் பணம் அனுப்புவதையும் அமெரிக்கா அனுமதித்துள்ளது. ஆனால் யுத்த தளவாடங்கள் அங்கு அனுப்பப்படுவது தொடர்ந்தும் தடை செய்யப்பட்டுள்ளது.

1953-ம் ஆண்டு கொரிய யுத்தம் முடிவடைந்ததுடன் வடகொரியாவுடனான வர்த்தகத் தொடர்புகளை அமெரிக்கா துண்டித்துக்கொண்டது—தென் கொரியாவில் 37,000 அமெரிக்கப் படையினர் நிலைகொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் மீண்டும் துப்பாக்கிச் சூடு; ஏழுபேர் பலி

(18.09.99)

அமெரிக்காவில் தொடரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் தொடர்ச்சியாக கடந்த புதனன்று டெக்சாசில் மற்றுமொரு சம்பவத்தில் ஏழு இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

டெக்சாஸ் மாநிலத்தில் போட்வோர்த்தில் அமைந்துள்ள தேவாலயத்தில் 150 வரையிலான இளைஞர்கள் தேவாலய கீதமிசைத்துக்கொண்டிருந்த போது அங்கு நுழைந்த துப்பாக்கி நபர் தனது தன்னியக்கத் துப்பாக்கியால் அவர்களை நோக்கிச் சுட்டுள்ளார். இதில் ஏழு இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இறுதியாக அந் நபர் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

47 வயதான லரி ஆஷ் பூரூக் அப்பகுதியில் வாழ்ந்து வந்த தனி நபர் என்றும், இடைக்கிடையே அவர் இந்த தேவாலயத்துக்குள் துப்பாக்கியுடன் நுழைந்து மக்களை அச்சுறுத்துவது வழக்கம் என்றும் இம்முறையே, சூட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எகுட்பராக்–யாசீர் அரபாத் இரகசிய சந்திப்பு

(18.09.99).

இஸ்ரேலிய பிரதமர் எகுட்பராக்கும் பாலஸ்தீன அதிபர் யாசீர் அரபாத்தும் கடந்த வியாழனன்று இரகசியமான சந்திப்பு ஒன்றை மேற்கொண்டனர் எனச் சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. மேற்குக் கரையின் எல்லையில் அமைந்துள்ள குசாவ் யாற் எனும் நகரில் அமைந்துள்ள இஸ்ரேலிய பிரதமர் எகுட் பராக்கின் வீட்டிலேயே இச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

எகுட் பராக்கும் யாசீர் அரபாத்தும் இதுவரை பொதுவிடங்களில் பத்திரிகையாளர் மத்தியில் மாத்திரமே சந்தித்துக்கொண்டுள்ளனர். இஸ்ரேலிய பிரதமர் அரபாத்தைப் பிரத்தியேகமாகச் சந்தித்துப் பேச அழைப்பு விடுத்ததாயும் அதன் பேரிலேயே இவ் இரகசிய சந்திப்பு இடம் பெற்றதாயும் கூறிய பாலஸ்தீன அதிகாரிகள் பேச்சின் விபரங்களை வெளியிடாத போதிலும் எதிர்கால சமாதான நடவடிக்கைகள் குறித்த பேச்சுக்களை இருவரும் மனம்விட்டுப் பேசினர் என்றும், அடுத்த சில மாதங்களுக்குள் சரித்திரபூர்வமான நிகழ்வு ஒன்று இடம்பெறும் என்றும் தெரிவித்தனர். 1994-ம் ஆண்டு அரசியல் அஞ்ஞானவாசத்திலிருந்து பாலஸ்தீனம் திரும்பிய அரபாத்தின் மூன்றாவது இஸ்ரேலிய விஜயம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## செச்சினிய எல்லையில் ரஷ்யப்படைகள் மற்றுமொரு செச்சினிய யுத்த அபாயம்

(19.09.99)

ரஷ்யா தனது மிகப் பாரிய படை நகர்வினை செச்சினிய எல்லைப்பகுதி நோக்கிச் செயற்படுத்தியுள்ளது. அத்துடன் ரஷ்ய விமானங்கள் செச்சினியாவில் இஸ்லாமிய போராளிகளின் படைத்தளங்கள் என நம்பப்படும் பகுதிகள் மேல் பாரிய குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

பெரும் எண்ணிக்கையிலான கவசவாகனங்களும், பீரங்கிகளும், தாங்கிகளும் செச்சினிய எல்லைப் பகுதிநோக்கி நகர்த்தப்பட்டு வருவதுடன் கடல் வழியாகவும் படையினர் யுத்தக் கப்பல்கள் மூலம் கொண்டு செல்லப்படுகின்றனர். ரஷ்யப் பாராளுமன்றம் கடந்த வெள்ளியன்று செச்சினியப் போராளிகள் முகாம்கள் மீதான தாக்குதல்கள் தொடர அனுமதி வழங்கியது.

கடந்த இரண்டு வாரகால இடைவெளியில் ரஷ்யாவில் மூன்று பாரிய குண்டுவெடிப்புக்களால் 300 வரையிலான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதற்கு உகஸ்தான் இஸ்லாமிய போராளிகள்தான் காரணம் என ரஷ்ய உளவுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர். மேலும் ரஷ்யாவின் முக்கிய நகரங்களில் கடந்த சில நாட்களாக நடந்துவரும் சோதனை நடவடிக்கைகளில் பலதொன் வெடி மருந்துகளும் வெடிக்க வைக்கும் கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க FBI யின் விசேட குழுவினர் குண்டுவெடிப்பு சம்பந்தமாக ரஷ்ய அதிகாரிகளுடன் செயற்பட மொஸ்கோ சென்றுள்ளனர்.

## கிழக்கு தீமோரில் ஐ.நா அமைதிப்படை

(19.09.99)

கிழக்கு தீமோருக்குத் திங்கட் கிழமை காலை பல்தேசிய ஐநா சமாதானப் படைத்தொகுதி வந்து சேரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலிய தளபதியான மேஜர் ஜெனரல்



பீட்டர் கொஸ்கிறோல் இப் படையணிகளுக்குத் தலைமை வகிப்பார் என நம்பப்படுகிறது. கிழக்குத் தீமோரில் அமைதி நடவடிக்கைகளுக்காக 23 நாடுகள் தங்கள் படைப் பிரிவுகளை அனுப்பி வைக்க முன் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. சுமார் 7.000 முதல் 10.000 வரையான படையினர் இங்கு ஈடுபடுத்தப்படுவார்கள் என ஐ.நாவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையே வீட்டுக்காவலில் இருந்து விடுதலை செய்யப்பட்ட சுதந்திர செயற்பாட்டாளரான 53 வயதான எக்ஸானா குஸ்மாவோ கிழக்கு தீமோரின் முதலாவது ஜனநாயக அரசுக்குத் தலைமை தாங்குவார் என நம்பப்படுகிறது. கடந்த ஒகஸ்ட் 30-ம் திகதி சுதந்திரத்துக்கான வாக்கெடுப்பு நடந்தது முதல் பிரித்தானிய தூதரகத்தில் அவர் தங்கியிருந்தார். தற்போது அவுஸ்திரேலியா சென்றுள்ள அவர் ஐ.நா படைகள் கி.திமோரின் பாதுகாப்பை உறுதி செய்யும் வரை கிதிமோர் இடைக்கால அரசினை அங்கு தோற்றுவிப்பார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## திருமதி கோர்பசேவ் காலமானார்

(20.09.99)

முன்னாள் சோவியத் ஜனாதிபதி மிக்கயில் கோர்பச்சேவின் மனைவி ரயிசா கோர்பச்சேவ் திங்களன்று காலமானார். 67 வயதான திருமதி கோர்பசேவ் கடந்த ஜூலை மாதம் முதல் கடுமையான சுகயீனமுற்றிருந்தார். இவர் பின்னர் ஜேர்மனியின் முன்ஸ்டர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

1985 முதல் 91 வரையான காலத்தில் சோவியத்தின் முதலாவது பெண்மணியாக விளங்கினார். 1991-ம் ஆண்டு கோர்பச்சேவும் மனைவியும் சோவியத்தில் இடம்பெற்ற சதிப்புரட்சியொன்றின்போது இராணுவத் தலைவர்களால் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டனர். இந்த சம்பவத்தின் பின் அவர் பல தடவைகள் நோய்வாய்ப்பட்டார்.




இவரது மறைவுக்காக உலகத் தலைவர்கள் பலர் அனுதாபச் செய்திகளை அனுப்பிவைத்துள்ளனர். ரஷ்ய அதிபர் பொறிஸ் ஜெல்சின், திருமதி கோர்பசேவின் மரணச் செய்தி கேட்டு தான் மிகுந்த கவலையடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## மனித உரிமை மீறல்கள் தடுக்கப்பட வேண்டும் — ஐ.நா. பொதுச்செயலர்

(20.09.99)

சர்வதேச அமைதிப்படை கிழக்கு தீமோரில் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ள நிலையில் நியூயோர்க்கில் திங்களன்று ஆரம்பித்த 54 ஐநா பொதுச்சபை விவாதத்தை ஆரம்பித்து வைத்த ஐ.நாவின் பொதுச் செயலர் அங்கு கூடியிருந்த உலகத் தலைவர்களிடையே உலகில் மனித உரிமை மீறல்களைத் தடுப்பதில் கூடிய அக்கறையையும், கவனத்தையும் செலுத்தவேண்டும் என வேண்டுகோள்விடுத்தார்.

இன்று பல நாடுகளில் பல இன மக்கள் மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். அவர்கள் இன்னல்படும் இடங்களுக்கு ஐநா தனது படைகளை அனுப்பிவைக்க வேண்டும். அதற்கான பொறுப்பு உலகத் தலைவர்களிடையேதான் உள்ளது. மனித உரிமை மீறல்கள் தடுக்கப்படவேண்டும் எனக் கூறியவர் கொசோவோவில் பாதுகாப்புச்சபை அங்கத்தவர்களது ஒருமித்த முடிவு இருக்கவில்லை எனக் கூறியவர் கிழக்குத் தீமோருக்கு படை அனுப்புவதில் ஒருமித்து செயற்பட்டதையும் பாராட்டினார்.

தற்போது நடைபெறும் விவாதத்தில் தென்னாபிரிக்க ஜனாதிபதி தபோம்பெக்கி, அல்ஜீரிய ஜனாதிபதி புத்தெல்விக்கா, பிரெஞ்சு பிரதமர் லியனல் ஜொஸ்பன் உட்பட 20 தலைவர்கள் உரையாற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ETC

# 342 நிமிடம்

# கோடைகால சலுகை

தேசத்தின் விடிவை விரைவாக்க
இதோ உங்கள் கரங்களில்
ஈழம் தொலைபேசி அட்டைகள்




Kanada
Belgiene
Frankreich
Schweiz
Dänemark
Norwegén
Niederlande
GroBbritannien

**342 Min**

**ஈழம் தொலைபேசி அட்டையின்**
**வாடிக்கையாளர்களுக்கு ஒரு மாபெரும் நற்செய்தி !**

உங்கள் ஆதரவுப் படிகளில் ஏறி நிற்கிறது ஈழம் தொலைபேசி அட்டையின்

## முன்னேற்றப் புதுப் பொலிவு!!

உலக விஞ்ஞானம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள
நவீன தொழில்நுட்பத்துள் காலடி எடுத்து வைக்கிறது

## ஈழம் தொலைபேசி அட்டை!!!

எவ்வித இடையூறுகளும் இல்லாத தெளிந்த ஒலிப் பொலிவையும்
தடையில்லாத நீண்டநேர இணைப்பையும் காக்கவைக்காத
உடனடித் தொடர்பையும் அதிசயிக்கும் வகையில் தரவிருக்கும்
நவீன வான் அலைநுட்பத்துள்
ஈழம் தொலைபேசி அட்டை இணைந்துகொள்ளுகிறது
என்னும் மகிழ்ச்சிகரமான செய்தியை உங்களுக்கு
அறியத்தருகின்றோம்!

ஆங்கிலமொழி விளக்கத்துடன்:
08001007234 / 069222210046
டொச் மொழி விளக்கத்துடன்:
08001007235 / 069222210047

ஆகிய புதிய இலக்கங்களுடன்–புதுப் பொலிவுடன்
தொடர்ந்தும் தனது பணியில்–முன்னேற்றப் பாதையில்
வெற்றிநடைபோடவிருக்கிறது ஈழம் தொலைபேசி அட்டை!

உங்கள் ஆதரவால் உயர்ந்துவரும் உங்கள் தொலைபேசி அட்டை

## ஈழம் தொலைபேசி அட்டை!

**114 Min** China, Indien, Srilanka

**Tamil Eelam** **25 Min**

| Country | 20/Min | 50/Min | 100/Min |
|---|---|---|---|
| Germany | 80 | 220 | 480 |
| Großbritannien | 57 | 157 | 342 |
| Kanada | 57 | 157 | 342 |
| USA | 50 | 137 | 300 |
| Frankreich | 57 | 157 | 342 |
| Schweiz | 57 | 157 | 342 |
| Niederland | 57 | 157 | 342 |
| Italien | 40 | 110 | 240 |
| Dänemark | 57 | 157 | 342 |
| Norwegen | 57 | 157 | 342 |
| Hongkong | 38 | 105 | 230 |
| Neuseeland | 36 | 100 | 218 |
| Australien | 36 | 100 | 218 |
| Japan | 35 | 96 | 210 |
| Jugoslawien | 29 | 80 | 176 |
| Türke | 26 | 73 | 160 |
| Singapur | 25 | 68 | 150 |
| Weissrubbland | 24 | 66 | 144 |
| Malaysia | 23 | 64 | 141 |
| Bulgarien | 21 | 60 | 131 |
| Griecheniand | 21 | 58 | 127 |
| Rumänien | 19 | 52 | 115 |
| China | 19 | 52 | 114 |
| Indien | 19 | 52 | 114 |
| Srilanka | 19 | 52 | 114 |
| Ghana | 18 | 50 | 109 |
| Tunesien | 18 | 50 | 109 |
| Rubbland | 16 | 46 | 100 |
| Angola | 15 | 42 | 93 |
| Thailand | 15 | 42 | 92 |
| Taiwan | 15 | 42 | 92 |
| Philippinen | 15 | 42 | 92 |
| Bangladesch | 14 | 40 | 88 |
| Pakistan | 14 | 40 | 88 |
| Nigeria | 14 | 35 | 86 |
| Ärgentinien | 14 | 39 | 85 |
| Kenia | 13 | 38 | 83 |
| Agypten | 12 | 35 | 76 |
| Iran | 11 | 32 | 71 |
| Jordanien | 11 | 32 | 71 |
| Kamerun | 11 | 32 | 71 |
| Indonesien | 11 | 32 | 70 |
| Afghanistan | 11 | 32 | 70 |
| Somalia | 10 | 28 | 63 |
| Tamil Eelam | 4 | 11 | 25 |

**EELAM TELECARD** - Germany

**Tel: 0173 2722846**
**0208 2053652**



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# அடிக்கு அடி

கடந்த வாரம் தமிழீழப் பகுதியில் இரு படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. புதுக்குடியிருப்பில் சிறீலங்கா விமானப் படைகள் மேற்கொண்ட தாக்குதலில் 22 தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டு 40ற்கும் மேற்பட்டோர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இதேவேளை அம்பாறையில் இதற்கு சில தினங்களுக்குப் பின்னர் தமிழர்களின் மூன்று கிராமங்களில் குடியேற்றப்பட்டிருந்த 54 சிங்களவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களைக் கொன்றவர்கள் யாரென்பது தெரியாத போதிலும், சிறீலங்கா அரசு விடுதலைப்புலிகளின் மீதே குற்றம் சுமத்தியிருந்தது.

இவ் இரண்டு படுகொலைகளும் தமிழீழத்தின் இரு வேறு பகுதிகளில் நடந்தவையே. ஆனால் இன்று சிறீலங்கா அரசில் இருந்து சர்வதேசம் வரைக்கும் அம்பாறையில் இடம்பெற்ற கொலைக்களுக்கே கண்டனங்களையும் அனுதாபங்களையும் தெரிவித்துள்ளது. கொழும்புப் பத்திரிகைகளில் இருந்து சர்வதேச பத்திரிகைகள், செய்தி ஊடகங்கள் வரைக்கும் இக் கொலைகளையே கண்டித்து செய்தி வெளியிட்டுள்ளன. காரணம் கொல்லப்பட்டவர்கள் சிங்களவர்கள் என்பது மட்டுமே.

முதல்நாள் தமிழர்கள் கொல்லப்பட்டபோது இராணுவ இலக்கு எனக் கூறிய சர்வதேச செய்தி ஊடகங்கள் யாவும் மறுநாள் சிங்கள மக்கள் இறந்தபோது அதனை படுகொலை என்றும் காட்டு மிராண்டித்தனம் என்றும் கூறின. முதல் நாள் நடந்ததை இவ்விதம் கூற ஏன் அவர்களால் முடியவில்லை? காரணம் அங்கு கொல்லப்பட்டவர்கள் தமிழர்கள்.

புதுக்குடியிருப்பில் தாக்கப்பட்டது புலிகளின் இலக்கே என தெரிவித்த சிங்கள இராணுவப் பேச்சாளரும், ஜனாதிபதியும் பின்னர் பொதுமக்களும் கொல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகம் தெரிவித்திருந்தனர். ஆனால் கொல்லப்பட்டவர்கள் பொதுமக்கள்தான் என்பதை சர்வதேச செஞ்சிலுவை சங்கம் உறுதிப்படுத்திக் கூறிய பின்னர் கூட, அதற்கு அனுதாபமோ கவலையோ தெரிவிக்காத, தெரிவிக்க விரும்பாத சிறீலங்கா அரசும், அதன் ஜனாதிபதியும், அம்பாறையில் நடந்த கொலைகளுக்கு மட்டும் கண்டனங்களை தெரிவித்ததுடன், இறந்தவர்களுக்கு நஷ்டஈடும் வழங்கி அவர்களின் மரணச்சடங்கிற்கு பாதுகாப்பும் அளித்துள்ளது.

இதேவேளை இக் கொலைகள் இடம்பெற்ற பகுதிகளுக்கு சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை நேரடி விஜயம் செய்து அவர்களின் உறவினர்களுக்கு ஆறுதலும் தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா அரசு, இந் நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்களுக்கு திட்டவட்டமாக ஒரு உண்மையை சொல்லிவிட்டது. சிறீலங்கா அரசு, 'சிங்களவர்களுக்கு மட்டும்' உரியதென்பதே அது. எனவே தமிழரின் தேவைகளை தமிழரே நிறைவு செய்யவேண்டும் 'தமிழர்களுக்கு பாதுகாப்பு தமிழர்கள்தான்' என்கின்ற இறுதி முடிவைத்தான் சந்திரிகாவின் சிங்கள அரசு தமிழர்களுக்கு உறுதிப்பட எடுத்துக்கூறியுள்ளது.

எனவே தமிழ் மக்கள் சிறீலங்கா அரசினால் பாதிப்பிற்கு உள்ளாகும் போதெல்லாம் அவற்றின் எதிரொலிகள் எதாவது ஒரு கோணத்தில் ஏதாவது ஒரு பகுதியில் சிங்கள மக்கள் மீதும் எதிரொலிக்கத்தான் செய்யும் என்பதையும் இச் சம்பவங்கள் காட்டிநிக்கின்றது.

# பாஜக ஆட்சியை குறிவைத்து சிங்களம்

பார்வை

அவுஸ்திரேலியாவில் இருந்து வெளிவரும் ஒரு செய்தி ஏட்டில், செய்தி ஒன்றை தாமே எழுத வைத்துவிட்டு பின்னர் அதனை அவுஸ்திரேலியாவில் இருந்து தாம் எடுத்து போடுவது போல் பிரசுரித்து அச் செய்திக்கு உண்மை வடிவம் கொடுக்கவும் சிங்கள அரசு முயன்றுள்ளது. இந்தியா தமிழர்களுக்கு இன்னமும் ஆயுதங்களை வழங்குவதாக 'கன்பரா ரைம்ஸ்' எனும் ஏட்டை ஆதாரம் காட்டி கொழும்பு ஏடுகள் செய்தி வெளியிட்டுள்ளன. இச் செய்தியானது தேர்தல்களில் வாஜ்பாய் தலைமையிலான கூட்டணி வெற்றி பெறும் என்ற ஊகத்தில் அவசர அவசரமாக தயாரிக்கப்பட்டதாகும். அக் கூட்டணியின் முக்கிய தலைவர்களான ஜோர்ஜ் பெர்னான்டஸ், கலைஞர் கருணாநிதி, வைகோ, ராமதாஸ் ஆகியோர் தமிழர்களின் குரலை கேட்பவர்களும் எதிரொலிப்பவர்களும் என்ற அச்சத்தில் சிங்களம் பொய்ச் செய்திகளை தென்னாசிய அரங்கில் விதைக்க முற்படுகின்றது. இச் செய்திகளை இந்திய உள் அரங்கில் ஜெயலலிதா போன்றவர்கள் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தி புதிய அரசுக்கு தொல்லை கொடுப்பர் என்ற எதிர்பார்ப்பு இதன் பின்னணியில் உள்ளது. மேலும் ஆப்கானிஸ்தானை மையமாகக் கொண்ட முஸ்லீம் மதவாதத்திற்கு எதிரான போரில் அமெரிக்காவுடன் கைகோர்த்து செயற்படப்போவதாக அறிவிக்கும் இந்தியாவுக்கு சர்வதேச நெருக்கடியை எமது விடயத்தில் உருவாக்கும் முயற்சி இதுவாகும். ஆனால் இது இந்தியாவுக்கு எரிச்சலைத்தான் ஏற்படுத்தும். கதிர்காமரின் கூக்குரல் போடும் இராஜதந்திரத்தின் முயற்சி இது.

★ ★ ★

யோசப் பரராஜசிங்கம் புதுக்குடியிருப்பு படுகொலைகள் பற்றி சிங்கள சனாதிபதியின் கவனத்தைக் கோரியுள்ளார். அதே போன்று அம்பாறை நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட சிங்களவர்களை பராமரிக்க சந்திரிகா காட்டிய அதீத அக்கறையை ஒப்பிட்டும் சனாதிபதிக்கு மனு அனுப்பியுள்ளார். இவை அனைத்தும் பரராஜசிங்கம் தனது இருப்பை உறுதிப்படுத்த எடுத்த நடவடிக்கை போன்றுள்ளது.

சிங்கள சனாதிபதியிடம் தமிழர்களுக்கு நம்பிக்கையும் கிடையாது. எதிர்பார்ப்பும் கிடையாது. மாறாக நம்பிக்கை இருப்பதாக காட்டுவது தமிழர்களின் குரலை பிழையாக பிரதிபலிப்பதாகும். குண்டு போட்டு இனஅழிப்புப் புரியும் சந்திரிகாவை நம்பி மனு அனுப்புவதும் கடிதம் எழுதுவதும் தமிழீழ விடுதலைப் போரின் பலத்தையும் அரசியல் நிலைப்பாட்டையும் சேதப்படுத்தும் நடவடிக்கையாகும். மேலும் இப்படியான போலி எதிர்பார்ப்புக்களை பாவித்தே சந்திரிகாவின் உள்நாட்டு-வெளிநாட்டு பரப்புரையாளர்கள் சந்திரிகாவை நல்லவராகக் காட்டும் செய்திகளை தயாரிக்கின்றனர்.

யோசப் பரராஜசிங்கம் சந்திரிகாவுக்கு கடிதம் எழுதுவதையும் சிங்கள அரசின் இயந்திரங்களின் போலி நடவடிக்கைகளை விவாதத்திற்கு அழைப்பதையும் நிறுத்தி தமிழீழ விடுதலைப் போர் வெற்றிபெறும் என்ற நம்பிக்கையுடன் இரு நாடுகள் என்ற கருத்தை உரக்கக் கூறுவதே பயனுள்ளதாகும்.

★ ★ ★

சந்திரிகா அம்மையார் சமஉரிமைக்கான சட்டம் ஒன்றை தனது சிங்கள நாட்டிற்கு கொண்டுவர உள்ளார். இது பற்றி செய்தி எழுதிய 'சண்டே டைம்ஸ்' ஏடு அமைச்சரவையில் சந்திரிகா கூறியதாக விளக்கம் கொடுத்து ஒரு செய்தி வெளியிட்டுள்ளது. தன்மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளதாகவும், தன்னை பரந்த மனப்பான்மை உள்ளவராக தமிழர்கள் கருதுவதாகவும் கூறியுள்ள சிங்களத் தலைவி கொழும்பில் தமிழர்கள் முன்பு மிக சிரமப்பட்டதை உணர்ந்து தான் உருவாக்கிய தொல்லை தவிர்ப்பு குழு சிறப்பாக செயற்பட்டு நிலவரத்தை கட்டுபாட்டுக்குள் கொண்டுவந்ததாக கூறியுள்ளார். ஆனால் சந்திரிகா அப்படிச் சொல்லிக் கொண்டிருந்த வேளையில் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள இரு அறிக்கைகள் கொழும்பில் இடம்பெற்ற தமிழர்கள் தொடர்பான சித்திரவதைகள் தொடர்பாக பேசின.

சந்திரிகா தனது சுய தோற்றத்தைப் பாதுகாத்தவாறு இனப்படுகொலையின் அத்தனை குற்றங்களையும் பிறர் மேல் போடுவதற்கு முயல்கின்றார். இதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி பேூன்ற எடுபிடி தமிழ்க் குழுக்கள் துணைநிற்கின்றன. அண்மையில் வலிகாமம் காணிப்பறிப்பு விவகாரத்தில் மூக்கை நீட்டி சந்திரிகாவால் அவமானப்படுத்தப்பட்ட இந்து மக்கள் கூட்டமைப்பு போன்றன, சந்திரிகாவின் இரட்டை வேட அரசியலிற்கு கூட்டணியின் வழியில் சென்று மாட்டிக்கொண்டவை ஆகும்.

★ ★ ★

அம்பாறையில் இடம்பெற்ற சம்பவத்திற்கு இம் முறை எழுந்த சர்வதேச எதிர்ப்புக் குரல்கள் குறைவானது போன்றுள்ளது. அமெரிக்கா போன்ற நாடுகள் இதுவரை கருத்து வெளியிடவில்லை. சில அனைத்துலக அமைப்புக்களின் குரல்களைக் காணவில்லை. இது தீவிர சிங்கள வெறியர்களை ஆத்திரப் படுத்தியுள்ளது. 'லங்காவெப்' எனப்படும் இன்ரர்நெட் ஊடாக செய்திகளை தொகுத்து வெளியிடும் நிறுவனம் வழமைக்கு மாறாக சர்வதேச மன்னிப்புச் சபையைக் கண்டித்து, 'கண்களை மூடிக்கொண்டுவிட்டாயா?' என குறிப்பு வெளியிட்டுள்ளது.

வழமையாக இத்தகைய சம்பவங்களுக்காகக் காத்திருந்து ஓடியோடி செய்திகளைப் புலிகளுக்கு எதிராக வெளியிடும் சர்வதேச செய்தி நிறுவனங்களின் கொழும்பு நிருபர்கள் இம்முறை மாட்டிக்கொண்டு விட்டனர். புதுக்குடியிருப்பு குண்டுவீச்சுக்களை போதியளவு வெளிச்சம் கொடுத்து வெளியிடாத இவர்கள் அம்பாறையை வெளியிடும் போது புதுக்குடியிருப்பை தொடவேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டனர். இது சிங்கள அரசுக்கு சாதகமற்றது. மேலும் அமெரிக்கா போன்ற நாடுகள் கூட இச் சம்பவங்களுக்கு குரல் தராதமைக்குக் காரணம் இக் கொள்கைத் தடுமாற்றமே என எண்ணத் தோன்றுகின்றது. சந்திரிகா கொடூரமாக, தமிழர்களின் இழப்புக்கு மௌனமும் சிங்களவர்களின் இழப்புக்கு கூக்குரலும் இடலாம்; ஆனால் பிற தரப்பினர் சற்று சங்கடப்படுகின்றனர்.

- ராஜா

# தமிழகத் தேர்தல்

*மீண்டுமொருமுறை உலகின் பெரிய ஜனநாயக நாடு தனது பொதுத் தேர்தலைச் சந்திக்கிறது. 1952-ம் ஆண்டில் இந்திய தேசம் தனது முதலாவது பொதுத் தேர்தலைச் சந்திக்க ஆரம்பித்து 1999 இல் மீண்டும் வந்து நிற்கிறது. இக் காலப்பகுதிகளுக்கிடையே இந்திய அரசியலில் எத்தனையோ மாற்றங்கள் வந்தும்போயுமுள்ளன. கடந்த 50 வருடங்களில் இந்தியா சந்தித்த பொதுத் தேர்தல்களையும் தமிழகத்தின் அப்போதைய நிலைமினையும் இக்கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது. இந்திய தேர்தல் காலத்தில் 'தேர்தல் களத்தின்' இக்கட்டுரை பொருத்தமானதெனவே தோன்றுகிறது. சில வாரங்கள் இது தொடராக வரும். — ஆர்.*

# கடந்த 50 ஆண்டுகளின் ஒரு நோக்கு

4

ஆனாலும் ஆதி திராவிட மக்களுக்கு நீதிக்கட்சி கால முதல் இன்றுவரைக்கும் பாடுபட்டு அந்த மக்களின் உரிமைகளுக்காக வாதாடியும் போராடியும் அவர்களைக் கைத்தூக்கி விட்டு மேலேற்றிவரும் இயக்கம் திராவிட இயக்கம் ஒன்றுதான் என்பதனை கீழ்க்கண்ட வரலாறு விளக்கும்.

திராவிட இயக்கத்தைப் பற்றி இழிவு படுத்திப் பேசியும் எழுதியும் விமர்சனம் செய்கிறவர்களெல்லாம் இந்த இயக்கத்தை 'ஆதிராவிடக் கட்சி, அரிஜனங்கள் கட்சி'. பச்சையாகச் சொல்வதானால் 'சூத்திரப்பயல்கள் கட்சி' என்றுதான் வெறுத்தொகுக்கி வந்தார்கள். அந்த அளவுக்கு அந்த மக்களுக்காகக் குரல் கொடுத்த இயக்கம் திராவிட இயக்கம் - இந்த மாபெரும் இயக்கத்தின் மூலவித்து நீதிக்கட்சி.

நீதிக்கட்சி ஆட்சி மட்டும் இந்தத் தமிழ் மண்ணில் தோன்றியிராமல் போயிருந்தால்...

அதன் ஆட்சி ஏறத்தாழ 17 ஆண்டுக்காலம் கோலோச்சாமல் இருந்திருந்தால்....

தாழ்த்தப்பட்ட சமுதாயம் இன்றுள்ள நிலையில் எழுச்சி பெற்றிருக்க முடியாது என்பது மட்டுமல்ல; தலையெடுத்திருக்கவே முடியாது என்பதை உணர வேண்டும். மனச்சான்றுள்ள எவரும் இந்த உண்மையை மறுக்கவேமாட்டார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்கள் தீண்டாமைக் கொடுமையிலிருந்து விடுபடவும்-பொது இடங்களில் நடமாடவே முடியாமலிருந்த நிலையிலிருந்து மீட்சிபெறவும்-அவர்கள் பொதுக்கிணறுகளில் தாராளமாகக் குடிநீர் எடுக்கவும் அனைத்து மக்களோடும் அமர்ந்து உண்ணவும் சமுதாயத்தில் அவர்கள் சம உரிமைகளைப் பெறவும் வழி வகுத்த இயக்கம் நீதிக்கட்சிதான். குறிப்பாக ஆதி திராவிட மக்களின் உரிமைக்காகப் போராடிய எம்.சி. இராசா, இரட்டைமலை சீனிவாசன் போன்ற தலைவர்கள் நீதிக்கட்சியில் பங்கேற்றுப் பணிபுரிந்த பெருந்தகையாளர்கள்தான்.

மக்களிடையே சமத்துவ நிலை ஏற்படவேண்டும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சமநீதியும் சமவாய்ப்புகளும் கிடைக்க வேண்டும் என்கிற அடிப்படையில் வகுப்பு வாரிப் பிரதி நிதித்துவ ஆணை பிறப்பிக்கப்பட வழி வகை செய்தவர் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த வழக்கறிஞர் எஸ்.முத்தையா 'முதலியார்' அவர்கள்.

இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டபோது ஏற்பட்ட எதிர்ப்பு சாதாரணமானதல்ல; அத்துணை எதிர்ப்பையும் சமாளித்தது நீதிக்கட்சி ஆட்சி. நீதிக்கட்சி ஆட்சி ஆதித்திராவிட மக்களுக்காக என்னென்ன அடிப்படையான காரியங்களைச் செய்துள்ளது என்பதனை திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி கீழ்க்கண்டவாறு விளக்குவார்;-

'உழைக்கும் மக்களாகிய தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்கு மற்றவர்களைப்போல சம வாய்ப்புகளை பல்வேறு துறைகளில் உருவாக்கித் தருவது அவசியம் என்று கருதி, அவர்களைக் கல்வியறிவு பெற்றவர்களாக்கி, பொருளாதாரத்திலும் சொந்தக் கால்களில் நிற்கக் கூடியவர்களாக ஆக்கிவிட்டால் பிறகு அவர்களை மற்ற எவரும் பிறவி அடிமைகளாகவோ, கீழ்ச்

## நீதிக் கட்சியின் புரட்சி

சாதிக்காரன், வேலைக்காரன் போன்றோ நடத்தமுடியாத நிலை ஏற்படும் என்று கருதியே அப்பணிகளை நீதிக்கட்சி ஆட்சி திட்டமிட்டுச் செய்தது.

கல்வித் துறையில் ஆண்டாண்டு காலமாய் ஒடுக்கப்பட்டு தற்குறிகளாக்கப்பட்டு கீழ் நிலையில் வைக்கப்பட்ட அச் சமுதாயத்தினருக்கு கல்விக் கண்ணைத் திறப்பது மிகவும் அவசியம் என்று கருதி அதற்கான செயற்திட்டங்களை உருவாக்கியது நீதிக்கட்சி.

கல்லூரியில் சேர்ந்து படிக்க முன்வரும் அம் மாணவர்களுக்கு இஸ்கொலசிப்புகள் வழங்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. சில படிப்புகளுக்கு நாகரிகப் பெண்கள் படிப்பதற்காகும் செலவுத் தொகையில் பெரும்பகுதி அவர்களுக்குத் தருவது என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்களில் ஆசிரியர்களாக வர விரும்புகிறவர்கள் பயிற்சி பெறுவதற்கு இந்த நாகரிகப் பெண்கள் திட்டமூலம் வாய்ப்பு அதிகம் ஏற்பட்டது.

> **இந்த இயக்கத்தை 'ஆதிராவிடக் கட்சி, அரிஜனங்கள் கட்சி'. பச்சையாகச் சொல்வதானால் 'சூத்திரப்பயல்கள் கட்சி' என்றுதான் வெறுத்தொகுக்கி வந்தார்கள். அந்த அளவுக்கு அந்த மக்களுக்காகக் குரல் கொடுத்த இயக்கம் திராவிட இயக்கம்**

ஆதி திராவிட ஆண்களுக்கும், பெண்களுக்கும் எல்லா நிலையிலும் கல்வி கற்பிக்கவென்று தொழிலாளர் நலத்துறை (Labour Department) மூலம் பல பள்ளிகளை ஏற்பாடு செய்து அவர்களைப் படிக்கும்படி தூண்டியது. சுமார் 1000 பள்ளிகளுக்கு மேற்பட்டு இப்படித் துவங்கப் பெற்று நடந்துவந்தன.

தொழிலாளர் நலத்துறை அல்லாது தனியார் நடாத்திவந்த பல பள்ளிகளுக்குக்கூட மானிய உதவிகொடுத்து ஆதி திராவிட மாணவ மாணவிகளை மற்றவர்களுடன் சேர்ந்து படிக்கும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டு ஆணைகள் போடப்பட்டன.

புத்தகங்கள் வாங்குவதற்கும் உடைகள் வாங்குவதற்கும் அப்பிள்ளைகளுக்கு தொழிலாளர் நலத்துறை மூலம் மானிய உதவி தரப்பட்டது. துவக்கத்தில் தனியார் பள்ளிகளில் சேர்ந்தவர்களுக்கு அரைச்சம்பளம் கட்ட வேண்டுமென்று இருந்த விதியும் கூட மாற்றப்பட்டு முழுச் சம்பளமும் அரசு அவர்களுக்குக் கட்டிவிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்குச் செல்லும் ஆதி திராவிட மாணவன் தேர்வுக்கென்று கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. தேர்வு எழுதினால் போதுமென்று ஆணைகளை நீதிக்கட்சி ஆட்சி போட்டு அவர்களை ஊக்கப்படுத்தியது. இதோடு உதவித் தொகைகள் படிப்புத் தொகைகளையும் அம் மாணவர்களுக்குத் தாராளமாக, ஏராளமாக அளிக்க முன்வந்தது.

ஆதிதிராவிட மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கென்றே விடுதிகள் கட்டப்பட்டன.

1920 முதல் 1936 வரை தொடர்ந்து இப்படிப் பல அமைதிப் புரட்சியினை கல்வித் துறையிலும் ஏனைய துறைகளிலும் நீதிக்கட்சி செய்தது.

அது மட்டுமா குடிநீர் கிணறுகள், சாலைகள், இடுகாடுகள், சுடுகாடுகள் அவைகளுக்குச் செல்லும் பாதைகள் இவைகள் அம் மக்களுக்குச் சரியான வசதியுடன் கிடைக்க வேண்டும் என்று திட்டமிட்டு நீதிக்கட்சி ஆட்சிகள் அந்தக் காலத்திலேயே செயலாற்றின.

அதுமட்டுமா சென்னை ராஜதானி (அப்போது அதற்கு அது தான் பெயர்) (Madras Presidency) இல் உள்ள தரிசு நிலங்களை விவசாயத்திற்காக அரசு அளிக்கும் போது ஒவ்வொரு ரயத்துவாரி கிராமத்திலும் கணிசமான அளவுக்கு முன்னுரிமையுடன் ஆதி திராவிடத் தோழர்களுக்கு அளித்திட வேண்டுமென்று ஆணை பிறப்பித்து அதிலும் இட ஒதுக்கீடு தத்துவத்தைச் செயற்படுத்தியது. அசைன்மெண்ட் (Assignments) மூலம் அவர்களுக்குப் பெரும்பகுதி நிலம் ஒதுக்கப்பட்டது. 1935ல் கிடைத்த ஓர் புள்ளி விபரப்படி 7 இலட்சத்து 36 ஆயிரம் ஏக்கர் நிலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1935ம் ஆண்டு மார்ச் 31ம் திகதி வரை இதில் 4 இலட்சத்து 4000 ஏக்கர் நிலம் அவர்களுக்கென்றே 'அசைன்மெண்ட்' தரப் பட்டது.

உத்தியோக வாய்ப்பில் ஒவ்வொரு பன்னிரண்டு உத்தியோகங்களுக்கும் கம்யூனல் ஜிஓ. படி ஒரு உத்தியோகம் ஆதி திராவிடர்களுக்கு (அவர்களின் மக்கள் தொகை விகிதாசாரத்திற்கேற்ப) ஒதுக்கப்பட்டது. கல்வித் தகுதியும் வயது வரம்பும் அவர்கள் பதிவுபெறும் வகையில் முறையே குறைக்கப்பட்டும், உயர்த்தப்பட்டும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

தெருக்களில் நடக்க உரிமை பஸ்களில் எல்லோருடனும் கலந்து உட்கார உரிமை எல்லாம் நீதிக்கட்சி ஆட்சியின் சாதனைகள்.

'பறையன்' என்ற சொல்லைப் பயன்படுத்தக் கூடாது. அதற்குப் பதில் 'ஆதி திராவிடர்' என்றே அவர்களை அழைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை சென்னைக் கார்ப்பரேஷனில் முன்மொழிந்து ஆணையாக்கக் காரணமானவர் திராவிடர் திருமேனி டாக்டர் சி. நடேசனார் அவர்களாவார். இன்னும் எத்தனையோ விரிக்கிற் பெருகும்.

இவ்வாறு வீரமணி விபரிப்பது வெறுங்கதையல்ல. அழிக்க முடியாத வரலாறு. கால வெள்ளத்தால் கரையொதுக்கப்பட்ட அந்தக் காட்சிகள் இனி என்றைக்கும் எம் கண்முன் வரா. எல்லாம் கனவாய்க் கலைந்து மறைந்து விட்டன.

1929-ல் செங்கற்பட்டில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் மாகாணச் சுயமரியாதை மாநாட்டிற்குத் திரு. சௌந்தர பாண்டியனார் தலைமை தாங்கி அரியதோர் உரையாற்றினார். அவர் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சிக் கழகங்களின் (ஜில்லா போர்ட்டுகள்) தலைவராக இருந்தபோது சில பள்ளிகளில் ஆதி திராவிடர்களைச் சேர்க்க மறுப்பதைக் கேள்விப்பட்டு ஆதி திராவிடப் பிள்ளைகளை எல்லாப் பள்ளிகளிலும் கட்டாயம் சேர்த்துக்



கி.வீரமணி

கொள்ள வேண்டுமென்றும் அப்படிச் சேர்க்க யாரேனும் மறுப்பார்களேயானால் அவர்கள் மீது தக்க ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் சுற்றறிக்கை அனுப்பினார். ஆதி திராவிடப் பிள்ளைகள் படிப்பதற்கு வர மறுக்கிறார்கள் என்று பொய்க் காரணம் காட்டிய சில தலைமை ஆசிரியர்களை அவர் வேலையினின்றும் அறவே நீக்கினார்.

இந்தக் காலத்தில் சில பேருந்துகளில் அளிக்கப்படும் பயணச் சீட்டுகளில் ஆதி திராவிடர்கள் ஏற்றப்படமாட்டார்கள் என்று அச்சிடப்பட்டிருந்தது. ஆதி திராவிடர்களை ஏற்ற பேருந்துகள் எவையேனும் மறுக்குமேயானால் அந்தப் பேருந்துகளின் உரிமங்கள் உடனே அகற்றப்படும் என்று திரு. சௌந்தரபாண்டியனார் மாவட்ட ஆட்சிக் கழகத்தின் சார்பாக ஆணை பிறப்பித்தார். அதன்பிறகு எல்லாப் பேருந்துகளிலும் ஆதி திராவிடர்கள் ஏற்றிக்கொள்ளப்பட்டார்கள்.

தந்தை பெரியாரும், தாழ்த்தப்பட்டோரும் என்ற நூல் அன்றிருந்த சமூக இழி நிலையை அப்படியே கண்முன் காட்டுகிறது.

*(அது பற்றி மறு வாரம்)*


உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கலகரமான நிகழ்ச்சிகள், மற்றும் மேடை நிகழ்ச்சிகள் அனைத்திலும் இசைமழையில் நனைந்திட ஐரோப்பா புகழ்

* ஈழநிலா *

தொடர்புகட்கு:
இயக்குநர் எஸ்.எஸ். தில்லைச்சிவம்
Tel: 01 40 37 56 69

# தமிழீழ உருவாக்கத்திற்கு இந்தியாவில் பெருகிவரும் ஆதரவு

## உலக வரலாற்றை அறியாத நிலையில் கதிர்காமர்

இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் கதிர்காமர் கொழும்பில் உள்ள அயல்நாட்டுச் செய்தியாளர்கள் சங்கத்தில் ஓகஸ்ட் 24-ம் தேதி ஆற்றிய உரையினை 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையின் கொழும்பு செய்தியாளர் பி.கே.பாலச்சந்திரன் தொகுத்துத் தந்துள்ளார். இந்தியாவும் உலகமும் தனித் தமிழீழம் அமைவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது எனக் கதிர்காமர் கூறியுள்ளார். இதை எவ்வாறு அவர் கண்டறிந்தார்?

கிழக்கண்ட் பிரிவினைகளை உலகம் அங்கீகரித்துள்ளதைக் கதிர்காமர் அறியவில்லையா?

பாலஸ்தீனம் பிரிக்கப்பட்டு இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. சோவியத் ஒன்றியம் பல்வேறு சுதந்திர நாடுகளாகச் சிதறிவிட்டது. அயர்லாந்து நாடு ஐரிஸ்



சந்திரிகா

குடியரசு என்றும் வடக்கு அயர்லாந்து என்றும் இரண்டாகப் பிரிந்துவிட்டது. ஒன்றாக இருந்த மலேயா நாடு மலேசியா என்றும் சிங்கப்பூர் என்றும் இரண்டாகப் பிரிந்துள்ளன. செக்கோஸ்லோவேகியா செக் என்றும் ஸ்லோவேகியா நாடு என்றும் இரண்டாகப் பிரிந்துவிட்டன. எத்தியோப்பியாவும், எரித்தியாவும் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. செச்சீனியா, போஸ்னியா, கொசோவோ, கிழக்குத் தீமோர் ஆகியவை தனி நாடுகளாக உருவெடுத்துக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவின் நிலைகுறித்து கதிர்காமருக்கு யார் கூறியது? உடன்பாட்டின் கீழ் தனித் தமிழீழம் உருவாகுமானால் இந்தியா அதற்கு நிச்சயமாக எதிர்ப்பு தெரிவிக்காது. மறைந்த பிரதமர் இந்திராகாந்தி, தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். ஆகியோர் தமிழ்ப் போராளிக் குழுக்களை ஊக்குவித்தனர். சூழ்ச்சித் திறன் மிக்க ஜெயவர்த்தனா, ராஜீவ் காந்தியை ஏமாற்றினார். இலங்கையில் உள்ள தமிழர்கள் தனிநாடு பெற்றால் இந்தியாவில் உள்ள தமிழ்நாடும் பிரிந்துபோய்விடும் எனக் கூறி ராஜீவ் காந்தியை நம்ப வைத்தார்.

**இந்தப் பிரச்சினையில் இந்தியா தலையிடுவதற்கான வழியில்லை என்றும் கூறிய கதிர்காமர் பா.ஜ.க. அரசு உட்பட இந்தியாவில் புதிய அரசுகள் அமையும் ஒவ்வொரு முறையும் முதல் நபராக டில்லிக்கு ஓடோடிச் செல்வது ஏன்?**

தமிழீழம் உருவாவதற்குத் தமிழ் நாட்டிலும் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் ஆதரவு திரண்டு வருகிறது. 72 அமைப்புகளுக்கு மேல் உள்ளடக்கிய குடை அமைப்பான தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு தமிழீழத்திற்கு முழுமையான ஆதரவு தந்து வருகிறது. இந்தியாவில் பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சி அமைந்த பிறகு ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக மூன்று விண்ணப்பங்கள் பிரதமர் வாஜ்பாயிடம் அளிக்கப்பட்டன. ஜெயலலிதா, ராமதாஸ், வைகோ, குமாரமங்கலம் உட்பட 32 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல தலைவர்கள் கையெழுத்திட்டு முதல் விண்ணப்பத்தை அளித்தனர். தமிழ்நாடு ராஷ்டிரிய ஜனதா தளத்தின் தலைவரும் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 முக்கிய தலைவர்களும் கையெழுத்திட்ட இரண்டாவது விண்ணப்பமும் அளிக்கப்பட்டது. சிங்கள அரசின் ஒடுக்குமுறைக்கு எதிரான சர்வதேசப் பிரச்சினை இயக்கத்தின் சார்பில் வட மாநிலங்களைச் சேர்ந்த 34 தலைவர்கள் கையெழுத்திட்ட மூன்றாவது விண்ணப்பமும் அளிக்கப்பட்டது. இவர்களுள் பெரும்பாலோர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவார்கள்.

1997ஆம் ஆண்டு டிசம்பரில் டில்லியில் ஈழத் தமிழர் ஆதரவு சர்வதேச மாநாடு நடத்தப்பட்டது. கடல்கடந்த நாடுகளிலிருந்தும் இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும் பல தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்துகொண்டு பேசினார்கள். 'இந்த மாநாட்டில் முன்னாள் உச்ச நீதி மன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யரைத் தலைவராகவும், ஜார்ஜ் பெர்ணான்டசை அமைப்பாளராகவும் கொண்ட ஈழத் தமிழர் ஆதரவு தேசியக்குழு அமைக்கப்பட்டது. 1997-ம் ஆண்டு டிசம்பரில் கர்நாடக மாநிலத் தலைநகரான பெங்களூரில் ஈழத் தமிழர் ஆதரவு மாநாடு நடத்தப்பட்டது. பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த தலைவர்கள் இம் மாநாட்டில் பேசினார்கள். தமிழ்நாட்டில் நடைபெற்ற பல மாநாடுகள், கருத்தரங்குகள், கூட்டங்கள் ஆகியவற்றில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தொடர்ந்து ஆதரவு திரட்டப்பட்டு வருகிறது.

ம.தி.மு.க., பா.ம.க. ஆகிய கட்சிகள் தங்களது தேர்தல் அறிக்கைகளில் தமிழீழத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. அமெரிக்காவில் வாழும் தமிழகத் தமிழர்கள் ஆண்டுதோறும் நடைபெறும் தங்களுடைய மாநாடுகளில் தமிழீழத்திற்கு ஆதரவாகப் பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளனர். பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாட்டுக் கிளையும் , ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. சுதந்திரத் தமிழீழம் கோரிக்கையை இந்தியா ஒருபோதும் அங்கீகரிக்காது என்றும் இந்தப்



கதிர்காமர்

பிரச்சினையில் இந்தியா தலையிடுவதற்கான வழியில்லை என்றும் கூறிய கதிர்காமர் பா.ஜ.க. அரசு உட்பட இந்தியாவில் புதிய அரசுகள் அமையும் ஒவ்வொரு முறையும் முதல் நபராக டில்லிக்கு ஓடோடிச் செல்வது ஏன்?

இந்திய உள்துறை அமைச்சர் அத்வானியை அவர் சந்தித்த போது ஈழத் தமிழர் துயரம் பற்றிய தர்ம சங்கடமான கேள்விகளை அவர் எதிர்நோக்க வேண்டி இருந்தது என பத்திரிகைச் செய்



ராமதாஸ்


திகள் குறிப்பிட்டிருந்தன. 1983-ம் ஆண்டு நடைபெற்ற இனக் கலவரங்களுக்குப் பிறகு சிங்களவர்களுடன் தமிழர்கள் இணைந்து வாழ முடியாது என பிரபாகரன் கருதியதில் நியாயம் இருக்கலாம் எனக் கதிர்காமர் கூறியுள்ளார்.

ஆனால் அதிலிருந்து இன்று வரை நிலைமையில் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை. 1983-ம் ஆண்டு ஜூலைக் கலவரத்தில் சிங்கள வெறியர்களால் 3,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதிலிருந்து இதுவரை சிங்கள இராணுவத்தினரால் 60,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானவர்கள் கண்டபடி கைது செய்யப்பட்டுச் சித்திரவதைகளுக்கு ஆளாகியுள்ளனர். பாலுறவு வல்லுறவிற்கு உள்ளாகியுள்ளனர். பல ஆயிரம் கோடி ரூபாய்களுக்கான சொத்துகள் நாசமாக்கப்பட்டன.

மேலும் அந்தச் செய்தியில் அமைச்சர் கதிர்காமரே தானும் ஒரு தமிழர் என்கிற முறையில் 'தமிழர்கள் பிரிவினையை விரும்பவில்லை. விடுதலைப் புலிகளின் போக்கு போதும் எனச் சொல்லும் நிலை ஏற்பட்டுள்ளது' எனக் குறிப்பிட்டுள்ளார். அவரின் இந்தக் கூற்று மிக வேடிக்கையானது' தமிழ்ச் சமுதாயத்தோடு அவருக்கு எத்தகைய தொடர்பும் கிடையாது. தமிழர்களால் அவர் தேர்ந்தெடுக்கப்படவுமில்லை, சிங்களவர் கூட அவரைத் தேர்ந்தெடுக்கவில்லை. குடியரசுத் தலைவர் சந்திரிக்காவினால் நாடாளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்டவர் அவர். தனது அமைச்சரவையில் ஒரு தமிழர் இருக்கிறார் என உலகுக்குக் காட்டவே கதிர்காமரைச் சந்திரிகா நியமித்தார்.

பல ஆண்டுகளாகத் தொடர்ந்த இனப்பாகுபாடு, ஒடுக்குமுறை, தோல்வியடைந்த பேச்சு வார்த்தைகள், கணக்கற்ற, இனக் கலவரங்கள் இவற்றின் விளைவாகத் தனிநாடு பெறுவதைத் தவிரத் தங்களுக்கு வேறு வழியில்லை என உணர்ந்த தமிழர்கள் 1997-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் தமிழீழத்திற்கு ஆதரவாக மிகப் பெரும் அளவில் வாக்களித்தார்கள். கடந்த 16 ஆண்டுக் காலத்தில் புலிகளுக்குத் தமிழர்கள் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறார்கள். இந்த ஆதரவை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்வார்கள் என எந்த அடிப்படையில் அமைச்சர் எதிர்பார்க்கின்றார்.

உண்மையில் விடுதலைப் புலி



வைகோ

கள் தங்களுக்காகப் போராடி வருவதால்தான் கடந்த 16 ஆண்டுக் காலத்தில் இனக்கலவரங்கள் ஏற்படவில்லையென்று தமிழர்கள் கருதுகிறார்கள். பேச்சு வார்த்தையின் மூலம் அரசியல் தீர்வு காணவே குடியரசுத் தலைவர் சந்திரிகா விரும்புவதாக அமைச்சர் கதிர்காமர் கூறியிருக்கிறார். அதனால்தானோ என்னவோ அழிவையும் சாவையும் அள்ளித் தருகிற கொடுமையான ஒரு போரைச் சந்திரிகா தொடர்ந்து நடத்தி வருகிறார். மூன்றாவது நாட்டின் மத்தியஸ்தம் வேண்டும் என மீண்டும் மீண்டும் புலிகள் வலியுறுத்தி வருவதை அவர் ஏற்க மறுக்கிறார்.

*நன்றி:- தென்செய்தி*


**தமிழர் வித்தியாலயம்**

**75, rue Philippe de Girard, 75018 Paris - Tel: 01 40 05 11 16**

Métro: Marx Dormoy அல்லது La Chapelle அல்லது Bus: 65

இந்த ஆசிரியரிடம் பிரெஞ்சு கற்றவர்கள் கல்விநிலையங்கள் நடாத்துகிறார்கள்.
பிரெஞ்சு படிப்பிக்கிறார்கள் மொழி பெயர்ப்பாளராகப் பணி புரிகிறார்கள்.
பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்கிறார்கள். உரியவர்களிடம் உசாவிப் பாருங்கள்.
இலைமறைகாய் உண்மை வெளிவரும்.

★ தகைமை + அனுபவம் உள்ள ஆசிரியர்கள். தரமான கல்வி. சுவடிய நேரம். குறைவான கட்டணம்

★ சத்தியப்பிரமாணம் செய்த நீதிமன்ற மொழிபெயர்ப்பாளரின் மொழி பெயர்ப்புச் சேவை வாரநாட்களில் உண்டு

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 22.09.1999**

**பிரெஞ்சு மொழிப் பயிற்சி வகுப்பு** Cours de français

வேலை, மருத்துவம், கடிதம், குடியுரிமை போன்ற எதுவாக இருந்தாலும் உங்கள் காரியங்களை நீங்களாகவே செய்வதற்கு ஏற்ப கற்பிக்கப்படும் பிரெஞ்சு வகுப்புக்கள் ஆரம்பம் ஆகின்றன.

- ஆறு மாத கால சனி-ஞாயிறு வகுப்புக்கள்.
- திங்கள் -புதன்-வியாழன்-வெள்ளி இடம்பெறும் மூன்று மாத கால வகுப்புக்கள், **காலை: 10.00 மணி–12.00 மணி அல்லது மாலை: 15.00 மணி –17.00 மணி**

இதைவிட, கற்பவர்களின் நேரம்–தரம் என்பவற்றிற்கேற்ப குறுகிய காலத்தில் பேச – எழுத கற்றுக்கொள்வதற்கான தனி வகுப்புகளும் உண்டு.

**நல்ல ஆங்கிலம்** Good English

Toefl க்குத் தயார்செய்து பரீட்சைக்குத் தோற்ற ஒழுங்கு செய்யப்படும்.

**டியூசன் வகுப்புக்கள்** Soutien Scolaire

CP தொடக்கம் Terminal வரை
ஒரு பாடம் வாரத்தில் இரு தடவைகள். வகுப்பில் படித்த பாடங்களை மீட்டு, வீட்டு வேலைகளைச் செய்வதற்கு உதவி செய்வது முதல் பாடநேரத்திலும், அடுத்து படிக்க இருக்கும் பாடங்களை முன்கூட்டியே தயார் செய்வது இரண்டாம் பாடநேரத்திலும் இடம்பெறுகிறது.
**சனி, புதன், பிற்பகல், மாலை, ஞாயிறு காலை வகுப்புகள்**

ஆரம்பமாகும் பிற வகுப்பு
★ நல்ல தமிழ்

Pub


இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் **செல்வன் சு.கிரிஷோத், செல்வி ந.யனுஜா, செல்வி லக்ஷிகா ஸ்ரீ, செல்வன் சர்வோதயா அருச்சுனன்** பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## குறள் முற்றம்


**'இலம் என்று அசை இ இருப்பாரைக் காணின் நிலம் என்னும் நல்லாள் நகும்'**

பிழைக்க வழியில்லை என்று சோம்பியிருப்பாரைக் கண்டால் அவரது நிலையை எண்ணி நிலம் என்கின்ற தாயானவள் சிரிப்பாள்.

## கண்டுபிடியுங்கள்




அப்பிளைத் துளைத்துள்ள அம்பு எது?




### கடந்தவார விடை

5–வது பெட்டி. இங்கு அம்புக்குறியிட்டுக் காட்டப்பட்டுள்ள பகுதி மற்றப் பெட்டிகளிலிருந்து மாறுபட்டுள்ளது.

## அறிவியல் முற்றம்

### சொற்சிதறல் எண் - 48

பிள்ளைகளே! சொற்களைக் கண்டுபிடிக்க முயன்று பாருங்கள். முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 (X) | 8 | 9 (X) | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 |

**இடமிருந்து வலம்**


1. 1–5 இறுதி அல்லது முடிவு என்றும் சொல்லலாம்.
2. 11–15 உங்களுக்கு விருப்பமான விளையாட்டுப்பொருள். இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளன.
3. 16–20 உபயோகம் என்றும் பொருள்படும்.
4. 22–25 நீங்களும் சில வேளைகளில் இது புரிபவர்களாக இருப்பீர்கள். இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளன.

**மேலிருந்து கீழ்**

5. 1–21 காடுகளில் காணப்படும் ஒருவகைக்கொடி. தமிழீழத்தில் ஒரு ஊரின் பெயரையும் குறிக்கும்.
6. 12–22 உழுந்தைப் போன்று பருப்பு வகையைச் சேர்ந்த சிறு தானியம்.
7. 3–18 தாய் நாட்டிற்காகவும் தமிழ் மக்களுக்காகவும் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் உண்ணாவிரதப் போர் நடாத்தித் தன் உயிரைத் தியாகம் செய்தவர். இவரது நினைவு நாள் 26.09.99 ஆகும்.
8. 14–24 சுமை என்றும் சொல்லலாம். எழுத்துக்கள் குழம்பியுள்ளன.
9. 5–25 தாய்–தகப்பன்–பிள்ளைகளை ஒன்றாய்ச் சேர்த்து இப்படிச் சொல்வர். இங்கு எழுத்துக்கள் கீழிருந்து மேலாக உள்ளது.

**சொற்சிதறல் எண் நாற்பத்தி ஏழின் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| பீ | டை | | மா | ன் |
| | ரோ | ஜா | | |
| தி | நீ | | ம | கா |
| ட | | ஆ | ந் | தை |
| ம் | | லை | தை | |




## குட்டிக்கதை படிப்போம்

# கெட்டிக்காரப் பவானி

*(கடந்தவாரத் தொடர்ச்சி)*

இப்படி ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொண்டு வீட்டுக் கூடத்தில் விளையாடிக் கொண்டே இருந்தபோது வெளியேயிருந்து ஒரு பூனை ஓர் எலியைத் துரத்திக்கொண்டு அவர்களுக்குப் பக்கத்திலேயே பாய்ந்து வந்தது. பயந்து ஓடி வந்த உண்மை எலி, பவானியின் பொம்மை எலிமேல் குதித்துத் தாவி சமையலறைக்குள் வேகமாக ஓடி ஒளிந்து கொண்டுவிட்டது. பின்னால் ஓடி வந்த பூனையோ, அவசரத்தில் பொம்மை எலியை உண்மை எலியென்று நினைத்துக்கொண்டு, அதை 'லபக் கென்று வாயில் கவ்வியடி வீட்டுக்குப் பின்புறமாக ஓடிவிட்டது.

ரவியும், பவானியும் இதைப் பார்த்ததும் 'கொல்'லென்று சிரித்துவிட்டார்கள். ஆனால் அருமைப் பொம்மை எலி, பூனை வாயில் மாட்டிக்கொண்டு விட்டதே.... விட்டுவிடுவார்களா? பூனையைத் துரத்திக்கொண்டே ஓடினார்கள்.

பவானி வீட்டுப் பின்புறத்தில் புயல் அடித்ததால் ஒடிந்து விழுந்த ஒரு பெரிய மரத்தின் அடிப்பாகம், அப்படியே பூமிக்குமேல் மூன்று அடி உயரத்திற்கு நின்றிருந்தது. அதன் நடுத்தண்டுப் பகுதியில் ஓட்டை விழுந்து குழாய் மாதிரி இருந்தது. முன்தினம் பெய்திருந்த மழையால் இந்த அடிமரத்திற்குள் தண்ணீரும் நிரம்பியிருந்தது.

பொம்மை எலியுடன் ஓடிவந்த பூனை இந்த அடிமரத்தின் மீது தாவி உட்கார்ந்துகொண்டு வாயில் கவ்வி வந்த எலியை இலேசாகக் கடித்துப் பார்த்தது. அப்பொழுது அந்தப் பொம்மை எலி தவறி மரப்பொந்தில் 'லபக்'கென்று விழுந்து, அதிலிருந்த தண்ணீருக்குள் மூழ்கிவிட்டது. பவானியும், ரவியும் பூனையை விரட்டிவிட்டு மரப்பொந்தைப் பார்த்தார்கள். தண்ணீருக்குள் மூழ்கிவிட்டிருந்தது அது. உள்ளே கையை விட்டுத் தேடிப் பார்க்கலாமா என்று பவானி யோசித்தாள். ஆனால் பொந்து உள்ளே ஏதாவது பூச்சிகள் இருந்து கடித்துவிட்டால்? அதனால் அப்படிச் செய்ய அவளுக்குத் துணிவில்லை.

'புத்தம் புதிய பொம்மை எலி, அதுவும் ஐம்பது ரூபாய் மதிப்புள்ள எலி. இப்படி மரப்பொந்தில் தண்ணீருக்கடியில் மாட்டிக்கொண்டுவிட்டதே' என்று பவானிக்கு ஒரே வருத்தமாக இருந்தது. எப்படி எலியை வெளியே எடுப்பது என்று இருவருக்கும் தெரியவில்லை. இரவும் வந்துவிட்டது. இதைப்பற்றி அப்பாவிடம் சொல்லவும் பயமாக இருந்தது. பேசாமல் படுக்கப் போய்விட்டார்கள்!

ரவி தூங்கிவிட்டான். ஆனால் பவானிக்குச் சரியாகத் தூக்கம் வரவில்லை. எப்படி எலியை வெளியே எடுப்பது என்பது பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள். அவள் முயற்சி வீண்போகவில்லை. ஒரு நல்ல வழி தெரிந்தது. பொழுது விடிவதற்காகக் காத்திருந்தாள்.

அடுத்தநாள்!

பவானி வாசலில் நின்றிருந்த ரவியிடம் ஓடிப் போய், 'ரவி! சீக்கிரமாக வா! எலியை எடுக்க வழி தெரிந்துவிட்டது' என்றாள்.

எப்படி... எப்படி? - ரவி கேட்டான்.

'உடனே உன் லாடக் காந்தத்தைக்கொண்டு வா! போ' என்றாள் பவானி.

ரவி கொண்டு வந்த லாடக்காந்தத்தில் முதுகுப் பகுதியில் ஒரு கயிற்றைக் கட்டினாள் பவானி. அதை மரப்பொந்திற்குள் விட்டாள். கயிற்றை மேலும் கீழுமாக ஆட்டினாள். ஓர் இடத்தில் இரும்போடு இரும்பு மோதுவதுபோன்று 'லொடக்' 'லொடக்'கென்று சத்தம் வந்தது. பவானி மறுபடியும் அதே இடத்தில் காந்தம் படும்படி கயிற்றைவிட்டுத் தூக்கினாள். காந்தத்தோடு ஏதோ ஒட்டிக்கொண்டு வருவதுபோல் தெரிந்தது. கயிற்றை வெளியில் மெதுவாகத் தூக்கிக்கொண்டே வந்தாள். அதன் கீழே லாடக்காந்தத்தில் ஒட்டிக் கொண்டு

'ஆ! எலி வந்துவிட்டது!' ரவியும் பவானியும் ஒரே சமயத்தில் மகிழ்ச்சியுடன் கத்தினார்கள்.

எலியை எடுத்து நன்றாகத் துடைத்தாள் பவானி. சாவி கொடுத்துப் பார்த்தாள். எலி ஓடியது. நல்லவேளை! ஒன்றும் ஆகவில்லை.

இரும்புக் குண்டுகளை லாடக்காந்தம் வேகமாகத் தன் பக்கம் இழுக்கும் என்று பவானிக்குத் தெரியும் இல்லையா? அப்படியே இரும்பாலான தன் எலிப்பொம்மையையும் அந்தக் காந்தம் இழுத்துத் தன்னுடன் ஒட்டவைத்துக்கொள்ளும் என்று அவள் நம்பினாள்! செய்தும் பார்த்தாள்! வெற்றியும் பெற்றுவிட்டாள்!

கெட்டிக்காரி... பவானி!

# தியாகி திலீபன்



26.09.99 அன்று தியாகி திலீபனின் நினைவு நாளாகும். தியாகி திலீபனை உங்களுக்குத் தெரியுமா?

தமிழீழ மக்கள் சிறீலங்கா அரசின் அடக்கு முறைக்கு எதிராக போராடிக்கொண்டிருந்த வேளையில் தமிழீழ மக்களுக்கு உதவ வருகிறோம் எனக் கூறிக்கொண்டு இந்திய அந்நியப் படையினர் தமது படை பலத்துடன் தமிழீழ மண்ணில் வந்து இறங்கினார்கள். ஆனால் வந்திறங்கிய சில மாதங்களிலேயே சிறீலங்கா அரசின் நண்பர்களாக மாறித் தமிழீழ மக்களுக்கும், போராளிகளுக்கும் அநீதி புரிய முற்பட்டார்கள்.

சிறீலங்கா அரசின் அடக்கு முறை நடவடிக்கைகளுக்கு இந்திய அந்நியப்படைகள் ஆதரவு புரிந்தன. இந்த அநீதியை எதிர்த்து, தனது மக்களுக்காகச் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்தினார் தியாகி திலீபன். அகிம்சையின் தந்தை எனப்போற்றப்படும் மகாத்மாகாந்தி பிறந்த தேசத்தின் படையினர், திலீபனின் நீதியான அகிம்சைப் போராட்டத்திற்கு 'மதிப்பளிப்பார்கள்' என்று எல்லோரும் நம்பினார்கள்.

ஆனால் '12 நாட்கள் ஒரு சொட்டு நீர்கூட அருந்தாமல்' தனது மக்களுக்காக உண்ணா விரதமிருந்து தனது உயிரைத் தியாகம் செய்தார் திலீபன். தமிழீழ மக்களுடைய போராட்ட வரலாற்றிலே தியாகி திலீபனின் தியாகம் முக்கியமானதாகப் போற்றப்படுகிறது.

தமிழீழத்தின் ஊரெழு என்னும் கிராமத்தில் பிறந்த திலீபன், சிறுவயதிலேயே துடிப்பும், ஊக்கமும், திறமையும் நிறைந்து விளங்கினார். பெரியவனாகி தாய் நாட்டிற்காகவும், தனது மக்களுக்காவும் தனது உயிரையே தியாகம் செய்தார்.

நாங்களும் இந்த உயர்ந்த தியாகியை மனதில் இருத்திப் போற்றுவோமாக!




# அலம்பில் முகாமைக் கைவிட்டோடிய படையினர்

அலம்பிலில் நிலை கொண்ட படையினரின் முகாமைத் தாக்கியழிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வேவுப் புலிகளால் வேவு பார்க்கப்பட்டுக் கொண்டிருந்தவேளை, அம் முகாமைத் தாக்கியழிப்பதற்கு முன்னர் ஒத்திகை நடவடிக்கை போன்று அதனது சில காவலரண்களைத் தாக்கியழிப்பதற்கான திட்டம் ஒன்று முதலில் வகுக்கப்பட்டது. ஆகஸ்ட் மாதம் 24ம் திகதி புலிகளின் விசேட தாக்குதல் அணியினர் இக் காவலரண்களைத் தாக்கி அழிப்பதற்கான முயற்சியில் ஈடுபடத் தொடங்கினர். சில மணி நேரங்களுக்குள்ளேயே காவலரண்களைத் தாக்கியழித்து, கைப்பற்றிக் கொண்ட போராளிகள் அங்கிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொண்டு பின்வாங்கினர். இத் தாக்குதல் நடவடிக்கையில் கப்டன் அக்பர்-அன்பரசன் (திருச்செல்வம் சதீஸ்குமார்- தேவபுரம் மட்டக்களப்பு), 2ம் லெப்.சுடர் (கந்தசாமி கௌரீஸ்வரன் காக்காச்சிவெட்டை மண்டூர்) ஆகிய போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

**முகாம் மீது புலிகள் தாக்குதல் நடாத்தி அதனைக் கைப்பற்றிக்கொண்டால், மணலாற்றுத் தாக்குதலுக்காகக் குவித்து வைத்திருக்கும் தமது பெறுமதியான பல ஆயுத தளபாடங்கள் புலிகளின் கைகளுக்குப் போய்விடும் என்பதை உணர்ந்துகொண்டனர். அதனால் அம் முகாமைக் கைவிட்டுப் பின்வாங்குவதே சிறந்ததெனக் கருதினர்.**

* * *

## கும்பகர்ணன் சமர்

கும்பகர்ணன் மலையில் இருந்து மண்கிண்டிமலை நோக்கிச் சென்ற இராணுவ அணியொன்றை 09.09.92 அன்று வழிமறித்த புலிகளின் அணி, அப் படையினர் மீது கடும் தாக்குதலைத் தொடுத்தது. புலிகளின் இவ் அதிரடித் தாக்குதலால் நிலை குலைந்த படையினர் ஆயுதங்களையும் போட்டுவிட்டு கால் போன திசைகளில் எல்லாம் சிதறியோடத் தொடங்கினார்கள். ஓடிய படையினர் புலிகளால் விரட்டித் தாக்கப்பட்டனர். படையினர் பலரை இழந்த நிலையில், ஏராளமான ஆயுதங்களையும் பறிகொடுத்த நிலையில், எஞ்சிய படையினர் கும்பகர்ணன் மலை முகாமிற்கு ஓடித் தப்பித்துக்கொண்டனர். இவ் வெற்றிகரமான தாக்குதலில் 2ம் லெப். சூடாமணி-சம்பத் (சுப்பிரமணியம் விக்னேஸ்வரன்- நானாட்டான் மன்னார்) என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

* * *

## நினைவுநாள் தாக்குதல்

கொக்குத்தொடுவாயில் பதுங்கியிருந்து கப்.சிவராஜ், கப். ரத்தன், லெப். கர்ணன், லெப். தயான், 2ம் லெப்சுகந்தன் ஆகிய போராளிகள் வீரச்சாவடைவதற்குக் காரணமாக இருந்த கொக்குத்தொடுவாய் முகாம் மீது இப் போராளிகளின் நினைவாக தாக்குதல் ஒன்றை நடாத்த வேண்டும் எனப் போராளிகள் உறுதியாக இருந்தனர். போராளிகள் மீது தாக்குதல் நடாத்திய பகுதியிலேயே படையினருக்கு பெரும் இழப்பை ஏற்படுத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டு அக் காவலரண்கள் பற்றிய வேவுத்தரவுகளும் பெறப்பட்டன. இத் தாக்குதலுக்காக மணலாற்றின் சிறப்புத் தளபதி லெப்.கேணல் அன்புவிடம் இருந்து அனுமதியும் பெற்றுக் கொண்டனர். 27.09.92 அன்று இரவு தாக்குதலுக்கான அணிகள் பிரிக்கப்பட்டு, இரவோடு இரவாக முகாமின் முன்னணிக் காவலரண்களைச் சுற்றி வியூகம் அமைத்து நிறுத்தப்பட்டனர்.

28.09.92 அதிகாலை 3.45 மணியளவில் தாக்குதலுக்கான உத்தரவு வழங்கப்பட்டது. இருளைக்கிழித்துக் கொண்டு மோட்டார் எறிகணைகள் முகாமின் காவலரண்களையும் முகாமின் உட்பகுதிகளையும் ஏககாலத்தில் தாக்கத் தொடங்கின. இதே வேளை தாக்குதல் அணியினர் காவலரண்களை நோக்கித் தாக்குதலை நடாத்தியபடி முகாமை நோக்கி முன்னேறத் தொடங்கியவர்கள், குறுகிய நேரத்துக்குள் காவலரண்களைத் தாக்கியழித்து, முகாமின் 'உட்பகுதிகளையும்' தாக்கத் தொடங்கினார்கள். காலைவரை நீடித்த இத் தாக்குதலில், பத்துக்கு மேற்பட்ட காவலரண்கள் முற்றாகத் தாக்கியழிக்கப்பட்டு ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன் அக் காவலரண்களில் இருந்த படையினர் பலர் கொல்லப்பட்டும், முகாங்களில் இருந்த நூற்றுக் கணக்கணக்கான படையினர் படுகாயப்படுத்தவும் பட்டனர்.

தங்கள் தோழர்களின் இழப்புக்குக் காரணமாக இருந்த படையினருக்கு தகுந்த பதிலடியைக் கொடுத்து, படையினரிடமிருந்து ஏராளமான ஆயுதங்களையும் கைப்பற்றிக்கொண்ட இத் தாக்குதலில் 2ம் லெப். இளம்பிறை-ஞானம் (பாக்கியராஜா ரவி- கட்டைப்பறிச்சான் மூதூர்), லெப். தேவநேயன்- குருசாமி (மயில்வாகனம் சந்திரகுமார்- களுதாவளை மட்டக்களப்பு), கப்டன் திருமலையான்- டேவிற் (பாலகிருஷ்ணன் ஜெயச்சந்திரன்- மின்சாரநிலைய வீதி திருமலை), லெப். கோமகன்- கலீஸ் (பிலிப்பையா பிரேமானந்தன்- பருத்தித்துறை யாழ்ப்பாணம்), 2ம் லெப். வெற்றிவேல்- நியா (சித்திரவேல் இராமச்சந்திரன் - கல்குடா மட்டக்களப்பு) ஆகிய போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

* * *

## அலம்பில்

அலம்பில் முகாம் புலிகளால் தாக்கியழிக்கப்படப்போகுதென்பதைப் புலிகளின் காவலரண்கள் மீதான தாக்குதல் மூலமும், புலிகளின் பல்வேறு நகர்வுகள் மூலமும் படைநிலைத் தளபதிகள் அறிந்துகொண்டனர். முகாம் மீது புலிகள் தாக்குதல் நடாத்தி அதனைக் கைப்பற்றிக்கொண்டால், மணலாற்றுத் தாக்குதலுக்காகக் குவித்து வைத்திருக்கும் தமது பெறுமதியான பல ஆயுத தளபாடங்கள் புலிகளின் கைகளுக்குப் போய்விடும் என்பதை உணர்ந்துகொண்டனர். அதனால் அம் முகாமைக் கைவிட்டுப் பின்வாங்குவதே சிறந்ததெனக் கருதினர். பலத்த இழப்புக்களுடனும், கோடிக்கணக்காகச் செலவிட்டு அலம்பில் பகுதியைக் கைப்பற்றி முகாமமைத்துக் கொண்டு ஐந்து மாதங்களாகத் தங்கியிருந்த படையினர், 1992-ம் ஆண்டு கார்த்திகை 2ம் திகதி தமது முகாமைக் கைவிட்டு நாயாற்றுக் கடல்வழியூடாகப் பின்வாங்கிக்கொண்டனர்.

*(தொடரும்)*

எஸ்.தீரன்


2ம் லெப். ஞானம்


2ம் லெப். நியா


2ம் லெப். சம்பத்


2ம் லெப். சுடர்


கப். அக்பர்


கப். டேவிட்


லெப். கலிஸ்


லெப். குருசாமி

## தவறுதலாக விடுபட்டவை




**லெப்.கேணல் ஜஸ்ரின்**
**பொன்னுச்சாமி பாஸ்கரன் (காங்கேசன்துறை, யாழ்ப்பாணம்)**

சிறீலங்கா படைகளின் பாரிய இராணுவத் தாக்குதலான மின்னல் நடவடிக்கையின் 20வது நாள் நடைபெற்ற பெரும் மோதல் ஒன்றில் லெப். கேணல் ஜஸ்ரின் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவர் விடுதலைப் புலிகளினால் முதன்முதல் ஆரம்பிக்கப்பட்ட சிறந்த படைப்பிரிவான 'சாள்ஸ் அன்ரனி' சிறப்புப் படைப்பிரிவின் துணைத் தளபதியாக இருந்தவர். ஆனையிறவு படைத்தளம் உட்பட பல முகாங்களின் தாக்குதலின் களங்களிலும், பின்னணியிலும் நின்று தொலைத்தொடர்பிற்கு (Communication) பொறுப்பாக நின்று தாக்குதல்களை வழி நடத்திச் சென்ற சிறந்த போராளி. 17.09.91 அன்று காட்டினைக் கைப்பற்றும் சிங்களப் படைகளின் முயற்சிக்குப் பலத்த பதிலடிகொடுத்து வீரச்சாவடைந்தார்.

### ஹயசேன

ஆனையிறவு படைத்தளத்தின் மீதான புலிகளின் முற்றுகைத் தாக்குதலைத் தடுத்து நிறுத்துவதற்காக மணலாற்றின் மீது சிறீலங்கா படைகள் 15.07.91ல் இருந்து மேற்கொண்ட ஹயசேன-1, 2, 3 என்ற தாக்குதல்களைத் தடுத்துநிறுத்திப் படையினரைக் காட்டைவிட்டே விரட்டியடித்த வீரவரலாற்றில் 25ற்கு மேற்பட்ட போராளிகள் வீரச்சாவடைந்தனர். அவர்களில் கப்டன் பசிலன் (சந்திரசேகரன் விமலநாதன்- கொக்குத்தொடுவாய் மணலாறு), லெப். பிரதாப் (சண்முகம் முரளீதரன்- செங்கலடி மட்டக்களப்பு), கப்டன் நியூட்டன் (அந்தோனி செபமாலை- முதலைக்குத்தி உயிலங்குளம்), லெப். நிக்சன் (ஜெயபாலன் அன்னராசா- புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு), கப். கிளாஸ்நிக்கோவ் (பேரின்பராசா ஜீவானந்தராசா- மேன்காமம் மூதூர்), கப். மனோ கோணலிங்கம் சிறீதரன்- குச்சவெளி திருமலை), கப். இளங்கோ (கனகராசா இளங்கோ- கம்பர்மலை யாழ்ப்பாணம்) ஆகிய போராளிகளின் பெயர் விபரங்கள் கிடைப்பெற்றுள்ளன.



சிறு கதை

# உயிரோவியம்

சாந்தியின் அழகை நான் கண்டிராவிட்டால் என் கண்கள் அன்றும், இன்றும் குருடாகவே இருந்திருக்கக் கூடும். இதயம் அவளிடமும் கண்கள் 'பிரான்ஸ்' மண்ணிலுமாக உள்ளன. அவள் மீது காதல் கொண்டேன்! என்று சொல்வதில் நெஞ்சுக்குப் பெருமையாகத்தான் இருக்கின்றது. பௌர்ணமி நிலவின் அழகை இந்தப் பிரான்ஸ் மண் நீலவானில் காணும்போது வெறுப்பாகத்தான் தோன்றும். குதிரை முகம்போல் நீண்ட மஞ்சள் முக, சணல்முடி மாதர்கள் என் சாந்தியின் நிழலில்கூட நிற்கமுடியாது என்றே வாதிடுவேன். தினமும் வகிடு பிரித்துவிட்ட கேசங்களால் அழகாகப் பின்னப்பட்டு, இரட்டைப் பின்னலோடு பார்க்கும்போது அலாதியான ஆனந்தத் துள்ளல்-துள்ளும் உள்ளம். அவள் கறுத்திருந்தாலும் 'தேவதைதான்'! இங்கு நிறத்திருக்கும் பெண்களைப் பார்க்கின்ற போது, இவளுகள் என்னென்று அலட்சியப்படுத்துவேன், பதினெட்டு வயதிலும் மிகப்பெரிய வாசகங்களையே வாய் முத்தாகச் சிந்துவாள், அவளைப் பலர் 'துடுக்குக்காரி' என்றே அழைப்பார்கள். நாட்டில் சிங்கள இராணுவம் யாழ். கோட்டையிலிருந்து 'ஷெல்' வீசிய அனர்த்தங்களில் ஆங்காங்கு சிதறிக்கிடக்கும் தமிழரின் உயிரற்ற உடல்களை 'விடுப்புப்' பார்ப்பவர்களை வெப்பிசாரம் கொண்டு நெஞ்சில் ஊண்டித் தள்ளித் துரத்துவாள்! செஞ்சிலுவைச் சங்கச் சேவைப் பெண்களைப் போல் ஓடிக்களைத்து உதவிபுரிவாள். அடிக்கடி அவளது நடை, உடை, பாவனைகளைக் கவனித்து ஒரு கணிப்புப் போட்டிருந்தேன்..

பொதுவாக உரையாடும் போதும் மெதுவாக ஏதோவொரு ஆத்மார்த்தமான ஆதங்கம் அவளிடமிருந்து சதா தொனிக்கும்..

ஒருநாள் நெடுநேரமாகிவிட்டது.

அடைக்கலமாதா கோயில் விளக்குகளும் அணைக்கப்பட்டுவிட்டன. திறந்திருந்த கதவுகளும் பூட்டப்பட்டது. ஷெல்லடியால் சிதைந்துபோன பின்புறக் கோபுரத்தின் அருகில் நெடுமரமாய் வளர்ந்து நின்ற 'மகோர்க்கனி' மரத்தோடு முதுகை முட்டவைத்து நின்றேன். சாந்தி 'தொண்டுக்குப்' போய் வரும் நேரம். என் புருவங்களைச் சற்று உயர்த்தினேன். இண்டைக்கு இவளிடம் நேரடியாகக் கேட்டுவிடவேணும் என்று முடிவுசெய்தேன். 'தாமதத்திற்கு மன்னிக்கவும்' என்றவள் நெருங்கினாள். 'என்னவும் சாந்தி உம்மடபோக்கப் புரிஞ்சிக்கக் கஷ்டமாகக் கிடக்கு' என்று கேட்டேன். கறுத்த முகத்தில் எழும்பிய இமைகளிடையே ஜொலித்த கருமணிகள் மிரட்சிகொண்டு பிதுங்கி உருண்டன. 'நீர் அக்கறையோடுதான் கேக்கிறீரா? புன்சிரிப்போடு திருப்பிக் கேட்டாள்.

நான் மௌனமாகத் தலையாட்டினேன்.

'நாம பாஸ்கர் இப்ப அதிகமாகத் துன்பத்தைத்தானே அனுபவிக்கின்றோம்? வாழ்வு துன்பச் சுமைதான்' இருந்தாலும் உயிர்கள் மடிவதில் ஏதேனும் அர்த்தம் இருக்கவேணும் அல்லவா? மேலும் ஆச்சரியத்தோடு புருவங்களை மேலெழுப்பினேன் சொருகிக் கொண்டன. 'என்னைப் பற்றியே சதா யோசனையாக்கும்? பாஸ்கர் நாம் பாவிகளாகிவிட்டோம். நம்ம வீதிகளைப் பாரும். எவ்வளவு பள்ளங்களாகக் கிடக்குதென்று, கட்டடங்களைப் பார் முழுவதும் இடிஞ்சு போய்க் கிடக்குதெண்டு. பச்சப் பசேலென நின்ற மரம், செடி, கொடிகளைப் பார் எப்படி கருகிப்போச்சுதெண்டு, எவ்வளவு காக்கா, குருவிகள், புறாக்கள் பறக்கும். அவைகள் இப்போ எங்கே? இரவில் ஊளையிடும் நாயின் சத்தமாவது கேக்குதா? ஒரு சூனிய இருளுக்குள் அகப்பட்டுத் தத்தளிக்கின்றோம். நம்ம சனம் எத்தனை ஆயிரம்பேர் செத்தும் போச்சினம்-போகினம், நம்மூர் ஆச்சிமார், அம்மாமார் சதா தலையில் கைவைத்து ஒப்பாரியும், பயப்பீதியும், முணு முணுப்போடும்தான் வாழ்க்கையை வலிந்துகட்டி இழுக்கினம். உமக்கும் கவலை இல்லையா'? என்றாள். அவளது இடைவிடாப்பேச்சின் இடையே விடும் மூச்சில் நான் விறைச்சுப்போனேன். திரும்பவும் நான் திடுக்கிடும் வண்ணம் பேசத் தொடங்கினாள்.

'பலர் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நாட்டைவிட்டு ஓடிப்போய்க் காலம் கடத்துவதாகவும் கேள்விப்பட்டேன். சிலர் மண்ணையும், மக்களையும் எண்ணி எண்ணி உதவி புரிவதையும் அறிவேன். நீயும் எந்த ரகத்தோடு சேர்ந்திருக்க நாளைக்கு இந்தப் புண்ணிய மண்ணைவிட்டுப் போறீர்....? நான் உம்மை முழுமையாக நேசிக்கிறேன். இந்நேரம் உங்க அப்பா, அம்மா எங்கட குடும்பம் மேல் இருக்கிற வெறுப்பைப் பயன்படுத்தி, என்னைவிட்டுப் பிரிக்க எத்தனிக்கின்றார்கள். அதன் வெளிப்பாடுதான் இந்தப் பயணமாக்கும்'. என்றவளது தணிந்த குரலில் என்முகம் கோரமாக நெளிந்து தெறித்தது. என் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டேன். ஊரைவிட்டுக் கிளம்பும் ஆண் பிள்ளைகளை உசுப்பும் ஈட்டியின் ஊடறுப்பில் என் சதுரம். நடுங்கியது. திரும்பவும் பேசினாள்.

'பாஸ்கர்! என்று நான் சொல்லுறது சரியா? தப்பா?

'உன்னோடு விவாதிக்க விருப்பம்தான். இருந்தாலும் உன்னையும் கூட்டிப் போகத்தான் ஆசை..! என்ர அப்பாவின் திடீர் ஏற்பாடும், பணமும் இந்த நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டுட்டுது, என்ர பிராணனே போயிடும் போலிருக்குச் சாந்தி'.

இப்படிச் சொன்னபோது அவள் என்னைப் பார்த்துச் சிரித்தாள். என்னுள் ஒரு வெட்கம் கலந்த பயப் பீதியையும் - அது உண்டு பண்ணியது. திடீரென அவள் என் கைகளைப் பற்றிக்கொண்டாள். சற்று மௌனத்தோடு அக்கம்-பக்கம் பார்த்தேன். இரவின் நிசப்தம் நிம்மதியைத் தேடியது. பிறகு அவளது பிரகாசமான கண்களை என்னால் பார்க்க முடியவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் திக்பிரமை பிடித்தவன்போல் 'காதலின்' கனப்பை நெஞ்சினில் அமுக்கினேன். வெடித்துவிடும் விம்மலாகவே இருந்தது. அந்தநேரம் அவள் கேட்டாள்.

'பாஸ்கர் பிரான்சுக்கா போறாய்'?

இதுக்குப் பதில் சொல்லவில்லை.

'நாங்கள் சரியான ஏழைதான் என்னை மறந்திடுவியா பாஸ்கர்'?

என்னைச் சித்திரவதைப்படுத்தியது.

'நீ போனப்புறம் என்னை பிரான்சுக்குப் கூப்பிட்டால்.. நிச்சயம் வருவேன்!' எங்கடை காரியம் கைகூடி உயிரோடு இருந்தால்' அவள் கண்மணிகள் கலங்கிப் போயிருந்தன. என் கண்கள் செவ்வானமாகக் கிடந்தன. திரும்பி விம்மல் மேலிட மெதுவாகக் கேட்டேன்.

'இயக்கத்தில்' ஈடுபட்டிருக்கிறியா?

மௌனம் சற்றும் தளர்வு தோன்ற நிமிர்வு பிறந்தது. உறுதியோடு பேசாதிருந்தவளை சற்று உறுக்கலோடு கேட்டேன்.

'அசடு' பிடிவாதம் பிடிக்காதே சும்மா கிடவும். இதைப்பற்றி ஆறஅமர யோசிச்சியா'? நான் இவ்வார்த்தையைச் சொன்னபோது அவள்பதில் கண்ணீட்டிக் கொண்டு பாய்ந்தன'. என்னுள் நீள் துயர் ஏக்கம் எம்பிக் கெம்பியது. அவள் வாய் திறந்தாள்.

'நீரும் சண்டையைப் பற்றிப் பயப்பிடிறீரா' என்றாள். நான் தலையை அசைத்துவிட்டு 'எந்தச் சண்டையை'?

'இனத்திற்கிடையேயான சண்டையைத்தான்'

'பொத்து வாயை! எனக்கென்ன விசர் பிடிச்சிட்டா? பேசாமல் இருக்கமாட்டாய்'?

'இருந்து என்னத்தப் பண்றது'?

அவளது பதில்களால் எனக்கு அச்சம் பிடித்தாட்டியது. இதயத்தை வாட்டிக் கனக்க யோசிக்கப் பண்ணியது. 'மகோர்க்கனி' மரத்தைப் பிடித்த வலக்கை நடுங்கியது. அவளோ எள்ளளவும் துக்கமின்றியே நின்றாள். நாளைக்கு நான் போனதும் அவளின் நிலைமையையும், துணிவையும் மாறி-மாறி நினைத்து அனலிடைப் புழுவாகத் துடித்தேன். துடிப்போடு இரக்கம்மேலிடக் கேட்டேன்.

'என்னதான் முடிவு சொல்லுறாய்-சாந்தி'?

'முடிவென்ன முடிவு. முடிவதும் முடிவுதானே. நாளைக்குப் பார்ப்போம்'. என்றாள். நான் கேட்டேன்,

'என்னைப் போகவிடு-நீ யுத்தத்திற்குப் போய்விடுவாயா'?

இந்தநேரம் எதிர்பாராத நேரத்தில், எதிர்பார்த்திராத குரல் எங்களைத் திகைக்கவைத்தது! என் தகப்பனார் குரல்தான். இடிவிழுந்த அதிர்ச்சியில் திமிறிய சாந்தி என்னை விட்டுத்தள்ளி போயிற்றாள். நான் பதகளிப்போடு சொன்னேன். 'நாளைக்குக் காலம்புற ஆறுமணிக்கு 'புளிய மரத்தடிக்கு கட்டாயம் வரும்படி' என்று. அவளது வரண்ட குரலின் பதில் எனக்கு விளங்கவும் இல்லை.

என்னை முட்டவந்த அப்பனைப் பார்த்ததும் மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. அவரது அடைச்ச குரல் பெலத்துத் தொனித்தது.

'இங்க என்னநின்று பண்ணுறாயடா?

'......................'

கனத்த சரீரம் அசைந்து அசைந்து அதட்டியது. தடிச்ச மீசையின் துடிப்பு மிரட்சிக் கோபத்தைக் கூட்டியது. சாந்தி குடும்பம் மேலிருந்த உள்ளாந்தரக் கசப்பை ஒருமித்துக்கொட்டிவிட எத்தனிப்பது தெரிந்தது.

'உன்ர மரமண்டை யோசனைதான் என்னடா? இங்க இருக்கப் போறியா? நாளைக்கு காலம்புற பயணம் வெளிக்கிடப் போறாய். அங்க உன்ர அம்மா, தங்கைச்சியைச் சுற்றி அயலவர்கள் இருக்கினம். பெரியப்பா, சின்னையா, மாமி, மச்சாள்மாருக்குப் பயணம் சொல்லப்போறதைவிட்டுட்டு, இதில வந்து நின்று அவள்தான் பெரிசெண்டு நிக்கிறாய்? போயும்-போயும் ஒரு சதத்திற்கு வழியற்ற சனியன்தான் உனக்குப் பெரிசாப்போச்சு. 'என்றவர் ஓங்கி முதுகில் ஒரு போடு போட்டார். பின்னர் விழுந்த வலக்கையால் என் இடக்கையைப் பிடித்திழுத்துக் கொண்டு போய் வீட்டிற்குள் தள்ளினார்! ஒரு பாட்டம் தன் குமுறலையும் சுவர்களில் எதிரொலிக்கக் கத்தினார்.. பலரது குரல்கள் என்னை ஆட்படுத்தியது. ஆத்திரத்தோடு அடித்துப் போட்டமாதிரியே இருந்தேன். அன்றிரவு முழுவதும் நித்திரை வரவில்லை? கதவு திறக்கும் சத்தம் கேட்டது! யார் என்பதை அறியவும் பிடிப்பில்லை. 'கெதியாக வெளிக்கிடு'

'பஸ் உன்னைப் பார்த்துக்கொண்டு காத்து நிக்கப்போகுது' என்று அதட்டினார் அப்பா.

'மகனே இந்தாப்பனே முட்டைக்கோப்பி' குடியப்பனே. அடம்பிடிக்காமல் வெளிக்கிடு அம்மாவும் வாரேன்.

'அண்ணை நான் சொன்னதை மறக்காதே?.. என்றாள் தங்கச்சி.

வானம் வெளுத்தது.

புளிய மரத்தடியில் நின்ற 'மினி பஸ்சைச்' சுற்றி பலரது குரல்கள்... பலவிதமாகத் தொனிக்கின்றன. என்னைச் சுற்றியும் பத்துப் பதினைந்து பேர் வரை நின்றனர். நொடிக்கொரு தடவை சாந்தி வரும் பக்கமே பார்த்துக்கொண்டு, நின்றேன். எனக்கு யார் பேச்சும் காதில் ஏறவில்லை. இதை உணர்ந்த அப்பா இரக்கமாக மெல்லிதாகப் பேசினார்.

'மகனே நல்லபடியாப் போச் சேரு. இப்ப முதலில் பஸ்சில் ஏறுமகனே' என்றார். இதன்பின் பல குரல்கள் கெஞ்சிக்கேட்டன! வற்புறுத்தலாகவும் இருந்தது. இருந்தும் சற்றுச் சாய்வுப் பார்வையில் வடக்கே திரும்பினேன்! கோலமயில் பறந்துவந்து கொண்டிருந்தாள். சுற்றி நின்றவர்களைப் பிளந்துகொண்டு அவள்கிட்டப் போனேன். பின்பு புளிய மரத்தடியின் கீழ் நின்றோம். சாந்தி கூறினாள் 'சந்தோஷமாகப் போய்வா பாஸ்கர்'. நான் திரும்பக் கேட்டேன்.

'என்னை போகவிட்டு-நீ யுத்தத்திற்கும் போய்விடுவாயா'?

அவள் பேச ஆரம்பிக்கும்போது ஏஜென்சி ஜெயத்தின் குரல் குறுக்கிட்டது. 'பஸ் புறப்படப்போகுது' என்றான்.

'கொஞ்சம் பொறுங்க' என்றேன். அவன் ஜெயம், வியாக்கியானம் உரைத்தான்.

'என்ன பாஸ்கர் அடுத்த பிறப்பில் சாந்தியையும் கூட்டி வந்தாப்போச்சு' என்றான். சாந்தி வெட்கத்துடன் நாணியபடி புளிய மரத்தோடு முதுகுமுட்டப் பின் சாய்ந்தாள். அம்மா, அப்பாவின் கள்ள மனசும், வெறுப்பும் குறுக்கீடு பண்ணவில்லை. சனங்களின் வழியனுப்பும் குரலும், அழுகையும் வேண்டுதலும் பிரிவின் துயரமும், விம்மலும் இரைந்தன. மேலும் பஸ் யன்னல் வழியாக ஆமை மாதிரி தலையை நீட்டி குழறியடித்தான் ஜெயம்'. இனிமேல் ஒருவிநாடியும் பொறுக்க் முடியாது என்றான். பஸ் புறப்பட ஆயத்தமானது சாந்தி அமைதியாகவும் தீர்க்கமாகவும் சொன்னாள்.

'விம்மல்கள் தணியும்
விடியும் எழுகவே
மானிடம் போற்றும்
நேயமும் பெருகவே'

உணர்ச்சி கொப்புளித்த வார்த்தைகளோடு என்னைப்பற்றிய அவள் கரங்கள் விடுபட்டன. கண்கள் பேசு பேசெனக் கெஞ்சியது. இரக்கமில்லா பஸ் புறப்பட்டது...

'சாந்தி... சாந்தி என்று குழறியடித்து திமிறி எழுந்து கட்டிலில் பதறியபடி திக்பிரமை பிடித்தவன் போலிருந்தேன். கட்டிலின் பக்கத்திலிருந்த சாந்தியின் சாயல் போட்டோவைப் பார்த்துவிட்டு என்ன இது கனவா? இல்லை இல்லை நிஜம்தான். நடுக்கம் தீர பல வினாடி பிடித்தது. விடியக்காலமையாகிவிட்டது.

வெளிச்சம் யன்னல் கண்ணாடி ஊடாக அனுமதியின்றிப் பரவியது. போர்வையைத் தூக்கி வீசிவிட்டு எழும்பி யன்னல் வழியாகப் பார்த்தேன். எங்கு பார்த்தாலும் தெருவெங்கும் உறைந்த பனிக்கட்டி. குளிர் வாட்டத்தான்போகுது. வேலைக்குப் போவதற்காக ஐந்துமாடிப் படிகள் இறங்கி வீதிக்கு வந்தேன். என்னோடு கூடவே வேலைக்கு வரும் ஆபிரிக்கன் இரக்கத்தோடு கேட்டான். 'என்ன மிசு, பாஸ்கர்! வழமைக்கு மாறாக உன்ர முகம் வானம் கறுப்பதுபோல் கிடக்கு' என்றான். நான் சின்னச் சிரிப்போடு தலையாட்டியபடி வேலைத்தலம் வந்து சேர்ந்தேன். என்னையே தவிப்பேறியவனாக நேர்குத்தப் பார்த்துநின்ற 'குமார்' என் நெஞ்சுமுட்ட ஓடிவந்து நின்றான்:

'டேய் உன்ர சாந்தி வீரச்சா அடைந்துவிட்டாளடா. இங்க பாற்றா போட்டோவும் போட்டிருக்குது'!

அவனது கண்களில் கண்ணீர் கசிந்தது. நெஞ்சில் குத்திய வார்த்தைகளால் நெஞ்சம் இரண்டாகப் பிளந்தது.

'டேய் குமார் இறக்கவில்லை என் இதயத்தில் 'உயிரோவியமாகவே' வாழ்கின்றாள். அவளது வார்த்தைகளால் புனிதமாக்கப்பட்டவனாகவே நான் வாழ்வேன்' என்று உறுதிபடக்கூறினேன்.

(யாவும் கற்பனை)

மா.கி. கிறிஸ்ரியன்.

# தேசிய விருது பெற்ற 13 நிமிட குறும்படம்

மல்லி என்ற படத்திற்கு தேசிய விருது கிடைத்துள்ளது என்ற செய்தியில், அனைவரின் கவனமும் சந்தோஷ் சிவன் இயக்கிய 'மல்லி' படம்தான் நினைவுக்கு வந்தது. ஆனாலும் இன்னொரு 'மல்லி' என்ற 13 நிமிட குறும் படத்திற்கும் தேசிய விருது கிடைத்துள்ளது என்பதை அறிந்தவர்களுக்கு ஆச்சரியம்தான். மாதவ கிருஷ்ணன் என்ற திரைப் படக்கல்லூரி மாணவர் இயக்கியுள்ள படம்தான் இந்த 'மல்லி'.

வெறும் 13 நிமிடங்கள் மட்டுமே ஓடக்கூடிய இந்தப் படத்தின் ஆரம்பக் காட்சியாக ஒரு சின்ன அறைக்குள் ஒரு பெண் உட்கார்ந்திருக்க.. பக்கத்தில் ஒருவன் படுத்திருக்கிறான். அறையின் சூழ்நிலை - பாசி நிறத்தில் சுவர்- ஒரு தினசரிக் காலண்டர்- இரண்டு கொண்டம்- தண்ணீர்ப் பானை- என்று காட்சியின் பின்னணியில் விலைமாதுவின் இருப்பிடமாகக் கதை தொடங்குகின்றது. வந்தவன் 'மல்லி' என்ற அந்தப் பெண்ணைப் பார்த்து 'நீ எத்தனையாவது படிச்சிருக்கே?' என்று கேட்க.. பதிலுக்கு அவள் 'நீங்கள் எத்தனையாவது படிச்சிருக்கீங்க?' என்று கேட்டுவிட்டு அவளே.... 'என்னை விட நிறையப் படிப்பு படிச்சிருப்பீங்க' என்று சொல்லுமிடத்திலேயே அவளின் ஏக்கத்தை வெளிப்படுத்துகிறார் இயக்குநர். வந்தவன் பணத்தைக் கொடுத்துவிட்டு புறப்பட்டுவிடுகிறான். அடுத்த சில நாட்கள் கழித்து அவனே மீண்டும் மல்லியைத்தேடி வருகிறான். மல்லி கதவைத் திறக்க... 'உன்னை நான் திருமணம் செய்து கொள்கின்றேன்' என்று சொல்ல, மல்லி தன்னால் நம்பமுடியாமல் பின்பு அவளைச் சுதாகரித்துக்கொண்டு குதூகலிக்கின்றாள்.



மாதவ கிருஷ்ணன்

> வந்தவன் 'மல்லி' என்ற அந்தப் பெண்ணைப் பார்த்து 'நீ எத்தனையாவது படிச்சிருக்கே?' என்று கேட்க... பதிலுக்கு அவள் 'நீங்கள் எத்தனையாவது படிச்சிருக்கீங்க?' என்று கேட்டுவிட்டு அவளே.... 'என்னை விட நிறையப் படிப்பு படிச்சிருப்பீங்க' என்று சொல்லுமிடத்திலேயே அவளின் ஏக்கத்தை வெளிப்படுத்துகிறார் இயக்குநர்.



திருமணம் செய்துகொண்ட சராசரிப் பெண்கள் சமுதாயத்தில் எப்படி வாழ்கின்றார்களோ அத்தனை அந்தஸ்தும் அவளுக்குக் கிடைக்கின்றது. கோயிலுக்குச் செல்கின்றார்கள். கணவனுடன் சேர்ந்து ஓட்டலில் சாப்பிடுகின்றாள் என்று அத்தனை மகிழ்ச்சியும் அவளுக்குக் கிடைக்கின்றது. ப்டம் ஓடிக்கொண்டிருக்கும் போதும் திடீரென்று ஒரு குரல் மட்டும் Over lap ஆகிறது. 'மல்லி அடுத்த ஆள் வந்தாச்சு சீக்கிரம்' என்றபோதுதான் படம் பார்ப்பவர்களை அப்படியே உறைய வைக்கிறது அந்தக் காட்சி. மல்லி என்ற அந்தப் பெண் இவ்வளவு நேரமும் கண்டது, 'வெறும் கனவு' என்பது அப்போதுதான் நமக்குத் தெரிய வருகின்றது.

13 நிமிடப் படம் என்றாலும் படம் பார்த்தவர்களை அந்தப் பாதிப்பிலிருந்து மீண்டுவர சில நாட்கள் ஆகும்போல் தெரிகின்றது. முதல் மூன்று நிமிடங்கள் தலைப்பு; அடுத்த 10 நிமிடங்கள் மட்டுமே கதை. பின்னணி இசையாக கார்த்திக் ராஜா மிகவும் ஆத்மார்த்தமாகச் செய்துள்ளதன் வெளிப்பாடு, படம் பார்ப்பவர்களை ஈர்க்கின்றது. வெகுஜனப் படங்களில் நடித்துவரும் நடிகை இந்து. இந்த மல்லி குறும்படத்தில் நடித்துள்ளதைப் பார்க்கும்போது அவர் கதையை உள்வாங்கிக்கொண்ட விதம், அவற்றை வெளிப்படுத்தியுள்ள தன்மை அத்தனையும் சிறப்பாகவே செய்துள்ளார்.

படத்தின் இயக்குநர் மாதவ கிருஷ்ணனைப் பாராட்டலாம்.



> விலை மாது என்றாலும் அவளும் பெண்தானே? அவளுக்கும் சமுதாயத்தோடு ஒன்றி வாழவேண்டும் என்ற ஆசை இருக்கும்; கனவுகள் இருக்கும். தன்னிடம் வரும் ஒவ்வொரு ஆணையும் பார்த்து இவன் தன்னைத் திருமணம் செய்து கொள்ள மாட்டானா என்ற ஏக்கம் வரும்.

திரைப்படக் கல்லூரியில் ஒளிப்பதிவாளர்க்கான பயிற்சியில் இருந்த இவர், இந்த மல்லி பட புராஜெக்டில் டைரக்‌ஷன்துறை மாணவர்கள் யாரும் கிடைக்காததால் இந்தப் படத்தின் கதை, திரைக்கதை, இயக்கத்தையும் செய்துள்ளார்.

ஒரு விலை மாதுவின் வெளிப்பாடுகளைத் தன்னுடைய கமராவில் மிகச் சரியாகவே படம் பிடித்துள்ளார். வசனங்கள் அத்தனையும் குறைவாகவும், மிகச் சரியாகவும் செய்யப்பட்டுள்ளன. மல்லி என்ற அந்தப் பெண் பாத்திரத்திற்குத் தந்துள்ள முக்கியத்துவத்தில் 25 சதவீதமாவது அந்த ஆண் பாத்திரத்திற்கும் கொடுத்திருக்கலாம் இயக்குநர். மாதவ கிருஷ்ணன் குறும் படத்திற்கான நல்ல முயற்சியைச் சிறப்பாகச் செய்துள்ளார்.

இக் குறும்படம் பற்றி மல்லி பட இயக்குநர் மாதவ கிருஷ்ணன்...

'என்னுடைய சொந்த ஊர் ஈரோடு. ஆனால் நான் வளர்ந்தது, படித்தது எல்லாம் சென்னையில்தான். மாநிலக் கல்லூரியில் பி.எஸ்.சி. வேதியியல் படித்து முடித்தவுடன், சந்தோஷ் சிவன் பாதிப்பில் நாமும் திரைப்படக் கல்லூரியில் படித்தால் என்ன? என்று தோன்றியது. அதன் விளைவாக ஒளிப்பதிவுப் பயிற்சியில் சேர்ந்தேன்.

திரைப்படக் கல்லூரியின் இறுதியாண்டு தரப்படும் புராஜெக் எனக்குக் கிடைத்தபோது நான் எந்த சப்ஜெக்ட்டை வைத்துச் செய்வது என்று எண்ணிக் கொண்டிருந்தபோது என் மனதில் நீண்ட நாட்களாகவே ஒரு எண்ணம் இருந்துவந்தது. அதாவது பெண்களில் பெரும்பாலானவர்களுக்கு அவர்களின் கனவுகள் ஓரளவாவது நிறைவேறிவிடுகின்றது. ஆனாலும் விலை மாது என்றாலும் அவளும் பெண்தானே? அவளுக்கும் சமுதாயத்தோடு ஒன்றி வாழவேண்டும் என்ற ஆசை இருக்கும்; கனவுகள் இருக்கும். தன்னிடம் வரும் ஒவ்வொரு ஆணையும் பார்த்து இவன் தன்னைத் திருமணம் செய்து கொள்ளமாட்டானா என்ற ஏக்கம் வரும். அப்படியே யாராவது ஒருவன் தியாக மனப்பான்மையோடு முன்வந்து திருமணம் செய்து கொண்டாலும், ஏதாவது ஒரு நாள் அவள் வாழ்ந்த வாழ்க்கை முறையைச் சொல்லிவிடுவான். இந்தச் சூழ்நிலையை வைத்துத்தான் மல்லி என்ற ஒரு பாத்திரத்தை உருவாக்கி கதையைத் தயார் செய்தேன்.

மல்லி என்ற பெண் இந்தத் தொழிலுக்கு எப்படி வந்தாள் என்று பூர்வீகக் கதைகளையும், காட்சிகளையும் விபரிக்காமல் மல்லி என்ற அந்தப் பெண்ணை ஒரே அறைக்குள் மட்டுமே வைத்து அவளின் எண்ணப் பிரதிபலிப்பாக தன்னிடம் வரும் யாராவது ஒருவன் தன்னைத் திருமணம் செய்து கொள்ளமாட்டானா என்று, அவளின் உள்ளுக்குள்ளேயே கதை கனவாகத் தொடங்கி, இதைப் போன்ற யாரும் நம்மைத் திருமணம் செய்து கொள்ளமாட்டார்கள். இதெல்லாம் வெறும் கனவு என்று படம் முடிந்தாலும், மறுபடியும் ஒவ்வொருத்தருடனும் மல்லி கனவு காண்கிறாள் என்பதுதான் கதை. மல்லி உள்ளுக்குள் சந்தோஷமாக இருக்கின்றாள். வெளியே சோகமாகத் தெரிகின்றாள்.

13 நிமிடங்களில் அவளின் எண்ணங்களைப் படத்தில் தாராளமாகச் சொல்லமுடியும் என்ற நம்பிக்கை இருந்தது. இந்தப் 13 நிமிடத்தில் பன்னிரண்டு காட்சிகள் வருகின்றன. இதில் முதல் மூன்று காட்சிகள் ரியாலிட்டி. அடுத்த எட்டுக் காட்சிகள் கனவு. கடைசி ஒரு காட்சி ரியாலிட்டி. இதில் கனவுக் காட்சிதான் என்ற உணர்வு தெரியாமல் 8 காட்சிகளையும் எடுத்திருந்தேன். கடைசிக் காட்சியில் மட்டுமே அது கனவு என்று படம் பார்ப்பவர்களுக்குத் தெரியவரும்.

பாரதி ராஜா, படத்தைப் பார்த்துவிட்டு எதுவும் பேசாமல் அவருடைய காரில் என்னை அழைத்துக்கொண்டு அவர் அலுவலகம் சென்றார். என்னையே ஒரு நிமிடம் அப்படியே பார்த்துக்கொண்டிருந்தவர் 'இன்டஸ்ட்ரியில நீ ஏதோ செய்யப்போறடா' என்று பாராட்டினார். அதே போல் நடிகர் பிரகாஷ்ராஜ் படத்தைப் பார்த்துவிட்டு, ஒரு நிமிடம் மௌனமாக இருந்தவர் கடைசி முடிவை நான் எதிர் பார்க்கல என்று சொல்லிப் பாராட்டினார்.

நன்றி: கணையாழி


உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

தமிழ் அச்சகம்

(மக்கள் கடை அருகில்)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணி வரை

59, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு! திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்




# என்றும் வாடாத மலராய் பார்பரா

எப்போதும் வயதென்பது உடலுக்கு மட்டுமே; உள்ளத்திற்கு அல்ல என்பது போல் வாழ்கிறார் 98 வயதான பார்பாரா கார்ட்லண்ட். நல்ல வாசிப்புப் பழக்கமுள்ள பலருக்கும் பார்பாரா கார்ட்லண்டை தெரியும். அதாவது ஆங்கில நாவல்களில் அதிகளவிற்கு காதல் தொடர்பான புத்தகங்ளைப் படைத்தவர். அதற்கும்மேல் பலரின் சுயசரிதைகள், வாழ்க்கை வரலாறுகள் அழகு, ஆரோக்கியம், தத்துவம் எனப் பல மட்டங்களிலும் தன் எழுத்தைப் பயன்படுத்தி ஏராளமான கருத்துக்களைச் சொன்னவர். இன்று கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலம் முழுமையாக வாழ்ந்து வரும் எழுத்தாளர்ப் பெண்மணி இவர்தான். ஆனால் தற்போது தனக்கு வயோதிபம் வந்து விட்டதே என ஓய்வு பெற்றாரா என்றால், இல்லை! வெகு விரைவில் தன் 706 வது நூலை வெளி விடுவதற்காக கடுமையாக இன்றும் உழைக்கிறாராம் பார்பரா கார்ட்லண்ட். அதுவும் 'இந்த முதுமையின் உச்சத்திலும் ஒரு காதல் நூலை எழுதியவண்ணம் இவர் இருக்கிறார் என்றால் அவர் எந்தளவு தூரம் தன் முதுமையை மறந்துவிட்டார். வாழ்க்கையை இரசிக்கிறார்.' என்கிறார்களாம் இவர் ரசிகர்கள். ஆம்! அண்மையில் தன் 98-வது பிறந்த தினத்தை முன்னிட்டு பத்திரிகையாளர்களுடன் பேசிய இவர் மிக மகிழ்ச்சியுடன்தான் தன் பேட்டியையும் கொடுத்திருந்தார். அதாவது தான் எழுதும் நூல்களில் எப்போதும் காதலின் பெருமையே அதிகம் தெரியும். ஏனெனில் உலகில் மக்களின் வாழ்வோடு எக்காலமும் இணைபிரியாத ஓர் உறவு அதுதான் என்கிறார் இவர். அத்தோடு இன்று ஆண் பெண்களிடையே ஒரு உடன்பாடோ, புரிந்துணர்வோ பெரும்பாலும் இல்லையென்றும், இவர்கள் மத்தியில் நமக்குள் யார் பெரியவர் என்பதில் நிறையப்போட்டியும் வந்துவிட்டது என்கிறார். இவர் இந்தப் பார்பரா எழுத்துலகில் எப்படிப் பிரபலமானார்? இவர் எதற்காக எழுதத் தொடங்கினார்? அன்று இவர் எழுதியதெல்லாம் தன் வறுமையைப் போக்க, வயிற்றுக்கு உணவு போடத்தான். ஆனால் இன்றோ பணத்தின் மத்தியில் பெரும் பகட்டாய் வாழ்ந்தாலும் எழுத்தை மட்டுமே அதிகமாக நேசிக்கிறார்.



தன்னால் இன்று எழுத முடியவில்லை என்பதால் தான் நினைப்பதைக் காரியதரிசியைக்கொண்டு எழுதுவித்து வருகிறார் பார்பரா. தற்போது 706 வது புத்தகத்தை எழுதிவரும் இந்த பார்பராவின் ஏனைய 705 புத்தகங்களும் 750 மில்லியன் பிரதிகள் விற்கப்பட்டுவிட்டன என்றால் இவரின் எழுத்துத் திறமையை யாராலும் விளங்கமுடியும். அது மட்டுமா! இத்தகைய உச்ச விற்பனையால் உலக சாதனையாளர் புத்தகமான கின்னஸ்—இலும் 'பெஸ்ட் செல்லர்ஸ் ஓதர்' என்ற தலைப்பில் இடம் பெற்றுவிட்டாராம் பார்பரா. தன் சொந்த வாழ்வில் மிகுந்த சோகங்களையே கொண்ட இப் பெண், இன்று சாதனை படைக்கிறார்.

ஆம்! பார்பரா முதலாம் இரண்டாம் உலகப் போரில் தன் தந்தை, பின் தன் குழந்தைகள் பிற சொந்தங்கள் என்று ஏராளமானோரைப் பறிகொடுத்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதே. ஆனாலும் வாடாத ஓர் மலராய் இன்றும் மணம் வீசும் பார்பரா இந்த நூற்றாண்டின் சாதனைப் பெண்தான்.

# பெண் விடுதலையும் தமிழ்ப் பெண்கள் சமூகமும்

இன்று உலகெங்கிலுமே பெண் விடுதலை வேண்டி ஓங்கி ஒலிக்கும் குரல்கள் உயர்ந்தபடி செல்கிறது. இந்த நிலை மகிழ்ச்சிதான். ஆனால் இப் பெண் விடுதலை வேண்டி நிற்கும் அத்தனை பேரும் ஒரே இலட்சியங்களை, ஒரே மாதிரியான கருத்துப் பரிமாற்றங்களையா தமக்குள் வைத்துள்ளார்கள். என்றால் அது கேள்விக்குரிய வியடம்தான். காரணம் 'எம்' பெண்கள் சமூக மத்தியில், இப்பெண் விடுதலை தொடர்பான ஒருமித்த கருத்தோ அல்லது ஒரு ஒன்றுபட்ட சிந்தனைகளோ இல்லை. தாம் தாம் தமக்கு விரும்பியதை அனுபவிக்க நினைக்கும்போது அதற்கு பயன்படுத்த இப்பெண் விடுதலையை ஓர் கருவியாகப் பயன்படுத்துபவர்கள் ஒருபுறம். இன்னொருபுறம், இன்றைய வாழ்க்கைச் சூழலில் இப் பெண்விடுதலை பற்றிக் கதைப்பது , 'மிக நாகரிகமான ஓர் விடயம்' என எண்ணுபவர்களும் உண்டு. ஆனால் இவர்களிற்கெல்லாம் அப்பால் சாதர்ரண மனிதர்களுக்குரிய அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமைகளாக வாழும் பல பெண்கள் தம் நியாயமான உரிமைகளைப் பெற இப்பெண் விடுதலையை விரும்புவதும் நிகழ்ந்து வருகிறது.

எனவே இவ்வாறான சூழ்நிலையில் எம் தமிழ்ப் பெண்கள் சமூகம் எவ்வாறான ஒரு பெண் விடுதலையை நோக்கித் தம்மை நகர்த்துகிறது என்பது இங்கு ஒரு முக்கியமான விடயம். ஆகவே இது பற்றிச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். அதாவது எம் தமிழ்ப் பெண் சமூகத்திடையே பெண் விடுதலையையும் தாம் ஒரு மனிதர்களிற்குரிய அனைத்து அடிப்படைச் சுதந்திரங்களுடனும்தான் வாழவேண்டும் என்ற நிலைப்பாட்டையும் மனதில் ஆழமாகக்கொடுத்தது எது எனப் பார்த்தால், அது எம் விடுதலைப் போராட்டம்தான்.

ஏனெனில் அதற்கு முன்னர் எம் மத்தியில் பெண்கள் தாமே தமக்குத் தேவையான உரிமைகளைப் பெறுவதில் மட்டுமல்ல, அறிவதிலும் அக்கறையாக இருக்கவில்லை. அதற்காக இப்போது மட்டும் ஏதோ எம் தமிழ்ப் பெண்கள் அனைவருமே தமக்கான பெண் விடுதலையைப் பற்றி யோசிக்கிறார்களா என்றால், இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இருந்தாலும் முன்னைய நிலையோடு ஒப்பிடும் போது இப்போது நிறைய மாற்றங்கள், புதிய சிந்தனைகள் என்பன எம் பெண்கள் மத்தியில் தோன்றத் தொடங்கிவிட்டன. இருந்தாலும் எம் எல்லோர் மத்தியிலும் இது பற்றிய சிந்தனைகள் ஒரே நோக்கிலேயே உள்ளதென்பது ஒப்புக்கொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கிறது. ஆகவே, பொதுவில் ஈழத்துப் பெண்களாகிய நாமெல்லோரும் எத்தகைய பெண் விடுதலைக் கருத்தை எமக்குள் உள்வாங்க வேண்டும் என்று பார்ப்போம். முதலில் பெண் விடுதலையின் அடிப்படைக்கருத்தே, 'நாம் எப்போதும் ஆண்களிற்குப் போட்டியாகவோ, அன்றி எதிராகவோ எம்மை பிறிதொரு வழிக்கு நகர்த்த வேண்டியவர்கள் அல்ல' என்பதே ஆகும். காரணம் ஆண் பெண் என்ற இருவரையும் ஒரு 'ஒன்றுபட்ட புரிந்துணர்வுடன்' ஒருவரினது உரிமையை ஒருவர் மதிக்கத்தக்க நிலைப்பாட்டில் எம்மை; எம் சமூகத்தை வளர்த்தல் என்பதையே மனதில் கொள்ளல் வேண்டும். அடுத்து பெண்களாகிய நாம் எம்மைச் சூழ உள்ள சில மூடத்தனங்களை அகற்றி ஒரு ஆரோக்கியமான சிந்தனைகளை எமக்குள் வளர்த்துக்கொள்ள வேண்டும். 'மற்றவரிடத்திலேயே எப்போதும் ஒரு பெண் என்பவள் தங்கியிருக்க வேண்டும்' என்ற நிலைப்பாட்டை உடைத்தெறிய வேண்டும். எம் காலிலேயே நாம் துணிந்து வாழப் பழகுதல் வேண்டும். அது மட்டுமல்லாமல் எப்போதும் வளர்ச்சி என்பது வெறுமே பெண்களிற்கு என்று மட்டுமல்ல, அது ஆரோக்கியம் நிறைந்த எம் சமூகத்தின் வளர்ச்சிக்கும்தான் என்பதை முழுமையாக உணரவேண்டும். அப்போதுதான் எமது விடுதலை என்பது முழுமை பெறும்.

# பெண்களைப் பாதிக்கும் கருப்பைப் புற்றுநோய்

பெண்களை அதிகம் பாதிக்கும் நோய்களில் கருப்பைப் புற்றுநோயும் ஒன்று. இது கருப்பையின் உட்சுவர் பகுதியிலேயே உருவாகிறது. இக்கருப்பைப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் முதலிலேயே இந் நோய் தமக்கு இருக்கிறதா என அறிந்து கொள்வது குறைவு. இதனால் கிட்டத்தட்ட 50% மான பெண்கள் நோய் முற்றிய நிலையிலேயே வைத்தியம் பார்க்கத் தொடங்குகிறார்கள். காரணம் இந் நோய்க்கான அறிகுறிகளைப் பற்றிப் பலருக்கும் தெரியாமைதான்.

எனவே இக் கருப்பைப் புற்றுநோய் தோன்றுவதற்கான காரணத்தையும், இந்நோய் எவ்வாறான அறிகுறிகளைக் கொண்டு இருக்கும் என்பதையும் பார்ப்போம். முதலில் இக் கருப்பைப் புற்றுநோய் ஏற்படுவது அதிகளவில் 40 வயதிற்கு மேற்பட்ட பெண்களிற்குத்தான். அதாவது மாதவிடாய் நிறுத்தம் ஏற்பட்ட பிறகே இந்த நோய் உருவாக வாய்ப்பு இருக்கிறது. அத்தோடு அளவுக்கு அதிகமான உடல் பெருத்தவர்கள், நீரிழிவு நோயால் பாதிப்புற்றவர்களிற்கும், சிறு வயதிலேயே உடலுறவு கொள்ளத் தொடங்கியவர்களிற்கும் கூட இந்நோய் ஏற்பட சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. சரி இந்த நோய்க்கான அறிகுறிகள் என்ன? முதலில் மாத விலக்கு அதிகப்படியாக வரும். அதாவது 1 மாதம் என்ற கணக்கின்றி நினைத்த போதெல்லாம் மாதவிடாய் நிகழத் தொடங்கும். அடுத்து மாதவிடாய் நிறுத்தம் என்ற 'மெனோபஸ்' நிலையைத் தாண்டியபின்பும் இரத்தப்போக்கு இருந்துவரும்.

எனவே இவ் வகையான அறிகுறிகள் இருப்பவர்கள் வைத்திய ஆலோசனைக்குச் செல்வது மிக முக்கியம். இதற்கிடையே பெண்களின் சினைப்பையிலும் இப்புற்றுநோய் வரச் சந்தர்ப்பங்கள் உண்டு. அடுத்த வாரம் நாம் சினைப்பைப் புற்றுநோய் (ஓவரி) பற்றிப் பார்ப்போம்.

## பிரிட்டன் தொலைக்காட்சிச் சேவையும் பெண்கள் தலையீடும்

பிரிட்டனின் தொலைக்காட்சிச் சேவைகளில் பெண்கள் தொடர்பான வன்முறைகள் மற்றும் அதிக பாலியல் உணர்வைத் தூண்டும் திரைப்படங்களை திரையிடுவதற்கு அத்துறையைச் சேர்ந்தவர்களிற்கு பூரண உரிமை கொடுக்கக்கூடாதென பெண்கள் நலன் காக்கும் சில அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. தொலைக்காட்சி ஊடாக காட்டப்படும் பெண்களின் மீதான வன்முறைகளும், அதிக பாலியல் தொடர்பான திரைப்படங்களினாலும் வீட்டிலும் வெளியிலுமாக பெரும் அளவில் பெண்கள் பாதிப்புறுகிறார்கள் என்கின்றன இவ்வமைப்புகள்.

இதே கருத்தையே பி.பி.சி. சேர்மன் 'லேடி ஹேறா' வும் கூறுகிறார். அதாவது ஆண்கள் திரையில் தாம் காணும் 'உணர்ச்சி கலந்த படைப்புக்களை' நிஜமாக அனுபவித்துப் பார்ப்பது, தம் அருகிலுள்ள பெண்கள் மீதுதான் என்கிறார் இவர். தற்போது இத்தகைய நிலையைக் குறைப்பதற்கு இத்துறைகளில் அதிகளவு பெண்களையே உயர் பதவிகளில் அமர்த்தினால் போதிய மாற்றங்களை உருவாக்கலாம் எனக் கூறி, இக்கூற்றிற்கு ஆதரவாகத் தன் பரிந்துரையைச் செய்துள்ளது 'புரோட்காஸ்டிங் ஸ்டாண்டர்ட்ஸ் கமிஷன்.' இத்துறை சார்ந்தவர்களிடம் இவ் வேண்டுகோள் வரவேற்கப்படுமா என்பதுதான் கேள்விக்குரியதாக உள்ளது.

ஜேர்மனி நொய்ஸ் வாழ் மக்களுக்கும் அதன் அண்மித்த நகர மக்களுக்கும்

# ஓர் நற்செய்தி

நொயிஸ் நகரில் கோலாகலமாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது

# லீமா மக்கள் கடை

திறக்கப்படவுள்ளதை அனைத்து மக்களுக்கும் அறியத்தருகின்றோம்

இடம்:

நொய்ஸ் பிரதான புகையிரத நிலையத்திற்கு முன்பாக

**Marienkirch Platz-5**

**41460 Neuss, Germaney.**

---

# நிலு ஆசியன் சொப்

**Heb-Sr 25,**
**80798 München.**

'தரமான பல வகையான தொலைபேசி அட்டைகள்'

மொத்தமாகவும் சில்லறையாகவும் உத்தரவாதத்துடன் விற்பனை ஆகின்றது.

மொத்தமாக வாங்குபவர்களுக்கு

**10% முதல் 30% வரை**

விசேட கழிவு கிடைக்கும்

| | |
|---|---|
| Eelam card | Econo City Plus |
| Ganaam | Unicom |
| Alpha | Mundo Phon |
| A1 | Afrika Alpha |

அனைத்து தொலைபேசி அட்டைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்:

**NILU ASIAN SHOP**

தொடர்புகட்கு: 01 72 86 52 784

---

உன் உயர்வுக்கு...

மனிதனே: உன்மனதில் பட்டதை உடனே சொல்லிவிடு இல்லை என்றால் சில நாட்கள் கழித்து உன்கருத்தை வேறு ஒருவன் வாயிலாகக் கைகட்டி நின்று உபதேசமாக நீயே கேட்கவேண்டிவரும். எனவே உன்னை நீ மதி. அப்போதுதான் நீ உயர்வாய்.

**ஜேர்மனியில் புகழ்பெற்ற மொத்த வியாபார ஸ்தாபனம்**

இலங்கை, இந்தியா நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட மீன் வகைகள் -நண்டுகள் மற்றும் மளிகைப் பொருட்கள்
இவற்றுடன் கென்யா நாட்டில் இருந்து பசுமையான மரக்கறிகள்
இவை அனைத்தையும் சனிக்கிழமைகளில் Frankfurt Air port இலும் ஞாயிற்றுக்கிழமைகளில் Store (Viersen) இலும் பெற்றுக்கொள்ளலாம்.

**Dero Trade International**

*Import & Export*

Schonskanter weg31,
41066 Mönchengladbach,
Germany.

கே.பிரேம்குமார்

Tel: 02161 - 809891-208365 / Fax: 02161-809895-650741

மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஸ்தாபனம்

**Premii Cash & Carry**

சகலவிதமான பொருட்களையும் மொத்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

(Bahnhof க்கு அருகாமையில்)
Eickner Str.7
41061 Mönchengladbach.
Tel: 02161-208365
Fax: 02161-650741

உதாரணத்திற்குச் சில.....

**மாபெரும் மலிவு விற்பனை**

| | | |
|---|---|---|
| அரிசிமா 4 pkt (4x 1 kg) | - | 9.90 DM |
| சம்பா அரிசி 3 pkt (3x 1 kg) | - | 9.90 DM |
| DERO மிளகாய்த்தூள் Box (3x500 Gr) | - | 12,75 DM |
| DERO மிளகாய்த்தூள் Bag (3x500Gr) | - | 11.99 DM |
| சம்பா அரிசி 5Kg | - | 16.90 DM |
| மரக்கறி (இலங்கை, இந்தியா, கென்னியா) | - | 6,90 DM |
| துப்பரவு செய்யப்பட்ட இந்தியன் நண்டுப்பெட்டி | - | 12.90 DM |

## நோயற்ற வாழ்வே...

# மருந்தின்றி இளமை நீடிக்க ஏழு வழிகள்!

1. உடல் நலனுக்குச் சரியான உணவும் போதுமான அளவு தண்ணீரும் தேவை. புரதம், மாச் சத்து, நார்ச் சத்து, கொழுப்புச் சத்து, போதுமான நீர், வைட்டமின்கள், தாது உப்புக்கள் அடங்கிய சரிவிகித உணவுத் திட்டத்தைத் தயாரித்துப் பின்பற்ற வேண்டும்.
2. நீங்கள் வாழும் இடங்களில் சூரிய வெளிச்சமும், சுத்தமான காற்றும் நன்கு கிடைக்கும்படி பார்த்துக்கொள்ளவும். உடலில் கழிவு சேராமல் பார்த்துக் கொள்ளவும்.
3. அதிக உஷ்ணத்தாலும், அதிகமான குளிர்ச்சியாலும் உடல் பாதிக்கப்படாமல் பாதுகாக்க வேண்டும். சூடுபடுத்தப்படாத இயல்பான நீரிலேயே குளிக்க வேண்டும். உணவு உண்ட பிறகு குளித்தால் சமிபாட்டுக்கோளாறு உண்டாகலாம். உணவு சாப்பிட்டு மூன்று மணிநேரம் கழித்துக் குளிக்கலாம். மாலையில் குளிப்பது நல்லது.
4. முறையான உடற் பயிற்சியோ அல்லது துரித நடைப்பயிற்சியோ தினமும் தேவை. இத்துடன் போதிய அளவு ஓய்வும், தாம்பத்திய வாழ்வும் தேவை. யோகாசனம், நாடி சுத்தி, பிராணயாமம் (மூச்சுப் பயிற்சி) அவசியம் தேவை. சூழ்நிலை இடம் தந்தால் பகலில் அரைமணி நேரம் தூங்கலாம். சராசரியாக தூக்க நேரம் குறைந்தால் உடலும் மனமும் பாதிக்கப்படும். இரவு அதிக நேரம் விழித்திருந்து வேலை பார்ப்பது உடல் நலனை மட்டுமல்ல மனதையும் பாதிக்கும்.



5. உடலுக்குக் கெடுதல் செய்யும் மது, புகை, புகையிலை போன்ற பழக்கங்கள் கூடாது. இவற்றால் உடலுக்கு நச்சுத் தன்மை அதிகமாகி உயிரணுக்கள் செயலிழக்க ஆரம்பிக்கின்றன. முதுமைத் தோற்றமும் விரைந்து ஏற்படும். மனக் கவலையைப் போலவே உடலுக்குக் கிழட்டுத் தோற்றத்தை இவை தருகின்றன.
6. உடல் பருமன் அடையவிடக்கூடாது. மாப் பொருள்களை அதிகம் சேர்த்தாலும் உடல் பருமன் அதிகரிக்கும். உடல் பருமன்தான் இதய நோய், மூட்டு வலி உட்பட பல நோய்களின் தந்தை, எனவே, உடல் பருமனாக ஆரம்பிக்கும்போது உணவில் கட்டுப்பாடு, உடற்பயிற்சியில் அக்கறை முதலியன தொடரவேண்டும். முப்பது வயதுக்குப் பிறகு புரத உணவிற்கு முக்கியத்துவம் கொடுத்தால் உடல் கட்டுப்பாட்டில் இருக்கும். மேலும் இரும்புச் சத்து, பி மற்றும் சி வகை வைட்டமின் மாத்திரைகளையும் சத்துணவுக் குறைபாட்டைச் சரிசெய்யத் தினமும் சாப்பிட வைத்தியரிடம் ஆலோசனைகளைப் பெறவும்.
7. மனதை அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் வைத்துக்கொள்வது ஆரோக்கிய வாழ்வுக்கும், இளமை மாறாத தோற்றத்திற்கும் அவசியம்.

ஒவ்வொரு நாளும் சில நிமிடங்கள் உங்களின் கடந்த காலங்களில் ஏற்பட்ட வெற்றிகளை நினைத்துப் பார்ப்பதாலும், இளமைக்காலத் தோற்றத்தை மனக் காட்சிகளாகப் பார்ப்பதாலும் இளமை மாறாத தோற்றம் அமையும். சிறு வயதில் பள்ளி சென்ற அனுபவங்கள் அடிக்கடி மலரும் நினைவுகளாக உங்கள் மனதில் படமாகத் தெரிந்தால் உயிரணுக்கள் செயல் இழக்காமல் புதுப்பிக்கப்படும்.

மேலும் பிரார்த்தனை, தியானம், தொழுகை, புத்தகம் படித்தல், இசை கேட்டல், கடமையை முழு ஈடுபாட்டுடன் செய்தல் முதலியனவும் மனதுக்கு அமைதியையும், மகிழ்ச்சியையும் கொடுக்கவல்லவை.

எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வும், நம்மிடம் கற்பனை வளமும் உள்ளன என்ற நம்பிக்கை வேண்டும். இந்த நம்பிக்கையாலும் உடல் நலன் பாதுகாப்பாக இருந்து நமது இளமைத் தோற்றத்தை நீடித்துத் தரும்.

*நன்றி: கல்கண்டு.*

## சிறந்த பழம்

உங்கள் தோற்றப் பொலிவினையும், ஆரோக்கியத்தையும் பாதுகாக்க தினசரி தேவையான வைட்டமின் பி6, 36 சதவீதம் மற்ற பி வைட்டமின்கள் 4 முதல் 11 சதவீதம். வைட்டமின் சி-யில் 95 சதவீதம் பொட்டாஷியம் 20 சதவீதம் கார்போஹைட்ரேட்டுக்கள் 9 சதவீதம். புரோட்டீன்கள் 2 சதம். மற்றும் தேவையான வைட்டமின்கள் தாது சத்துக்களை உட்கொள்ள வேண்டும்.

இத்தனை சத்துக்கள் உள்ள உணவுக்கு எதைச் சாப்பிடவேண்டும்? என்ன செலவாகும்? என யோசிக்கிறீர்களா? கவலைப்படாதீர்கள் அதிக செலவின்றி நீங்கள் இதை வாங்கலாம்.

ஆமாம்! வாழைப்பழம்தான் இத்தனை சத்துக்களைப் பெற்றிருக்கிறது.

ஒருநாளைக்கு ஒரு ஆப்பிள், மலச்சிக்கலை தவிர்க்கிறது என்பது உண்மை. ஆனால் வாழைப்பழத்தை உட்கொள்வதால், மலச்சிக்கல் வயிற்றுப்போக்கு இரண்டிற்கும் நிவாரணம் கிடைக்கிறது. ஜீரணத்திற்கு தேவையான செயல்பாட்டை சமன் செய்யும் சக்தி-வாழைப்பழத்திற்கு நிறையவே இருக்கிறது.

மனித உடலுக்கு தேவையான அளவை விட அதிகம் 'கலோரிகள்' வாழைப்பழத்திற்கு இருப்பதாக ஒருகுறை உண்டு.

# புதிர் முரசு 1

1. 'டியன் பியன் பூ' இது ஒரு உலக சரித்திரத்தில் இடம் பெற்ற ஒன்று.
   - ☐ பிரெஞ்சு இராணுவம் வியட்னாமிய போராளிகளிடம் சரணடைந்த இடம்.
   - ☐ மாவோசேதுங் பிறந்த இடம்.
   - ☐ அமெரிக்க இராணுவம் வியட்னாமில் நடத்திய யுத்த நடவடிக்கைகளில் ஒன்று.
   - ☐ தாய்லாந்தில் ஒரு உல்லாச மையம்
2. உலகின் விடுதலை வீரர்கள் வரிசையில் நீங்காத இடத்தைப் பெற்றுக் கொண்ட சேகுவேரா பிறந்த நாடு.
   ☐ பொலிவியா ☐ ஆர்ஜன்டீனா ☐ கியூபா ☐ பேரு
3. ஆங்கிலேயர்களுக்கெதிராகப் படை திரட்டிய இந்திய தேசிய வீரன்
   ☐ சுபாஷ் சந்திரபோஸ் ☐ மகாத்மாகாந்தி
   ☐ உ.வே. சாமிநாதன் ☐ மருதமலை
4. இந்துவெளி நாகரிகம் எனப்படுவது எக்காலப் பகுதியை உள்ளடக்கியிருந்தது?
   ☐ 4500.கி.மு.-3000 கி.மு ☐ 3000 கி.மு. -2000 கி.மு.
   ☐ 1000 கி.மு. -750 கி.மு ☐ 2500 கி.மு -1700 கி.மு.
5. தென் ஆபிரிக்காவின் தலைநகர்
   ☐ கேப்டவுன் ☐ பிறிட்டோரியா ☐ கொகனஸ்பேர்க் ☐ டர்பன்
6. சிங்கப்பூர் எந்த ஆண்டில் சுதந்திரம் பெற்றது?
   ☐ 1949 இல் ☐ 1965 இல் ☐ 1953 இல் ☐ 1961இல்
7. இந்நூற்றாண்டின் மிகப் பெரும் கட்டடவேலை எனப்படும் அஸ்வான் அணைக்கட்டு சூயஸ் கால் வாய்க்குக் குறுக்கே எத்தனையாம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது?
   ☐ 1960 ☐ 1969 ☐ 1970 ☐ 1777
8. நேபாளம் உலகின் ஒரேயொரு இந்து இராச்சியம் எனப்படுகிறது.
   ☐ ஆம் ☐ இல்லை.
9. ஜேர்மனியின் சர்வாதிகார இராணுவ ஆட்சியாளரான அடொல்ப் ஹிட்லர் பிறந்தநாடு.
   ☐ ஜேர்மனி ☐ போலந்து ☐ ஆஸ்திரியா ☐ செக்குடியரசு
10. அல்பிரட் நோபல் தனது பெயரால் நோபல் பரிசுத் திட்டத்தை ஆரம்பித்தார். சரி இவர் எதனை கண்டுபிடித்தார்?
    ☐ துப்பாக்கி ☐ வெடிமருந்து ☐ பீரங்கி ☐ எறிகணை
11. கிழக்கு தீமோர் எந்த நாட்டின் குடியேற்ற நாடாக இருந்தது?
    ☐ ஒல்லாந்து ☐ பிரித்தானியா ☐ போர்த்துக்கல் ☐ ஜேர்மனி
12. செஞ்சிலுவைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது எத்தனையாம் ஆண்டு?
    ☐ 1879 ☐ 1901 ☐ 1849 ☐ 1863
13. பிரெஞ்சுப் புரட்சி இந்த ஆண்டுகளில் இடம்பெற்றது
    ☐ 1789-1799 ☐ 1777-1780 ☐ 1767-1780 ☐ 1790-1799
14. மரணக் கடல் (dead sea) இது ஒரு உப்புக் குளத்தின் பெயர்
    ☐ ஆம் ☐ இல்லை
15. பனாமாக் கால்வாய் பசுபிக்–அத்திலாந்திக் சமுத்திரங்களை இணைக்கும் ஒரு செயற்கை கடல் வழியாகும்.
    ☐ ஆம் ☐ இல்லை.

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

..............................

பிறந்த நாள்: ..............................

சந்தாதாரராயின் சந்தா எண்: ..............................

*புதிர் முரசு எண்–1 இற்கான விடைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்:* **01.10.1999** - (போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

**விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:**

புதிர் முரசு

**EELAMURASU, 22, Rue Perdonnet, 75010 Paris, France.**

சரியான விடையெழுதும் வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து வாசகர்களுக்கு *'Lune Electronic Informatique'* நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்த **புதிர் முரசு** எண்-1 இற்கான சரியான விடையும், **புதிர் முரசு** எண்- 2ம், 07 - 13 ஒக்டோபர் 99 ஈழமுரசில் வெளிவரும்.

# மிர்

## ரஷ்யாவின் விண்தளம் 'மிர்'க்கு இப்பொழுது சுதந்திரம்

அதி பிரசித்தமான விண்வெளித் தளமாகிய மிர்ருக்கு கடைசியாக அனுப்பப்பட்டது என்று கருதுகின்ற ரொக்கட்டும் மிர்ருக்குப்போய்த் திரும்பிவிட்டது.

ரஷ்ய விண்வெளித் தளமாகிய 'மிர்', அமெரிக்க விண்வெளி நிறுவனமாகிய 'நாசா'வுக்கு வெற்றிச்சவால்விட்டு சாதனைகள் புரிந்த தளமாகும். அமெரிக்காவின் 'நாசா' வையே தனது திறமையினால் ஒருவிதமாகப் பயமுறுத்திய மிர், இன்று பசுபிக் சமுத்திரத்தில் மூழ்கடிக்கவேண்டிய நிலை உருவாகுமா? ஏனெனில் அது தனது இறுதிப் பயணத்தை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. இத்தளம் பசுபிக் கடலில் மூழ்கடிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டுமாகில் பெருந்தொகையான பணத்தினை செலவிடவேண்டும். இதனை ஈடு செய்ய இதற்கு வசதியாக கடன் தருவோர் கிடைக்காவிட்டால், எதிர்வரும் ஆண்டில் 'மிர்' பசுபிக் சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்டுவிடலாம்.

1986-ம் ஆண்டில் இருந்து செயற்பட்டுவரும் இந்த விண்வெளி ஆய்வுத்தளம் 13 வருடக்கால இடைவெளிக்குள் இதுவரை 1500க்கு மேலான திருத்த வேலைகளுக்கு உள்ளிடப்பட்டுள்ளது.

'சுதந்திரம்' என்ற அர்த்தமுள்ள இவ்விண் ஆய்வுதளம், தனது வாழ்வை சராசரியாக ஒவ்வொரு 3 தினங்களுக்கும் ஒவ்வொரு பிரச்சினைகளை எதிர்கொண்டு வாழ்ந்து வந்திருக்கின்றது. இதேவேளை இதன் சாதகமான விளைவுகளை நோக்கினால் விண்வெளி சம்பந்தமான 16500 ஆய்வுகளை நடாத்தி சாதனை கண்டுள்ளது. கணக்கிலடங்காத தடவைகளில் இக்களத்தில் செயல்படும் ஆண்கள் பெண்களுக்குமாக அச்சத்துடன் செயல்படும் நிலையிலேயே பூமியில் இருந்து செயல்படும் கட்டுப்பாட்டுத் தளம் செயற்பட்டு வந்திருக்கின்றது. 1990 இல் மிர்ரின் வெளித் திருத்த வேலைகளுக்காக மிர்ருக்கு இரு திருத்த விற்பன்னர்கள் அனுப்பப்பட்டனர். இவர்கள் மிர்ருக்கான வெளிப்பகுதி திருத்தவேலைகளுக்காக செயற்பட்டு, மீண்டும் மிர்ருக்குள் பிரவேசிக்க முடியாத நிலை ஏற்பட்டது. கடைசி நிமிடத்திலேயே அத்தியாவசியத் தேவைக்கான பாவிப்புக் கதவுகளூடாக மிர்ருக்குள் பிரவேசிக்க முடிந்தது. இப்பாதிப்புக்கு அவர்களுக்குத் தேவையான பிராணவாயுவும் (ஒட்சிசன்), வெப்பப் பதநிலையும், பிரதான தளத்தின் கணினியும் காரணமாக அமைந்திருந்தன.

பலவேளைகளில் இத்தளத்துள் கூட 40° வெப்பத்திலும் கடும் குளிரிலும் மாறிமாறித் தவித்தனர். மலசலகூடங்கள் ஒழுங்காக செயல்பட மறுத்தன. கிட்டத்தட்ட பயங்கரப்பாதிப்பு.

மிர்ருக்கு 1997-ம் வருடம் ஒரு கறுப்பு வருடமாக கணிக்கக் கூடியதாயிருந்தது. இவ்வருடம் பெப்ரவரியில் மிர் தளத்தில் தீயணைக்கும் கருவிகளைப் பயன்படுத்தி மிர்ரைக் காப்பாற்றிக் கொள்ளும் நிலையேற்பட்டது. இதேவருடம் 25-ம் திகதி ஜூன் மாதத்தில் நடந்த பிரச்சினைகளுடன் விபத்து ஏற்பட்டது. 'புறோகிறஸ் ட்ரான்ஸ்போட்டர்' எனும் இணைக்களம் மிர்ரின் தேவைகளுக்கான உபகரணங்களுடன் வந்தவேளை, மிர்ருடன் மோதி சேதத்தை உண்டுபண்ணிற்று. இச் சந்தர்ப்பத்தில் மிர் தனது கட்டுப்பாட்டு நிலையில் இருந்து விலகிவிட நேர்ந்தது. இத்தவறு நடந்ததற்கு Wassili wiblijez என்பவரே காரணமெனக் கூறப்படுகின்றது. ஏனெனில் தானியங்கியாக வருகின்ற இணைத்தளத்திற்கு அமைவாக மிர்த்தளத்தை நகர்த்தாமல் இருந்ததே காரணம் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவர் பூமிக்குத் திரும்பியதும் மற்றவர்களின் திட்டுதல்களுக்கு உள்ளாகி இதயநோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும், இக்குற்றத்தை புரிந்தமைக்காக இவருக்குத் தண்டனையாக குறைவான சம்பளமே வழங்கப்பட்டுள்ளது என்றும் அறியக்கூடியதாயுள்ளது. இம் மிர் தளம், கணக்கிலடங்கா திருத்த வேலைகளுக்குத் தொடர்ச்சியாகவே உட்பட்டுவந்திருக்கிறது.

### பூமியைச் சுற்ற 92 நிமிடங்கள்

ரஷ்ய விண்வெளித்தளமாகிய 'மிர்'எவ்விதமான பிரச்சினைகளைக் கொண்டிருந்தாலும் ரஷ்யமக்கள் மிர்ரை பெருமையாகவே கருதுகிறார்கள். 20-ம் திகதி பெப்ரவரி 1986 இல் இத்தளம் மணிக்கு 28,000 கிலோ மீற்றர் வேகத்தில் பூமியில் இருந்து 400 கிலோ மீற்றர் உயரத்தில் பூமியை 92 நிமிடத்தில் சுற்றிவந்தது.

அமெரிக்கர், ஜேர்மனியர் உட்பட கிட்டத்தட்ட 140 பேர் இத்தளத்திற்கு பிரவேசித்திருக்கின்றனர். மிர்ரில் பணியாற்றியவர்களில் Waleri Poljakow என்பவரே அதிகூடுதலான காலம் பணியாற்றியவராவர். இவர் 1994 தொடக்கம் 1995 வரை 439 நாட்கள் பணியாற்றியுள்ளார்.

அமெரிக்க ரொக்கெட்டான Atlantis முதலாவது தடவையாக 1995 ஜூன் மாதம் மிர்ருடன் இணைந்து ஒரு சரித்திர சாதனையை ஏற்படுத்தியது.

1998 ஜூன் மாதத்தில் அமெரிக்க ரொக்கட்டான 'U.S-Shuttle' ஒன்பதாவது தடவையாகவும் கடைசித் தடவையாகவும் மிர் தளத்திற்கு பிரவேசித்திருந்தது.

மிர் தளமானது பௌதீக ஆய்வு தளமாக மட்டுமல்லாது ஒரு மினி மிருகக் காட்சிச்சாலையாகவும், சிறு தாவரத் தோட்டமாகவும் அமைந்திருந்தது. இதில் பூச்சிகள், நத்தை போன்ற விலங்கினங்களும் வாழ்ந்து இருக்கின்றன. ஆயினும் மிர் விண்வெளிக்குச் சென்றவுடன் அதில் வாழ்ந்து வந்த எல்லா விலங்கினங்களும் உயிருடன் வாழவில்லை. சில அதற்குள்ளேயே இறந்துபோயின.

### இறுதியாகச் சுத்தம் செய்தல்

மிர் இயக்கத்திற்கான செயற்பாடுகளுக்கு இதன் இயக்கக் குழுவுக்கு பணம் எந்நேரமும் பிரச்சினையாக இருந்தது. மிர்ரில் பழுதடைந்த உதிரிப்பாகங்களை மாற்றுவதற்கு இப்பணப் பிரச்சினையால் மிகத்தாமதமாகவே மாற்று உதிரிப்பாகங்களைப் பொருத்தவேண்டியேற்பட்டிருந்தது. கடைசியாக வோக்கி தொடர்புகளைக்கூட குறைத்துக்கொள்ள வேண்டி ஏற்பட்டது. மிர்ரில் இருந்து இறுதியாகப் புறப்பட்ட இரு ரஷ்ய நாட்டவர்களும் ஒரு பிரெஞ்சு நாட்டவரும் மிர்ரின் பாசிகள் படிவுகளையும், கறள்களையும் சுரண்டிச் சுத்தமாக்கி வந்திருக்கின்றனர்.

மிர்ரில் இருந்து கடைசியாக வந்தவர்களில் ஒருவரான Viktor Afanasjen என்பவர் தாம் ரஷ்ய நாட்டின் ஒரு சிறிய பகுதியை 'விட்டுவிட்டு வந்ததாகக் கூறி' மிர்ரிடமிருந்து விடைபெற்றார்.


## ஸ்ரீ துர்க்கா திருமண சேவை

உங்கள் திருமணம், திருமண நாட்குறித்தல், பொருத்தம் பார்த்தல், ஜாதகம்பார்த்து பலன் சொல்ல, மற்றும் திருமணத்திற்குரிய குருக்கள், மணவறை, வீடியோ, சாப்பாடு, மேளம், ஹோல், வாகனம் சகல ஒழுங்குகளும் செய்து தரப்படும். மற்றும் ஏனைய விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.

சனி. ஞாயிறு ஆகிய நாட்களில் 14.01-2000 ஜனவரி மாதம் (தை மாதம்) மரணயோகம் கரிநாள் வருவதால் திருமணம் செய்யமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

K.Y.KURUKKAL
44, Rue Stephenson, 75018 Paris.
Tel: 01 42 51 43 43 - 06 12 31 33 41

Pub


# பலதும் பத்தும்

## திருமணநாள் 09.09.99

பலநாடுகளில் விசேட திகதித் தினமாகிய 09.09.99 அன்று பல திருமணங்கள் நடைபெற்றன.

மலேசியாவில் பல நூற்றுக் கணக்கான சோடிகள் பௌத்த விகாரைக்குத் திருமணம் செய்வதற்காகச் சென்றிருந்தனர். கோலாலம்பூரில் உள்ள பெரிய கோவிலில் மட்டும் 99 மணமக்கள் காலை 9.09 க்கு திருமண ஒப்புதலைத் தெரிவித்தனர்.

சாதாரணமாக இக் கோவிலில் ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட ஐந்து திருமணங்களே நடைபெறும். கூடுதலாக இளம் சீனமக்கள் இவ் இலக்கத்தின் மகிமையில் மயங்கினர். ஏனெனில் சீன சாத்திரப்படி 9-ம் இலக்கம் நீண்டகால வாழ்வு என்று அர்த்தமுள்ளது.

ஜேர்மனியிலும் இத்தினத்தன்று கூடுதலான திருமணங்கள் நடைபெற்றன. இந்நூற்றாண்டிலேயே சாதனைத் திருமண நாளாக இந் நாள் கருதப்பட்டுள்ளது. பேர்லினில் மட்டும் 887 மணமக்கள் திருமணம் செய்தனர். ஹம்பேர்க் நகரில் 310 திருமணங்கள் பதிவாகின. கல்யாண காரியாலயம் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 9.00 மணிவரை திறக்கப்பட்டது.

### ஒத்த எண் திகதி கணினிகளுக்கு பிரச்சினை தரவில்லை

09.09.99 திகதி ஒத்திருக்கும் காரணத்தினால் கணினிகளுக்குப் பிரச்சினைகள் ஏற்படலாம் என ஏற்கனவே எச்சரிக்கப்பட்டிருந்தது. ஏனெனில் 9-ம் இலக்கத்தை முடிவு என்னும் Code ஆக Computer Program இல் கொடுக்கப்பட்டிருந்ததனால் தடைகள் ஏற்படும் என அஞ்சவேண்டி ஏற்பட்டது. ஆயினும் எதிர்பார்த்ததுபோல் பிரச்சினைகள் ஏதும் ஏற்படவில்லை.

தொகுப்பு: ஜெ. சியாந்தி

## உலகை இணைக்கும் சில தகவல் வலைத் தொடர்புகள்

### தமிழ்ப் பக்கங்கள் சில

★ **www.geocites.com/tokyo/2530/whitepage.html**

இந்தப் பக்கத்தில் தமிழர்களின் தொடர்புகள் பற்றிய விபரங்களைக் காணலாம்.

★ **www.tamil european.com**

இது உலகத் தமிழர்களுக்கானது என தொடங்கியுள்ள போதும் போதுமான தகவல்களைக் காண முடியவில்லை. வர்த்தகம், மாணவர் அமைப்புக்கள், சமூகம் எனத் தொடர்புகளை ஓரளவிற்கு இதில் காணலாம். எதிர்காலத்தில் இப்பக்கம் நிறைவானதொன்றாக வரும் என நம்பலாம்.

★ **http://users.cyberity.clk/bdc3790/**

இதில் தமிழ் எழுத்து வடிவங்கள் பலவற்றைக் காணலாம். இப் பக்கத்தினூடாக தேவையான தமிழ் எழுத்துக்களை வாங்கியும் கொள்ளலாம்.

★ **www.ee.surrey/ac.uk/societies/tamisoc/tamic**

இப் பக்கம் புலம்பெயர் தமிழர்களின் பிரத்தியேக பக்கங்களின் கோவையாகும்.
இதற்குள் நுளைந்தால் உங்கள் நண்பர்களது பக்கங்களையும் பார்த்து அறிந்துகொள்ளலாம்.

★ **www.systemsplus.net/tamil/page3.html**


இப் பக்கத்தில் தமிழ் வானொலிகள், மற்றும் பாடல்கள் போன்ற பல இணைப்புக்களைக் காணலாம்.

# எட்டாம் ஆண்டு வீரவணக்கம்

## சுப்பிரமணியம் கமலநாதன் (கமல்)

(வேலணை மேற்கு)

**வீர மரணம்: 19.09.1991**



## லெப். ஜீவா

(சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைத்
தளபதி பால்ராஜின் பாதுகாவலர்)

**கமல்**

தேசத்தின் விடுதலைக்காய்
கனலாய் எழுந்தவனே
புயலாய் கிளர்ந்தவனே...
மொட்டு வயதினிலே
தேசத்துக்காய்
வித்தாய் வீழ்ந்தவனே...
வீரத்துடன் நீ சென்றுவிட்டாய்
வேதனையுடன் நாம்...
ஆண்டுகள் போனால் என்ன
அகிலமே மாறினால் என்ன
வீசும் காற்றிலும்
குதிக்கும் அலைகளிலும்
இயற்கையின் ஒவ்வொரு துளிகளிலும்
எங்கள் நெஞ்சின் அடிப்பிலும்
நேசத் துடிப்பிலும்
என்றும் உன் நினைவுகளே
நீக்கமற கலந்து...

(19.09.91 அன்று இவருடன் வீரமரணத்தைத்
தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்)

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தீவுப்பகுதி மக்கள்

Pub

# ஜே.என்.டிக்ஸிற்றின் வாக்குமூலம் 4

'அசைன்மென்ட் கொழும்பு' என்ற நூலில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டது.


## கொழும்பு பயணம்

திரு.ஜெயவர்த்தனா அரசாங்கம் – 1977 இல் பதவி ஏற்றது. அதே காலகட்டத்தில் திருமதி இந்திரா காந்தி அம்மையார் தேர்தலில் தோல்வியுற்று, திரு. மொரார்ஜிதேசாய் அவர்கள் அவ்விடத்தைக் கைப்பற்றினார். இந்தியா, சிறீலங்காவில் நடைபெற்றுக் கொண்டிருந்த விடயங்களைப் பற்றி உற்று நோக்கியதற்குப் பற்பல காரணங்கள் உண்டு.,



முக்கியமாக அந் நாட்டுக் கொள்கைகள், அரசியல் வாழ்க்கை முறைகள் போன்றவைகள் எனக் கூறலாம். அதே சமயத்தில் தமிழ்நாட்டில் உள்ள மக்களின் அபிலாசைகளையும் இந்திரா அம்மையார் நன்கு உணர்ந்திருந்தார். ஹிந்தியை முதன் முதலாக இந்தியா, அரச கரும மொழியாகப் பிரகடனம் செய்தபொழுது, இந்தியாவுக்குள் இருக்கும் மாநிலங்களுக்குள், தமிழ்நாடுதான் முதல் முதலாக அச் சட்டத்தை எதிர்த்துப் போராடியதை அவர் மனதில் வைத்திருந்தார். தமிழ் நாட்டில் உள்ள மக்களும், அரசியல் கட்சிகளும், சிறீலங்காத் தமிழ் இன மக்களுக்கு, என்றும் ஆதரவும் கனிவும் இரக்கமும் தொன்று தொட்டு வாழ்ந்து வந்த தமிழ் இனத்தை அடக்கி ஆளவும், தமிழருக்கு இடையே பூசல்களைத் தோற்றுவித்து, தமிழ்/சிங்கள சாதிக் கலவரங்களை உருவாக்கவும் உரிய நோக்குடன் சிலசில உதவிகள் பெற்றுவந்தார். சிறீலங்காவில் அமைந்துள்ள மத்திய மேற்குக் கரையோர மாகாணத்தில் உள்ள சிலாபம் என்னும் ஊரில், 'வோய்ஸ்–ஒப்–அமெரிக்கா' என்னும் அஞ்சல்நிலையத்தை அமெரிக்கா ஸ்தாபிப்பதற்கு, சிறீலங்கா, அமெரிக்க அரசுக்கு அனுமதி கொடுத்திருந்தது.

இவ் அஞ்சல் நிலையத்தினூடாக 'எலக்ரோனிக் கருவிகள் பூட்டப்பட்ட' உளவு ஸ்தாபனம் ஒன்றும் இயங்கப்போகின்றது என்னும் இரகசியம் இருக்கின்றது என்பது இந்தியாவுக்கும் நன்கு தெரியும். சிறீலங்கா, கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலை என்னும் நகரத்தில் இரண்டாவது உலக யுத்தத்தில் தமது நலம் கருதி அந்நியர்கள், 'ஓர் எண்ணெய்த் தாங்கிகள் கொண்ட தோட்டத்தை' உருவாக்கியிருந்தார்கள். இத் தோட்டம் யுத்தம் முடிந்த பிற்பாடு கைவிடப்பட்ட நிலையில் இருந்தது. இம் மையம் அக் காலத்தில், விமானங்கள்



கொண்டு இருந்தார்கள் என்பது உண்மை. ஆகையால் இந்திராகாந்தி அம்மையார் தமிழ்நாட்டு மக்களினது அபிலாசைகளைப் புறக்கணிக்க முடியாத நிலையில் இருந்தார்.

இரண்டாவதாக திரு. ஜெயவர்த்தனா தனது வெளிநாட்டுக் கொள்கைகளில் இந்தியாவின் நிலைப்பாட்டை நன்கு அறிந்திருந்தும், அதற்கு முரணான, பலவித தேவையற்ற, மனிதாபிமானம் அற்ற செயல்களில் ஈடுபட்டுவந்தமை வேதனைக்கு உரியது. 1977, 1983 களில் இவர் பாக்கிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளில் இருந்து சிறீலங்காவில் எண்ணெயை நிரப்புவதற்கும், வேறும் பற்பல காரணங்களுக்காகவும் அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இத் தோட்டத்தை உலகச் சந்தையில் இலங்கை ஏலம் போட்டது. இந்தியாவும் அவ் ஏலத்தில் பங்கு பற்றியது. இந்தியாவால் கொடுக்கப்பட்ட ஏலத்தின் தொகை மிக ஏற்கக் கூடியதாக இருந்தபோதும் ஜெயவர்த்தனா அரசு, இந்தியா சிறீலங்கா நாடுகளிற்கிடையில் உள்ள கருத்து வேறுபாடுகள் காரணமாக, ஓர் அமெரிக்க ஸ்தாபனத்துக்கு விற்றது. தென் கிழக்கு ஆசியாவில் இந்தியா ஓர் பெரிய வல்லரசு அப்படி இருந்தும் பாக்கிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளில் இருந்து உதவிகளும், உளவு வேலைகளும் நடைபெற்றன.

தொகுப்பு:
சி.சொக்கநாதன் பிரான்ஸ்

(வளரும்)

# தமிழர் நடந்த பாதை

10

## கி.மு. 1000 தொடங்கிய தமிழ் சீன உறவு

உலகின் மிக மூத்த இனங்களில் தமிழினம்போல் சீன இனமும் ஒன்று. மேலை உலகின் பழம் பேரினங்களோடு தமிழகம் உறவு கொண்டிருந்ததைப் போலவே கீழைத் தேயப் பேரினமாகிய சீன இனத்தோடும் உறவு கொண்டிருந்தது.

மூத்த இனமாகிய சீன இனத்தின் சீன மொழிக்கும் தமிழுக்கும்கூட உறவிருக்கின்றதென்றால் வியப்பாகத்தான் இருக்கும். அம்மா, அப்பா என்ற செந்தமிழ் . வடிவைப் பேச்சு நடையில் (அம்)மா, (அப்)பா என்போம். அதாவது மா,பா என்பதே பேச்சுவடிவம். சீன மொழியில் ma-Mother fa-Father எனத்தமிழ் வழங்குவதைச் சீன அகராதி கூறும்.

மூங்கில், கரும்பு போன்றவற்றின் தண்டுப்பகுதியை இணைக்கும் இடம் 'கண்' என்போம். நமக்கும் கை கால் விரல் பகுதிகளின் இணைக்கும் இடம் 'கண்' எனவே படும். பேச்சு வழக்கில் இதனைக் 'கணு' என்போம். சீன அகராதி con -joint என்று பொருள் சொல்லும் கனியின் முன்நிலை, காய். இது பச்சையானது. சீன அகராதியோ cai-vegtables groon எனப் பொருள் சொல்கிறது.



பேரா.கு.அரசேந்திரன்

பல்கலைச் செல்வர், பன்மொழிப் புலவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் தாம் எழுதிய 'தமிழ்மொழி வரலாறு என்னும் நூலில் சீனமொழியிலிருந்து தமிழுக்கு வந்து வழங்கும் சொற்களென மூன்றினைக் குறிப்பிடுவார். அவை படகினைக் குறிக்கும் சன்பான் (sanpan) என்பதும் மட்கலம் குறிக்கும் காங்கு (Kang) என்பதும் உண்கலம் குறிக்கும் பீங்கான் என்பதும் ஆகும். அதே நூலில் தெ.பொ.மீ. தமிழிலிருந்து சீனம் சென்ற சொல் ஒன்றேயொன்று என்பார். அவர் காட்டும்சொல் Houang-tche என்பது. இது காஞ்சி மாநகரைக் குறிக்கும் என்பார். தெ.பொ.மீ. கூறும் இச்செய்தி வரலாற்றுப் பேரறிஞர் நீலகண்ட சாத்திரியார் கூறியதே. நீலகண்ட சாத்திரியாரோ, தெ.பொ.மீ யாரோ குறிப்பிடுவதுபோல் சீன மொழியில் 'காஞ்சி' என்னும் ஒரு தமிழ்ச் சொல் மட்டும் வழங்கவில்லை. மேற்குறித்த அம்மா, அப்பா, கண், காய் ஆகிய நான்கினைப்போல் மேலும் பலநூறு தமிழ்ச் சொற்கள் கொத்துக் கொத்தாகச் சீன மொழியில் கலந்துள்ளன. தமிழர் நடந்த பாதைத் தொடரில் தேவைப்படும் பிறிதோரிடத்தில் தமிழ் சீன மொழி உறவை இயன்றவரை விளக்குவோம்.

இப்பொழுது வரலாற்றுச் சுவடுகளாகப் பதிந்த தமிழ் சீன உறவுகளைப் பற்றி மட்டும் சுருக்கமாகக் காண்போம்.

கி.மு. 1000 முதலாகவே தமிழகமும் சீனமும் வணிக உறவு கொண்டிருந்திருக்க வேண்டுமென கே.கே. பிள்ளை கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் கூறுகையில் 'மேலை நாடுகளுடன் மட்டுமின்றிக் கீழை நாடுகளான சீனம், மலேசியா ஜாவா (சாவகம்) வடபோர்னியா ஆகிய நாடுகளுடனும் தமிழகமானது மிகவும் வளமானதொரு கடல் வணிகம் நடத்தி வந்தது. சீனத்துடன் தமிழகம் கொண்டிருந்த வணிகத் தொடர்பானது மிகவும் பழைமையானதாகும். இத்தொடர்பு கி.மு. 1000 ஆண்டளவிலேயே தொடங்கிவிட்டதாகத் தெரிகிறது.

தமிழகத்துப் பண்டங்கள் கி.மு. 7-ம் நூற்றாண்டிலேயே சீனத்தில் இறக்குமதியாயின என்று அந்நாட்டு வரலாறுகள் அறிவிக்கின்றன. சீனத்துப் பட்டாடையும், சீனத்து சருக்கரையையும் தமிழகம் ஏற்றுக்கொண்டது. சருக்கரைச் சீனி என்ற பெயரே சீனத்தின் வழி வந்ததுதான் என்பார்.

சீன நாட்டுடன் உண்மையில் கி.மு.1000 முதல் தமிழகம் வணிக உறவு கொண்டிருந்திருக்க முடியுமா என வரலாற்று அறிஞர்களிடம் ஐயம் இருந்ததாகவும் அது பிலிப்பீன் தீவில் அண்மையில் நிகழ்ந்த அகழ்வாய்வின் மூலம் நீங்கிவிட்டதென்றும் கே.கே.பிள்ளை கூறுவார். அதாவது பிலிப்பீன் தீவில் கி.மு. 1000 ஆண்டுகால அளவிலான இரும்புக் கருவிகள், கத்திகள், கோடாரிகள், ஈட்டிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவையாவும் தமிழ் மக்கள் கி.மு 1000 ஆண்டில் பயன்படுத்தியதோடு ஒத்துள்ளன. தமிழகம் கீழை நாடுகளான சீனம், சாவகம் போன்றவற்றுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பையே இது காட்டுகின்றதென்பார் கே.கே.பிள்ளை.

வரலாற்றாசிரியர் தீபக்ரஞ்சன்தாஸ் என்பார் தமிழ் மக்கள் அந்நாளில் மேலை உலகிற்குக் கடல் வணிகம் செய்தபோது தமது நாட்டுப் பொருள்களை மட்டுமல்லாமல் சீனாவிலிருந்து பெற்ற பட்டு முதலான பொருள்களைக் கங்கையாற்றுப் பகுதி வழியாகத் தமிழகம்கொண்டு வந்து பின் மேற்குலகிற்கு அனுப்பி வைத்தனர் என Economie History of Daccan என்ற நூலில் கூறுகிறார்.

'தமிழ் வரலாறு' என்னும் நூலில் அதன் ஆசிரியர் இராகவையங்கார் சீனநாட்டு நூல்களில் தமிழ் மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர் குறிக்கப்பட்டுள்ளனர் என்பார்.

பூஹி எனச் சேரனும் ஷோஹாஷென்னி எனச் சோழனும் ஹாண்டி எனப் பாண்டியனும் அங்கு குறிக்கப்பட்டுள்ளனர் என்பார். பூழி என்பது சேர அரசர்களைக் குறிக்கும் எனவும் அச்சொல்லே பூஹி எனப்பட்டது என்றும் சோழன் சென்னி என்பதே ஷோஹாஷென்னி எனப்பட்டது என்றும் பாண்டியனே ஹாண்டியாயிற்று என்றும் இராகவையங்கார் கூறுவார்.

சீன நூலில் சுட்டப்படும் பாண்டியன் அரண்கள் பல அமைத்தான். தேர் பல ஆக்கினான்; அறிஞர் பலரைக்கொண்டு நூலாய்ந்தான்; இசைக்கு எல்லை கண்டான் என அங்கு பேசப்பட்டுள்ளான். சங்கம் பற்றித் தெரிவிக்கும் இறையனார் களவியல் உரை, இடைச் சங்கம் ஆய்ந்த அரசர்களில் வெண்டேர்ச் செழியன் என்று ஒருவனைக் குறிப்பிடுகின்றது. மேலும் குருகு, வெண்டாளி, இசைநுணுக்கம் முதலான நூல்கள் இடைச் சங்கத்தில் எழுந்தன என்றும் கூறுகிறது. இதை வைத்துப் பார்க்கும்போது சீன நூல் குறிக்கும் பாண்டிய அரசன் வெண்டேர்ச் செழியனாக இருக்கவேண்டுமென இராகவையங்கார் முடிவு செய்துள்ளார். இடைச் சங்க காலம் கி.மு. 600 க்கு முற்பட்ட காலமாதலால் தமிழ் சீன உறவு இதற்கு முன்பிருந்தே தொடர்வது புலனாகிறது.

தமிழ்நாட்டிற்கும் சீன நாட்டிற்கும் ஆன வணிக உறவுகளை உறுதிப்படுத்தும் வகையில் அகச்சான்றுகளாகத் தமிழ் நாட்டில் பல இடங்களில் சீன நாட்டுக் காசுகள் கிடைத்துள்ளன.

தொல்பொருள் ஆய்வறிஞர் நடன காசிநாதன் 'தமிழர் காசு இயல்' என்னும் தம் நூலில் கி.மு. 142 முதல் கி.பி. 1241 ஆம் ஆண்டுவரையில் முப்பத்தேழு காலகட்டத்தைச் சார்ந்த சீனக் காசுகளைத் தம் நூலில் எடுத்து விளக்கியுள்ளார்.

தமிழர் சீனர் உறவைத் தமிழ்நாட்டில் கிடைத்த சீனக்காசுகள் வழி நாம் அறியும் நிலை தாண்டிப் பிறிதொரு வகையிலும் வலுவாக அறிகிறோம். அதாவது சங்ககாலச் சோழப் பெருவேந்தர்களின் காசு அண்மையில் கீழை நாடான தாய்லாந்தில் 'குவான்லூக்பட்' என்னும் இடத்தில் கிடைத்துள்ளது.

அறிஞர் நடன காசிநாதன் தாய்லாந்தில் கிடைத்த சங்காலச் சோழர் காசுபற்றிப் பெருமிதமாக உரைப்பது இங்கு கருதத்தக்கது. 'மேலை நாடான ரோம் நாட்டுக் காசுகளும் கீழை நாடான சீன நாட்டுக் காசுகளும் தமிழகத்தில் கிடைத்து வருகையில் தமிழ் நாட்டின் பண்டைய காசுகள் ஏன் அந்நாடுகளில் கிடைக்கப்பெறவில்லை என்ற கேள்விக்குறி வரலாற்றாசிரியர்கள் மத்தியில் இருந்து வந்தது. அக் கேள்விக்கு விடை கிடைக்கும் வகையில் அண்மையில் கீழை நாடான தாய்லாந்தில் ருவான்லுக்பட் என்னுமிடத்திலிருந்து சங்ககாலத்தைச் சார்ந்த ஒரு சதுர செப்புக்காசு கிடைத்திருக்கிறது. இக் காசில் ஒரு பக்கம் யானை இடப்பக்கம் திரும்பிய நிலையிலும் யானைக்கு முன்பாக இரதமும் குதிரையும் காணப்படுகின்றன. மறுபக்கம் சோழர் சின்னமான புலி தம் வலக்காலை தூக்கிய நிலையில் இடப்பக்கம் திரும்பி நிற்கிறது. இக்காசு இரண்டு செ.மீ. அளவில் சதுர வடிவில் உள்ளது.

வாழ்ந்த இனங்களோடு ஒப்ப வாழ்ந்து அவற்றை வாழவும் வைத்த, வாழ்விழந்த தமிழினத்தின் வரலாற்றுப்பாதை இன்னும் தொடரும்.

(வளரும்)

# தெய்வம் நீயென்றுணர்

## (பாரதியார் நினைவாக)



**'பேசாப்பொருளை பேச நான் துணிந்தேன். கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன். மண் மீதுள்ள மக்கள், பறவைகள், விலங்குகள், பூச்சிகள், புல், பூண்டு, மரங்கள் யாவுமென்வினையால் இடும்பை தீர்ந்தே இன்பமுற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே செய்தல்வேண்டும் தேவதேவா.**
**இந்நாள் இப்பொழுது எனக்கு இவ்வரத்தினை அருள்வாய்'**

பேசாப் பொருளை நம் வாழ்வின் பேசும் பொருள் ஆக்கியவன் ஒருவன். அவன் நினைவாஞ்சலியாய் இதனை எடுத்தியம்புகின்றோம்.

வாழ்வு மகத்தானது; வாழ்வு உண்மையானது; நேர்மையானது. நேர்மையற்ற, உண்மையற்ற வாழ்வு தோற்றுப்போகும்.

பொய்யும், புளுகும், புரட்டும் கொண்டு வாழின், அந்த வாழ்வு அற்ப ஆயுளுடன் முடிந்துபோகும்.

இதனை எமக்குச் சொன்னான் ஒருவன். அவன் அப்படிச் செய்தான். அப்படி வாழ்ந்தான்.

வாழ்ந்தான் என்று மாத்திரம் வெறும் வாயினால், வெறும் வார்த்தைகளினால் சொல்லி விடமுடியுமா?

**நமக்குத் தொழில் கவிதை**
**நாட்டுக்குழைத்தல்**
**இமைப்பொழுதும் சோராதிருத்தல்**

இந்த வார்த்தைகளையும் விட்டவன் இவனே. இதனாலும், இதன் படியும் கூட இவன் வாழ்வு அமைந்தது.

இத்தகு வாழ்வு அமைதல் அபூர்வம். கடினம். கவிஞராய் இருந்து காலத்தை வென்றுகொண்டு-மனிதனாய் வாழ்ந்து மகாத்மாவாய் ஆதல் அதைவிடக்கடினம்.

**ஆடுதல் பாடுதல் கவி**
**ஆதி இனைய கலைகளில் - உள்ளம்**
**ஈடுபட்டென்றும் ஒழுகுபவர் - பிறர்**
**ஈனநிலை கண்டு துள்ளுவார்.**

துள்ளும் மனநிலையும் அவரிடம் இருந்தது. நெஞ்சு பொறுக்குதில்லை. இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால் நெஞ்சு பொறுக்குதில்லையே என்று துள்ளியது மாத்திரமல்ல; துடித்தெழுந்தது மாத்திரமல்ல, வேதனையில் பொருமும் மனநிலையும் அவரிடம் இருந்தது.

வேதனையில் பொருமினாரா? வெகுண்டெழுந்தாரா? அவர் கோபமெல்லாம் குமுறும் வார்த்தையில் தெரியும். மக்களால் போற்றப்பட்டவர், தெய்வமாக மதிக்கப்பட்டவர் மகாத்மாகாந்தி-பாரதியாரால் கூட வாழ்க நீ எம்மான் என்று வணங்கப்பட்டவர். ஆனால் மகாத்மாகாந்தி தவறிழைத்துவிட்டார் என்று பாரதியார் நினைத்தபோது-'மிஸ்ரர் காந்தி' என்று அழைக்கவும் அவர் தயங்கவில்லை. பாரதியாரின் புதிய ஆத்திசூடி அதனைத்தான் சொல்கின்றது.

**அச்சந்தவிர்**
**ஆண்மை தவறேல்**
**கொடுமையை எதிர்த்து நில்**
**சாவதற்கஞ்சேல்**
**சிதையா நெஞ்சு கொள்**
**சீறு வோர்ச்சீறு**
**சௌரியந்தவறேல்**
**தன்மையிழவேல்**
**தாழ்ந்து நடவேல்**
**தீயோர்க்கஞ்சேல்**
**தோல்வியிற் கலங்கேல்**
**நேர்படப்பேசு**
**நையப் புடை**
**பேய்களுக்கஞ்சேல்**
**போர்த்தொழில் பழகு**
**மானம் போற்று**
**ரௌத்திரம் பழகு**
**வீரியம் பெருக்கு**

சொன்னவன் பாரதி-சொல்லிய சொல்லில் வீரியம் பெருகும். கொடுமைகள் வீழ்ந்து பொடிபடப்போகும்.

கொடுமைக்காரனா பாரதி-கோபக்காரனா பாரதி.

முறுக்கிய மீசையும், முண்டாசுக் கட்டும் இந்த விதமானவன் தான் இவன். என்று செய்தி சொல்கின்றது.

கோபக்காரன்தான்-கொடுமைக்காரன் அல்லவே. சிறுமை கண்டபோது பொங்கியெழுங்கொடுமையின் குறியீடா? அல்லவே, கோபம் உள்ள இடத்தில் குணம் இருக்கும்-அதனால்தான் அவனால் இப்படியெல்லாம் சொல்லமுடிகின்றது.

**மனிதர் முகத்தை மனிதர் பழிக்கும்**
**வழக்கம் இனியுண்டோ ?**
**மனிதர் நோக மனிதர் வாழும்**
**வாழ்க்கை இனியுண்டோ ?**

உலகின் உன்னதமான வார்த்தை இதுவல்லவா? ஒரு மனிதர் நொந்துபோய் இருக்க இன்னொரு மனிதர் சுகபோகமாய் வாழும் வாழ்க்கையை இனியும் அனுமதிக்கப்போகிறோமா?

எவ்வளவு கனிவான வார்த்தைகள் இவை. எவ்வளவு அமுதமாய் நெஞ்சில் பொழியும் வார்த்தைகள் இவை-மனசு குளிர்கின்றதல்லவா? நமக்கென்றொரு நாயகன் அவன் என்று நெஞ்சம் விம்மும் வார்த்தைகளல்லவா? இவை-நமக்குக்கிடைத்த நல்ல நண்பன் என்று சொல்லத்தக்க வார்த்தைகளும் அவன் சமைத்தான்.

**மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்துவோம்** என்று கொளுத்தி எறிந்த வார்த்தைகள் பாரதியினுடையவை.

**'விடுதலைக்கு மகளிரெல்லோரும் வேட்கை கொண்டனர். வெல்லுவம்'**

**காலத்தைப் பதிவுசெய்து மாயோன் எழுதுவது**

என்று வீறார்ந்த வார்த்தைகளைக் கொட்டியவன் பாரதி

அந்த நாளில் இப்படிச் சொல்லல் சாத்தியமா? அட, இது என்ன அற்புதம் என்று வியக்க வைத்தான் பாரதி.

இவையா சொன்னான்? இன்னும் நாம் வியக்கும்படியாய்ச் சொன்ன வார்த்தைகளைக் கேளுங்கள்.

**ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று**
**எண்ணியிருந்தவர் மாய்ந்துவிட்டார்**
**வீட்டுக்குள்ளே பெண்ணைப்**
**பூட்டிவைப்போமென்ற விந்தைமனிதர் தலை கவிழ்ந்தார்.**

இதனைச் சொன்னவன், இப்படிச் சொன்னவ்ன் எங்கள் நண்பனல்லாது வேறுயாராக இருக்கமுடியும்? அண்ணனா, தம்பியா, தந்தையா, தனயனா அல்லவே-நண்பனால்தான் இந்த நல்வார்த்தை கூறிடமுடியும். வாழ்வின் மீதான நம்பிக்கை, வாழ்வின் மீதான விருப்பு, வேட்கை, வாழ்தலில் கிடைக்கும் உயிர்ப்பு அனைத்தும் இவன் வார்த்தையில் கிடைக்கும்.

கேளாதன எல்லாம் கேட்டுப்பெற்றோம். அடையாதன எல்லாம் அடைந்துகொண்டோம். காதலிலும்கூட இவன் கண்ணியமான வார்த்தைகள்-ஞாலத்தை மகிழ்விக்கும்.

**வார்த்தை தவறிவிட்டாய் கண்ணம்மா மார்பு துடிக்குதடி**

**பார்த்த இடத்தில் எல்லாம் உன்னைப்போல் பாவை தெரியுதடி.**

இந்த வார்த்தைகள் இவனது சொந்த வார்த்தைகள். தன் அனுபவத்தில் கிளர்ந்தெழுந்த வார்த்தைகள்.

இன்னும் சொல்வான்-இவன் வரிகளில் வலிமை இந்த விதமாய் வெளிப்படும்.

மின்னும் சொற்கள்-மின்னலாய் வெளிப்படும்
வார்த்தைகள் இதனைக் கேளுங்கள்

**மோகத்தைக் கொன்றுவிடு-அல்லால் என் மூச்சை நிறுத்திவிடு**
**தேகத்தைச் சாய்த்துவிடு-அதிலென்**
**சிந்தையை மாய்த்துவிடு**

வார்த்தைகளின் வலிமை-இதன் வாயினூடாக வெளிப்படுகின்றது.

வலிமை மிக்கன வார்த்தைகளா-செயலும் அத்தகையதே-போராட்ட வீரராய் இருந்தார். சுதந்திரமூச்சைச் சுவாசிப்பதால் சுகம் கண்டார்.

விடுதலைப்போரை-தன் வேராய்க்கொண்டார்.

**என்று தணியுமிந்தச் சுதந்திரதாகம்**
**என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்** என்று கேட்டார்.

**ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே**
**ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று**
என்ற பாடலையும் பாடுவதற்கும் பக்குவம் பெற்றிருந்தார்.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் பாரதம் சுதந்திரம் அடைந்ததில்லை. ஆயினும் சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று விடுதலைச் சங்கு முழங்கினார். காரணம் என்ன? காலத்தை வென்றவன் கவிஞன். கவிஞனின் கற்பனை, கவிஞனின் கனவு-யாவும் இலக்கை நோக்கியது. இலட்சிய பூர்வமானது-சுதந்திரக் கனவு கண்டபடி அவன் வாழ்ந்தான். சுதந்திரம் அடைந்து விட்டோமென்று அவன் கனவு கண்டான். அதனால் அப்படிப் பாடமுடிந்தது. அப்படியும் பாடியவன்தான் இப்படியும் பாடினான். ஐயோ இது அழிந்து போகப் போகிறதே என்று எண்ணி ஏங்கினான்.

**தண்ணீர் விட்டோ வளர்த்தோம்.**
**சர்வேசா இப்பயிரைக்**
**கண்ணீரால் காத்தோம்**
**கருகத் திருவுளமோ**
**எண்ணமெல்லாம் நெய்யாக**
**எம்முயிரினில் வளர்த்த**
**வண்ண விளக்கிது**
**மடியத் திருவுளமோ.**
**ஓராயிரம் வருடம் ஒய்ந்து கிடந்தபின்னர்**
**வாராதுபோல வந்த மாமணியைத் தோற்போமோ ?**

தோற்றுத்தான் போனோமா-துவண்டுதான் வீழ்ந்தோமா? கேட்பாரற்றுத்தான் கேலிக்குள்ளானோமா? மீட்பார் யாருமில்லையா? மீண்டும் உயிர்க்கோமா? பார்ப்போம் ஒருகை என்று பாரினில் நாம் உயரோமா?

உயர்வோம் இது உண்மை-வாழ்வின் வசந்தத்தை நோக்கி நாம் பெயர்வோம். இது பேதமை அல்ல.

**நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின**
**நன்மை கண்டோம்** என்று கும்மியடித்து நாம் வாழ்வோம். இது சத்தியமான வார்த்தை. இதுவே இவனுக்கு நாம் செய்யும் இறுதி அஞ்சலி. இவன் வாழ்வும் இறுதியில் முடிந்தது துயர்தான். ஒரு யானையின் கால் மிதிப்பில்-தும்பிக்கை வீச்சுக்களில்-இவன் காலம் ஆகிப்போனான். தமிழின் கவிதையின் ஒரு காலம் ஆகிப்போனான். வள்ளுவன், இளங்கோ, கம்பன். பிறகு இவன் ஒரு பாரதி என்று ஒரு காலம் ஆகிப்போனான்.

இவனால் இப்படித்தான் காலம் ஆகிப்போக முடியும். மனித உயிர்களை மாத்திரமல்ல, மற்றைய உயிர்களையும் மனதார நேசித்தவன்.

**கொத்தித் திரியுமந்தக் கோழி-அதைக் கூட்டி**
**விளையாடு பாப்பா**
**எத்தித்திருடுமந்தக் காக்காய்-அதற்கு**
**இரக்கப்படவேணும் பாப்பா**
**பாலைப் பொழிந்து தரும்பாப்பா-அந்தப் பசுமிக**
**நல்லதடி பாப்பா**
**வாலைக் குழைத்து வரும் நாய்தான்-அது**
**மனிதர்க்குத் தோழனடி பாப்பா.**
**வண்டியிழுக்கும் நல்ல குதிரை-நெல்லு**
**வயலில் உழுதுவரும் மாடு**
**அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு-இவை ஆதரிக்க**
**வேணுமடி பாப்பா**

எந்தப் பறவையும் எந்த விலங்கும் இவரது தோழர்கள். அதனால்தான் உயிர்களிடத்து அன்பு வேண்டும்-தெய்வம் உண்டென்று தானறிதல் வேண்டும்

வயிரமுடைய நெஞ்சுவேண்டும்.

உன் நெஞ்சில் அன்பும் வேண்டும் வயிரமுடையதாய் இருக்கவும் வேண்டும்.

இப்படிச் சொல்லும் அவன் வாழ்க. வாழ்வான். வாழ்கிறான். தமிழ் உள்ளளவும் அவன் தலை சாயாது-தமிழர் வாழும்வரை அவன் உடல் வீழாது-தமிழர் கனவு ஓங்கும்வரை அவன் உணர்வு ஓயாது.

**வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி**
**வாழிய வாழியவே.**
**வானமளந்த தனைத்தும் அளந்திடும்**
**வண்மொழி வாழியவே.**
**ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி- இசைகொண்டு**
**வாழியவே.**
**எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி**
**என்றென்றும் வாழியவே.**
**சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்**
**துலங்குக வையகமே**
**தொல்லை வினைதரு தொல்லையகன்று**
**சுடர்க தமிழ்நாடே**
**வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி**
**வாழ்க தமிழ்மொழியே**
**வானம் அறிந்த அனைத்தும் அறிந்து**
**வளர் மொழி வாழியவே.**


**சர்வதேச தமிழ் ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம் INTERNATIONAL TAMIL BROADCASTING CORPORATION**

**ITBC**
(FIRST DIGITAL RADIO IN TAMIL)

**24 மணி நேர சர்வதேச தமிழ் வானொலி**

(கனடாவிலிருந்து நேரடியாக ஒலிபரப்பாகின்றது)
**Eutelsat Hotbird 3 இல் 12475.5 Mhz**

**TECHNICAL PARAMETERS**

| | | | |
|---|---|---|---|
| Satellite: | Hotbird 3-13 degrees East | Polarization: | Horizontal |
| Platform: | DVB/MPEG-2(MCPC) | Symbol Rate: | 27,5 MS/s |
| Freqyency: | 1247550 | FEC: | 3/4 |

**ஒலிபரப்பாகும் நாடுகள்:**
42 ஐரோப்பிய நாடுகள் (Eutal sat Hotbird 3 இல்]
Canada உட்பட வட அமெரிக்கா (Fm சிறப்பலை வரிசையில்]
மத்திய கிழக்கு நாடுகள் (Eutal sat hot bird 3 இல்]
வெகுவிரைவில் இலங்கை, இந்தியா [சிற்றலை வரிசை]

**ITBC** இற்கு கடமைபுரிய சகல நாடுகளிற்கும் பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர்.

**தலைமையகத் தொடர்புகளுக்கு:**
**Tel: 1-416 412 7384 / Fax: 1-416 412 7386**

# கிடைக்கப்பெற்றோம்




## சுவிஸ் தமிழர் 2000

வெளியீடு:- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் - சுவிஸ் பணியகம்
தொடர்புகளுக்கு:- Swiss Thamilar
Tamilischer vgin für wirtschaft Wicklung
TEEDOR
Postfach-4, 8867 Niedeurnen, Swiss.



## சங்கமம்

– சிறப்புமலர் –

வெளியீடு:- நோர்வே தமிழ்ச் சங்கம்
தொடர்புகளுக்கு:- Tamil Sangam 1 Norge
Postboks 88 Romas,
0907 Oslo, Norway



## கனவின் மீதி

கவிதை தொகுதி
ஆசிரியர்:- கி.பி. அரவிந்தன்

தொடர்புகளுக்கு:-
Tel: & Fax: 0033 01 34 50 62 56
e.mail: kipian@free.fr
kipian@hotmail.com




## கரும்பனைகள்

கவிதை இசைத்தட்டு
ஆசிரியர் -வி.ரி இளங்கோவன்




## பிரேமவேட தமிழாலய விழா சிறப்பு மலர்

வெளியீடு: தமிழாலயம், பிரேமவேட - ஜேர்மனி

# 2ம் ஆண்டு வீரவணக்கம்

வீர ஜனனம்: 03.02.1977

வீர மரணம்: 17.09.1997



## லெப். பாவேந்தன்

### கைலாசபிள்ளை நித்தியானந்தன் (நித்தி)

*(கே.கே.எஸ். வீதி, மல்லாகம்)*

தம்பி! வீரத்தின் சின்னமே விடுதலை வேங்கையே
விடுதலைப் பாதையில் விடியலை நோக்கிச் சென்றவனே
விடியலின் ஒளி தெரியுமுன் உனது இலட்சிய ஒளி அணைந்துவிட்டது
அழுகுரலாய் வெடிக்கிறதே நம் இதயங்கள்.
ஆனாலும் தோற்காது நம் தமிழீழம்
உன்னைப் போல் ஆயிரம் வேங்கைகள் தோன்றுவார்கள்
மீட்பார்கள் நம் தாய்நாட்டை
அப்போ நிறைவேறும் உனது இலட்சியங்கள்
அதுவரை நீ உறங்கு நின்மதியாய்

*உனது பிரிவால் வாடும் இதயங்கள்*
*அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள்*

தகவல்: பிரான்ஸ்
ஆனந்தன் 01 69 53 13 01 / விஜி 04 75 57 18 40 / காந்தன் 01 40 38 16 54



# விடியலுக்காய் இருளானான்

ஆயுதம் எதுவுமின்றி ஆணவம் தானுமின்றி
நாவினையடக்கி ஒரு நாயகன் தவமிருந்தான்.
ஊனை உருக்கி உயர் யோகம் தனை ஒதுக்கி – கொண்ட
ஊரின் நன்மைக்காய் ஓர் உத்தமன் நோன்பிருந்தான்
தொன்று தொட்டு வந்த தமிழ் மண்ணின் துயர் துடைக்க
கொண்ட இலட்சியக் கொள்கையே பெரிதென்று
அண்டை நாட்டுப் படையின் அராஜகம் தனையெதிர்த்து,
வேங்கை கன்று அவன் அகிம்சை வேள்வி
வளர்த்திருந்தான்
கனவு நனவாகும் தமிழ் அன்னை தான் கொண்ட
தளைகள் சிதறிப் பொடியாகிப் போகும் என்று
நினைவிருந்த நிமிடம்வரை நிச்சயமாய் நம்பி அந்த
தலைவனின் தம்பி ஒரு விடியலுக்காய் இருளானான்
காந்தியை வென்றான்.
காந்தியக் கொள்கையில் கொடியேற்றினான்
வாழ்ந்திருந்த கணமெல்லாம் வாசனை தூபமானான்
மாந்தரின் தரம் அறிந்து அந்த மகாத்மா நோன்பிருந்தான்
பாவிகள் பார்த்திருக்க எங்கள் திலீபனோ தீபமானான்.

– செல்வராணி பத்மநாதன்

★ ★ ★

# மாவீரர்

காலத்தால் அழியாத கவிதை இவர்கள்
கல்லிலே வடிக்காத சிற்பங்கள்
நாம் சிந்திப்பதற்காக செயல்பட்டவர்கள்
செந்நிறத்துளியிலும் தேசம் கண்டவர்கள்
தேனிலும் இனிய மொழி பேசுபவர்கள்
கல்லினும் கனிய மனம் படைத்தவர்கள்
விண்ணையும் வென்றிடும் வீரம் கொண்டவர்கள்
ஆர்த்தெழும் அலையை அடக்கியாள்பவர்கள்
அனல் எனக் கொதித்து இடரினைத் தீர்த்தவர்கள்
இடர்பல கடந்து எம்முயிர் காத்தவர்கள்
சுடரென நின்று எம்முன் ஒளிர்பவர்கள்....

– யோ.விஜஜேந்திரன் இலண்டன்


# சுவிஸ் வாழ் தமிழ் மக்களே!

சிறீலங்காவில் உள்ள தேவையான உங்கள் ஆவணங்கள் சம்பந்தமான அலுவல்களை செய்ய பெற்றுத்தர உறுதியான முகவர் சேவை இங்கும்!

* பிறப்பு / இறப்பு பதிவு ஆவணங்களை பெற்றுத்தர
* திருமணப் பதிவு, திருமணமாகாத சான்றுப் பத்திரம்
* அடையாள அட்டை தொலைந்த / புதிதாக எடுக்க
* உறவினர்களை அழைப்பதற்கான சிறீலங்காவில் சுவிஸ் தூதரக ஆவண ஏற்பாடுகள் (இலங்கையில்)
* கடவுச்சீட்டு பெறத் தேவையான ஒழுங்குகள்

மற்றும் இவை சம்பந்தமான பலசேவைகளை (விரும்பினால் சுவிஸ் தூதரக உறுதிச்சான்றுடன்) வழங்க காத்திருக்கின்றோம்

* தொடர்புக்கு (சுவிஸ்) 076-5450938 ராம்

*திங்கள் - வெள்ளிக்கிழமைகளில் 14h - 17h30 -வரையும்*
*சனி ஞாயிறு 24 மணி நேரமும்*

Pub sw

# அன்னை பூபதி அரங்கில் பிறேமவேட தமிழாலய எழுச்சி விழா!

தமிழீழ சிறுவர் ஆண்டை சிறப்பித்து சிறுவர்களால் நடாத்தப்பட்டது.

ஜேர்மன் உலகத் தமிழர் இயக்கக் கல்விப்பணியின் கீழ் இயங்கும் பிறேமவேட தமிழாலய விழா வெகு சிறப்பாக நடாத்தப்பட்டது. மண்டபம் நிறைந்த கூட்டத்தினர் மத்தியில் மாணவர்கள் தங்கள் திறமைகளைக் காட்டினர்.

பிறேமவேட Hauptschule மண்டபத்தில் இவ்விழா 28.08.99 சனி







யன்று இடம்பெற்றது. அமைதி வணக்கத்தையடுத்து பிறேமவேட மாநகர பிரதி முதல்வர் திரு.Huberalf, உலகத் தமிழர் இயக்க கல்விப்பணிப் பொறுப்பாளர் திரு.இரா. நாகலிங்கம்






ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

தமிழாலய கீதத்தையடுத்து வரவேற்புரையை மாணவி சஞ்சயனி இந்துராசா வழங்கினார். அகிலன் வரதராஜா விழாவில் கலந்துகொண்ட ஜேர்மன் பிரமுகர்களுக்கு ஜேர்மன் மொழியில் வரவேற்புரை வழங்கினார்.

முதல் நடன நிகழ்ச்சியாக 'பரணிபாடுவோம்' என்ற பாடலுக்கு பிறேமவேட தமிழாலய மாணவிகள் எழுச்சி நடனமொன்றை வழங்கினார்கள்.

பிறேமன் ஆர்ஸ்டன் தமிழாலய மாணவிகளான கார்த்திகா ஆனந்தராசா, சுரதா சந்திரபாலன், சங்கீதா சந்திரபாலன் ஆகியோர் அபிநயப்பாடலொன்றை வழங்கினார்கள்.

நிகழ்ச்சிகளுக்கிடையில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட பிறேமவேட மாநகர பிரதி முதல்வர் திரு. Huberalf உரையாற்றினார். அவர் தமது உரையில்,

'சிறீலங்காவில் நடைபெறும் நிம்மதியற்ற நிலைகுறித்து அடிக்கடி நான் செய்திகளில் வாசித்துள்ளேன். அண்மையில் அது தொடர்பான புத்தகம் ஒன்றை வாசித்து பல விபரங்களை அறிந்துகொண்டேன். அங்கிருந்து நீங்கள் துரத்தப்பட்டவர்கள். இங்கு உங்களுக்கு அமைதியான வாழ்க்கை கிடைத்திருந்தாலும், உங்கள் தாய்நாட்டில் நிம்மதி ஏற்பட நா்மும் பிரார்த்திக்கின்றோம்'! என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட உலகத் தமிழர் இயக்க கல்விப் பணிப்பொறுப்பாளர் திரு.இரா. நாகலிங்கம் பேசுகையில், 'விழா அரங்கிற்கு அன்னைபூபதி அரங்கம் எனப் பெயரிடப்பட்டுள்ளதிலிருந்து உங்கள் உணர்வுகளைப் புரிய வைத்துள்ளீர்கள். ஜேர்மனி முழுவதும் நூற்றுக்கும் அதிகமான தமிழாலயங்களை அமைத்து உலகத்தமிழர் இயக்கக் கல்விப் பணி தமிழ் மொழிக்கல்வி கலாச்சா




ரங்களைப் பரப்பி வருகின்றது. இதுபோன்ற விழாக்களில் சரளமாகத் தமிழ் மொழியில் உரையாடுகின்றார்கள். எனவே எமது தமிழாலயங்களுடன் இணைந்து செயற்படுமாறு அனைத்து பெற்றோர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்' எனத் தெரிவித்தார்.

பிறேமவேட தமிழாலய விழாவில் அன்னைபூபதி அரங்கில் முன்ஸ்ரர், கம்பேத்க், பிறேமன், ஆர்ஸ்டன் ஆகிய தமிழாலய மாணவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தது விசேடமாகக் குறிப்பிடக்கூடியதொன்றாகும். தமிழரின் தொன்மைக் கலையையும் தமிழீழ விடுதலையையும் எடுத்துக்காட்டும் எட்டு நடனங்கள் இடம்பெற்றன.

நடனங்களை ஜேர்மன் கலை பண்பாட்டுக் கழக நடன ஆசிரியர் பரதகலாவித்தகர் கலைமாமணி திருமதி அற்புதராணி கிருபராஜ் தயாரித்து வழங்கினார்.

அன்னை பூபதி நாட்டிய நாடகத்தை திருமதி அற்புதராணி கிருபராஜ் வழங்கினார்.

இதன் பின்னர் கவிதை, சிறுவர் பாடல், பேச்சு என்பனவும் இடம்பெற்றன. பிறேமவேட தமிழாலயத் தயாரிப்பான ஒற்றுமையே பலம் என்ற ஓரங்க நாடகமும் இராச முருகவேலின் தேசமும், நேசமும் என்ற நாடகமும் சிறப்பாக அமைந்தன.

'வெளிநாட்டில் தமிழ் மொழிக் கல்வி அவசியமா? அவசியமில்லையா?' என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றம் சபையோர் மத்தியில் பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியது.

இருபதிற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்துகொண்ட வினோத உடைப்போட்டி மிகவும் சிறப்பாக அமைந்தது.

இறுதியாக, தமிழாலய விழாச் சிறப்பு மலரை ஆரிசியை திரு.ஆ நாகலிங்கம் வெளியிட்டு வைக்க, அதனை பிறேமகாவனைச் சேர்ந்த திருமதி பத்மாவதி கலைச்செல்வன் பெற்றுக்கொண்டார்.

மிகச் சிறப்பாக நடந்த தமிழாலயவிழா மொத்தத்தில் ஒரு எழுச்சி விழாவாக அமைந்துவிட்டது. பிறேமவேட தமிழாலய மாணவர்களுக்கும், நடனத்தில் பங்குகொண்ட மாணவர்களுக்கும், பரிசுகள் வழங்கப்பட்டன. பரிசுகளை திரு. திருமதி நாகலிங்கம் வழங்கினார்கள். பிறேமவேட தமிழாலய நிர்வாகி திரு. வரதராஜாவின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

*- வீ.ஆர்.வரதராஜா*


## அம்பாள் வாகன சேவை
## AMBAL TRANSPORT

பொருட்களை ஏற்றி இறக்கவும், மங்கள வைபவங்கள், ஸ்தல யாத்திரைகள், சுற்றுலாக்கள், ஐரோப்பிய நாடுகளுக்கான 9 இருக்கைகள் கொண்ட வாகனசேவைகளுக்கு



**ஜெயம்:**
26, Rue Perdonnet, 75010
Paris.
Mo: La Chapelle
Tel: 06 03 84 02 29 / 06 10 38 44 92 / 06 84 57 21 77


# புகலிட நிகழ்வுகள்

## கரும்புலிகள் ஞாபகார்த்த உதைபந்தாட்டம் டென்மார்க் - 99

கரும்புலிகள் ஞாபகார்த்தமாக வருடா வருடம் நடாத்தப்படும் ஐரோப்பா ரீதியிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 6-வது ஆண்டு நிறைவாக பல விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்றுக்கொள்ள போடிங் எனும் பிரதேசத்தில் 28.08.99 சனிக்கிழமை காலை 10 மணியளவில் போட்டிகள் ஆரம்பமாகியது. ஏழு நபர் கொண்ட குழு நிலைப் போட்டியாய் அமைந்



திருந்த போட்டி நிகழ்வுகளில் ஜேர்மன், நோர்வே விளையாட்டுக் கழகங்கள், முறையே பாஷையூர் சென், அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும், செந்தமிழ் விளையாட்டுக் கழகங்கள், மற்றும் டென்மார்க்கில் பல பிரதேசங்களில் இருந்ததுமான விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றிச் சிறப்பித்ததுடன், இவ்வாண்டு இரண்டாவது தடவையாக 14 வயதிற்கு உட்பட்டோருக்கான உதைபந்தாட்டப்போட்டி நடாத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

போட்டிகள் யாவும் மாலை 5.00 மணிக்கு இனிதே நிறைவு பெற வெற்றிக் கிண்ணங்கள் வழங்கும் வைபவம் ஆரம்பமா



கியது. காரியாலயத்தின் முன் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் பார்வையாளர்கள் ஒன்று கூட தமிழீழ தேசியக்கொடி பறந்துகொண்டிருக்க திரு.பொ. மகேஸ் அவர்கள் சிறு உரையாற்றினார். எம் தேசத்தின் விடுதலையை வென்றெடுக்கும் போராட்டப்பாதையில் ஆணிவேராகத் திகழும் கரும்புலிகளின் ஞாபகார்த்தமாக இடம்பெறும் இப்போட்டியில் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ இளைஞர்கள் மத்தியில் இருக்கவேண்டிய கட்டுப்பாடு மற்றும் புரிந்துணர்வு பற்றி எடுத்துக் கூறினார். இதனைத் தொடர்ந்து வெற்றிக் கிண்ணங்களை வழங்க டென்மார்க் தமிழ் அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் திரு. பூபாலசிங்கம் அவர்கள் அழைக்கப்பட்டார்.

சிறுவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மூன்றாவது இடத்தை ஈகாஸ்ற் அமிகா விளையாட்டுக் கழகமும் இரண்டாவது இடத்தை கோர்செனஸ் விளையாட்டுக் கழகமும் முதலாவது இடத்தை ஓபென்றோ விளையாட்டுக் கழகமும் தட்டிச் சென்றன.

இவற்றை அடுத்து, பெரியவர்களுக்கான போட்டிகளில் சிறந்த விளையாட்டு வீரராக ஸ்ருவர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுரேஸ் என்பவர் கிண்ணத்தைப் பெற்றுக்கொள்ள சிறந்த பந்துக் காப்பாளராக பாஷையூர் சென். அன்ரனிஸ் (ஜேர்மன்) கழகத்தைச் சேர்ந்த தயாளன் என்பவர் பெற்றுக் கொண்டார். இறுதியாக கரும்புலிகள் ஞாபகார்த்தமாக இடம்பெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்ட கழகங்கள் முறையே, மூன்றாவது இடத்தை கோர்சன்ஸ் விளையாட்டுக் கழகமும், இரண்டாவது இடத்தை பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும், கரும்புலிகள் சவால் கிண்ணத்தை முதலாவதாக வந்த ஸ்ருவர் விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டது. இத்துடன் புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் எனும் கோஷத்துடன் கரும்புலிகள் ஞாபகார்த்த உதைபந்தாட்டப்போட்டிகள் யாவும் இனிதே நிறைவுபெற்றன.

*– செ.ஆனந்தன்*

# பாரிசில் பவளவிழா

கடந்த 5.9.99 ஞாயிறு மாலை பாரிசில் இரண்டு நிகழ்ச்சிகள் ஒரே மேடையில் மேடையேறியது. பாட்டுக் கனகரின் பவள விழாக்கோலம், 'பாரிஸ் வந்தோம்' புகழ் சத்தியாவின் 4-வது இசைத்தட்டான 'ராகரசம்' இசைத்தட்டு வெளியீடு ஆகிய இரு நிகழ்ச்சிகளும் இடம் பெற்ற இவ்விழாக்கோலம் வாசலில் பவளவிழா நாயகன் கனகரத்தினம் அவர்களுக்கு மாலையிட்டு, மேடையில் நடைபெற்ற இளைய நிலா இசைக்குழுவின் இசையுடன் மேடைக்கு அழைத்து வரப்பட்டதுடன் ஆரம்பமாகியது. மேடையில் விழாநாயகன் தன் துணைவியாருக்கு மலர் மாலையிட்டதன் பின் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது.

வரவேற்புரையை திரு.வண்ணை தெய்வம் ஆற்ற, தலைமையுரையை திரு.சி. காராளபிள்ளை ஆற்றினார். தலைமையுரையின் போது அவருக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது.

தொடர்ந்து திரு.தயாநிதி, திருகிரகரி தங்கராஜா, திரு. குணபாலன் ஆகியோருடன் இன்னும் சில கலைஞர்கள் உரையாற்றினர். விழுது கலை ஊக்குவிப்பு மன்றத்தின் வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது.

விழாமலரை திரு. காராளபிள்ளை வெளியிட்டுவைக்க திரு.இராகுலன் பெற்றுக்கொண்டார். ஏற்புரை நிகழ்த்த வந்த பாட்டுக்கனகருக்கு பொன்னாடை போர்த்தப்பட்டதைத் தொடர்ந்து பாடல் ஒன்றைக் கணீரென்று பாடினார். தொடர்ந்து இவரைக் கலைக்கோவில் சார்பாக கௌரவிப்பதாகக்கூறி, பொன்னாடை போர்த்தி, கலைக் கோவில் சின்னம் பொறிக்கப்பட்ட தங்கப்பதக்கத்தை அணிவித்தார்.

பார்வையாளர்களிடையே விழா மலரை விநியோகித்துக் கொண்டிருந்த திரு.வண்ணை தெய்வம் திடீரென மேடையில் தோன்ற, 'இரண்டே நாட்களில் விழாமலரைச் சிறப்பாகச் செய்து கொடுத்ததற்காக அவருக்குப் பொன்னாடை போர்த்தப்படுவதாக அறிவிக்கப்பட்டு போர்த்தப்பட்டது'

'பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசுவது' போல் எனக்கு இந்த கௌரவத்தைத் தந்ததற்கு நன்றி என்று கூறி ஏற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சி ஏற்பாட்டில் முக்கிய பங்கேற்ற திரு. இராகுலனின் நன்றியுரையுடன் முதல்கட்ட நிகழ்ச்சிகள் நிறைவெய்துவதாக அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து இளையநிலா இசைக் குழுவினர் சில பாடல்களை வழங்கினர். ஹிந்திப் பாடல் ஒன்றிற்கு ஒரு இளம் பெண்பிள்ளை நடனமாடியிருந்தார். பெடியள் 'குளிர்ச்சியாயிருந்ததாகக்' கூற பெண்கள் தலையைக் குனிந்துகொண்ட இந் நடனத்தில் உடையில் கவனம் செலுத்தப்படாதது ஏன்? 'அது மொறீசியஸ் பிள்ளை' என்றார்கள். அப்படியாயினும் ஏறியது தமிழர் கலைநிகழ்வொன்று நடக்கும் மேடையில் அல்லவா?

விழுதுகள் நடனக் குழுவின் நடனம் இடம்பெற்றதைத் தொடர்ந்து இரண்டாம் கட்ட நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

ராகரசம் இசைத்தட்டை வெளியிட வரவழைக்கப்பட்டிருந்த ஈழநாடு பிரதம ஆசிரியர் திருஎஸ்.குகநாதனின் உரையைத் தொடர்ந்து இசைத் தட்டை உருவாக்கிய சத்தியா அவர்கள் திரு. குகநாதன் அவர்களையே இசைத்தட்டை வெளியிட்டு வைக்கும்படி கேட்டுக்கொண்டார். முதல் பிரதியைப் பெற்றுக் கொண்ட குமார்ஸ் ஸ்தாபன உரிமையாளர் திரு. சந்திரகுமார் அவர்கள் சத்தியாவின் முயற்சியைப் பாராட்டி இது தொடர வேண்டும் என்றார். வாழ்த்துரையை திரு. காராளபிள்ளை வழங்கினார்.

கலைக்கோவில் சார்பில் திரு. தயாநிதி. திரு. சத்தியாவிற்கு பொன்னாடைபோர்த்த, திருகிரகரி தங்கராஜா தங்கப்பதக்கத்தை அணிவித்தார்.

மீண்டும் பாட்டுக்கார கனகர் மேடையில் தோன்றி 2 பாடல்களைப்பாட அவருக்கு மீண்டும் பொன்னாடை போர்க்கப்பட்டது. அவரின் பாடலுக்கு மேடையின் முன்னர் ஒருவர் உற்சாகமாக ஆடினார்.

விழாக்களின்போது புகைப் படங்கள் பிடிப்பதுபோல் மேடையில் சிலர் ஏறி பக்கத்தில் நின்றபடி 'போஸ்கொடுத்தனர்'.

அவரின் மகள் ஒரு பாடலைப் பாடியதைத் தொடர்ந்து சத்தியா தனது இசைத்தட்டிலிருந்து ஒரு பாடலைப்பாடினார். சத்தியா பேசும்போது 'பொன்னாடை தங்கப்பதக்கத்திற்கான தகுதிக்கு நான் இன்னும் வரவில்லை. வந்தபின் இப்படியான கௌரவத்தை நான் ஏற்றுக்கொள்வேன்' என்று கூறினார்.

திரு.V.T.இளங்கோவன், திரு. V. கனகரத்தினம் அவர்களை வாழ்த்தியதைத் தொடர்ந்து மீண்டும் பாட்டுக்கார கனகருக்கு பொன்னாடை போர்த்தப்பட்டது.

வாழும் காலத்தில் கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்பது இவர்களின் கருத்தாக இருந்தாலும் கலைஞர்களை கௌரவிப்பதற்கு பொதுவான ஒரு அமைப்பு உருவாக்கப்படுவதே சிறந்ததாக இருக்கும்

- கரிகாலன்

# பற்றீசியன் கலைநிலா 99

150வது ஆண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத்தின் பழம்பெரும் கல்லூரியான யாழ். பற்றீசியன் கல்லூரியின் பழையமாணவர்கள் சங்கத்தின் கலைநிலா-99 நிகழ்வுகள் கடந்த 11.09.99 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் ஒபேர்வில்லியே மண்டபத்தில் இடம்பெற்றது. பிரதமவிருந்தினர்களாக கலந்து கொண்ட பாலகிருஷ்ணன் தம்பதிகளின் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து, பாடசாலை கீதம், சுபஸ்வரங்கள் இசைக் குழுவின் 'பின்னணி இசையுடன்' பாடப்பட்டது. அமைதிவணக்கம் இடம்பெற்றதைத் தொடர்ந்து வரவேற்புரையை சங்கத்தின் பொது செயலாளர் திரு.அ.வ. டேமியன் வழங்க, தலைமை உரையை திரு. பாக்கியராஜா அவர்கள் வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. பாலகிருஷ்ணனின் உரை இடம்பெற்றது.

கலை நிகழ்வுகளாக செல்வி சர்மினி குணலிங்கத்தின் இரு நடனங்களும், சப்தஸ்வரங்களின் இசை நிகழ்வும் இடம்பெற்றன. இவ் இசைக்குழுவால் இயற்றிப் பாடப்பட்ட 'போராடப் புறப்படு நீ' பாடல் வரவேற்கத்தக்கதாக அமைந்திருந்தாலும், இசையமைப்பில் முன்நோக்கி வருவதற்கு இன்னும் 'கடும் முயற்சி' செய்ய வேண்டும் என்பதையே இசையமைப்பு உணர்த்தியது.

## திலீபனின் 12வது ஆண்டு எழுச்சி நினைவுநாள்



**பிரான்சில்...**

காலம்: 26.09.1999
நேரம்: 4.30 மணி
இடம்: Gerard Philipe
22, Av Emile Cossonneau
93160 Noisy Le Grand
(Trèsor Public முன்பாக)
பஸ்தரிப்பு: 303 'Mairie'
220 'எallieni'
320 `Gallieni'
RER A: Noisy Le Grand

தமிழர் கலை பண்பாட்டுக் கழகம்— நெய்சிலுகுறொண்
மேலதிக தொடர்புகளுக்கு: 01 43 58 11 42

**ஜேர்மனியில்...**

காலம்: 25.09.99 சனிக்கிழமை
நேரம்: 17.00 மணி
இடம்: Wupperhalle
Hünefeld Str 636
42285 Wuppertal.

புலம்பெயர் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம் சிறார்களின் ஆரோக்கியமான எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டு தமிழ்க் கல்வித்தொண்டு நிறுவனமாக பிரான்சில் உருவகம் பெற்றுள்ளது

தமிழ்ச்சோலை

தம் பெற்றோருடனும் உலகெங்கும் வியாபித்து குடியிருக்கும் உற்றார், உறவுகளுடனும் நெருக்கமாகப் பேசி உறவாட நம் சிறார்கள் தமிழ்ச்சோலையில் இணைந்து தமிழையும், எம் கலை— பண்பாட்டையும், எம் வரலாற்று வேர்களையும் கற்கிறார்கள்.

தமிழ்ச்சோலை
80, Bd. Genèral Leclerc, 92110 Clichy.
Tel: 01 41 06 07 67

92110-Clichy-92 பள்ளியின் ஆரம்பம் சம்பந்தமாக பெற்றோர், நிர்வாகிகள் கலந்துகொள்ளும்

கலந்துரையாடல்

காலம்: 26.09.99 ஞாயிறு பிற்பகல் 3.00 மணி12.00
இடம்: 80 Bd General Leclerc
92110 Clichy.

Pub Gra.

## பிரான்சில் 30வது தமிழ்ச்சோலைப் பள்ளி

பிரான்சில் 30வது தமிழச் சோலைப் பள்ளி கடந்த 15.09.99 அன்று ஆரம்பிக்கப்பட்டள்ளது. பாரிசின் புறநகர் பகுதியான செல் நகரில் ஆரம்பிக்கப்பட்டு இப் பள்ளியை, புனர்வாழ்வு கழக கிளையின் தலைவர் திரு. சிறீதரன், தமிழ்ச்சோலை தலைமைப் பணியகப் பிரதிநிதி திரு. மு.அருளம்பலம் முன்னிலையில் அம் மாநகரசபையின் பிரதிநிதிகளான திருமதி றெனோ (Raynald), திருமதி பீலிக்ஸ் (Felix) ஆகியோர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். இந் நாளில் 29 சிறார்கள் தமிழ்க்கல்வியை ஆரம்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்ச்சோலை

ஆசிரியர்கள் தேவை

பிரான்சில் வளரும் நம் சிறார்களின் எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு நம் அடுத்த தலைமுறை வரும் நூற்றாண்டில் தலை நிமிர்ந்து வாழ்ந்திட வழிகோல சமூக ஆர்வலர்களும் தமிழ் ஆர்வலர்களும் உருவாக்கிய தொண்டு நிறுவனம் தமிழ்ச்சோலை. தன் பணிகளின் விரிவாக்கத்திற்கு பின் வரும் துறைசார்ந்த ஆசிரியர் வழிகாட்டிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

**மொழியியல்:** தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன்.
**நுண்கலை:** நடனம், சங்கீதம், இசைக்கருவிகள்....
**கணினியியல்:** பள்ளிப்பாடங்களுக்கான மீட்டல்

விண்ணப்பங்களுடன், சுய விபரக்கோவை (C.V) இணைத்து அனுப்பவேண்டிய முகவரி:

தமிழ்ச்சோலை
22, Rue Perdonnet, 75010 Paris.

Pub Gra

புலம்பெயர் சூழலுக்கேற்றவகையில் எம் தமிழ்மொழி அடையாள அறிவூட்டலை பாடத்திட்டமாக வரையும் கடமையில் தமிழ் ஆர்வலர்களும், சமூக ஆர்வலர்களும், ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இதன் முதற் கட்டமாக தமிழ்ச் சுவடி—1 வெளிவந்துவிட்டது. தொடரப்படும் அடுத்தகட்ட வேலைகள் முடிய சுமார் 2 வருடங்களாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகளுக்கான செலவீனங்களை ஈடுசெய்ய, எம் முகம் பார்த்து வளரும் நம் சிறார்களின் எதிர்கால நலன்களுக்காக அனைவரும் உளப்பூர்வமாக ஒருங்கிணைவோம்! செயற்படுவோம்!!

தமிழ்ச்சோலை

தலைமைப் பணியகம்.
22, Rue perdonnet, 75010 Paris.
Tel: 01 40 37 68 68 - Fax: 01 40 37 64 64

நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்!
Notre langue maternelle est la racine de notre bien être!

நல்வாய்ப்புக் குலுக்கல்

பிரான்சு தமிழ்ச்சோலைப் பள்ளிகளின் வளர்ச்சிக்காக
Aidons nos enfantsà apprendre leur langue maternelle `Tamoul'

நல்வாய்ப்புக் குலுக்கல்

குலுக்கல் நாள்: 17.10.1999 ஞாயிறு
அன்பளிப்பு 10 Frs மட்டுமே

1ம் பரிசு: கணினி (Pentium-II Complet)
2ம் பரிசு: புகைப்படக் கருவி (Canon-N 500)
3ம் பரிசு: மின் இசைக்கோவை (Orgue-Casio)
4ம் பரிசு: நவீன தையல் இயந்திரம் (Singer)
5ம் பரிசு: உயர்தர துவிச்சக்கரவண்டி (Vèlo Vtt)

தவிர 100 ஆறுதல் பரிசில்கள்

Pub Gra

# கனடாவில் இந்தியா, பாகிஸ்தான் வெற்றி





கனடா ரொரன்ரோ நகரில் இந்திய, பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடைபெறவிருந்த 5 ஒருநாள் பந்தயங்கள் இருநாடுகளுக்குமிடையில் நிலவும் பதட்ட நிலை காரணமாக நிறுத்தப்பட்டது. இருந்தும் மூன்றாவது நாடாக மேற்கிந்தியத்தீவுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டு இந்திய - மேற்கிந்திய தீவுகள் பாகிஸ்தான் மேற்கிந்திய தீவுகள் என மும்மூன்று ஆட்டங்களாக மாற்றப்பட்டது. முதலில் நடைபெற்ற இந்தியா மேற்கிந்திய தீவுகளுக்கிடையிலான முதல் போட்டியில் இந்தியாவும் இரண்டாவது போட்டியில் மேற்கிந்திய தீவுகளும் வெற்றி பெற்றதால் இறுதி மூன்றாவது போட்டி பலத்த எதிர்பார்ப்புகளுக்கு உட்பட்டபோது இந்திய அணி வெற்றி பெற்றது. உலகக்கிண்ணப் போட்டிகளிலிருந்து தோல்விமேல் தோல்வியைச் சந்திக்கும் இந்திய அணிக்கு இவ் 2:1 வகையிலான வெற்றி சற்று உற்சாகத்துடன் ஆடவைக்கிறது.

அடுத்து நடைபெற்ற பாகிஸ்தான் - மேற்கிந்திய தீவுகளுக்கிடையிலான மூன்று போட்டிகளிலும் பாகிஸ்தானின் கரம் வலுவாக உயர்ந்து காணப்பட மூன்றிலும் பாகிஸ்தான் எளிதாக' வெற்றி கொண்டது. உலகக்கிண்ண இறுதிப்போட்டி தோல்வியால் பல சங்கடங்களைச் சந்தித்து வரும் பாகிஸ்தான் அணிக்கு இவ் வெற்றியானது அதிமுக்கியமாகக் கருதப்படுகிறது. மொத்தத்தில் கனடாவில் இந்தியா, பாகிஸ்தான் இரண்டும் வெற்றி பெற்றிருப்பதால் இரு நாடுகளும் திருப்தி அடைகின்றன, ஆனால் இருநாடுகளும் தங்களுக்கிடையில் மோதிக்கொள்ளவில்லை என்ற அவா ரசிகர்களுக்குத் தீரவில்லையே. இந்த நிலை அவுஸ்திரேலியாவில் நடைபெறவிருக்கும் ஹல்ரன் அன் யுனைட்டட் கிண்ணப் போட்டிகளில் தீருமா? அல்லது கனடாவில் நிகழ்ந்தது போன்ற மாற்று ஏற்பாடு தானா?

# சுழல் பந்து வீச்சாளருக்கு வலை போட்ட இங்கிலாந்து கழகங்கள்



• அனில் கும்பிளே



ஷேன் வோர்ன்

கிரிக்கெட் சில நாடுகளில் மட்டும் விளையாடப்பட்டாலும் அதன் நிலை ஒரு உலக விளையாட்டு என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது. இதற்கான முக்கிய காரணம் செல்வாக்குப் பெற்ற சில நாடுகள் இதன் முக்கியஸ்தர்களாக இருப்பதேயாகும். அந்த வகையில் இங்கிலாந்து மிகக் குறிப்பிடத்தக்க தேசமாகும். இங்கிலாந்து அணி எந்த அளவுக்கு இருப்பது என்பதைவிட இங்கிலாந்து கழகங்கள் எந்த அளவில் இருக்கிறது என்பதே இந்நாட்டு நிலையாகும். அந்த அளவுக்கு உள்ளூர் கிரிக்கெட் வளர்ச்சிகண்டுள்ளது. பிரித்தானிய நாடுதழுவிய ரீதியில் 20 க்கு மேற்பட்ட கழகங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கழகமும் தலா ஒரு வெளிநாட்டு வீரனைத் தமது கழகத்தில் ஆடவைக்கலாம் என்றபடியால் வருடாவருடம் புதிய வீரர்களுக்கான தேடல்களில் கழகங்கள் இறங்கிவிடுகின்றன. 1999-ம் ஆண்டு சுழல்பந்து வீச்சாளர்களைக்கொண்ட கழகங்கள் பெரியளவில் வெற்றி பெற்று முதன்மை பெற்றதால் 2000-ம் ஆண்டுக்கான தேடலில் சுழல்பந்து வீச்சாளர்களே முக்கியமாக்கப்பட்டுள்ளனர்.

தலைசிறந்த சுழல்பந்து வீச்சாளர்கள் முரளீதரன், சக்லின் முஸ்ராக் ஆகியோர் இங்கிலாந்து கழகங்களில் ஏற்கனவே விளையாடி பல வெற்றிகளைத் தொட்டுவிட்டனர். ஆனால் தலைசிறந்த லெக் ஸ்பின்னர்களான அனில்கும்பிளே, வோர்ன் தவறிவிட்டனர். ஆயினும் 2000 ஆண்டில் அவர்களும் தவறிவிடமாட்டார்கள். இவர்கள் இருவரையும் மடக்கிப்போட்டுவிடவேண்டுமென பல கழகங்கள் கங்கணம் கட்டியபோதும் Hampshire, Leicestershire இரண்டுமே வெற்றிபெற்றன. உலகக் கிண்ண இறுதிப்போட்டியின் கதாநாயகனும் அவுஸ்திரேலிய அணியின் உதவித்தலைவருமான வோர்னை Hampshire ஒப்பந்தம் செய்து 24 மணித்தியாலங்களுக்குள் Leicestershire கும்பிளேயை ஒப்பந்தமாக்கியது. ஏற்கனவே 1995-இல் கும்பிளே Northamshire-வுக்காக ஆடியபோது 100 விக்கெட்டுக்களை அள்ளி எடுத்தவர் என்பதையும் கழகங்கள் மறக்கவில்லை. 2000 ஆண்டுக்கான பிரித்தானிய கழகப்போட்டிகள் உலகின் தலைசிறந்த ஸ்பின் பந்து வீச்சாளர் போட்டிகளாக மாறிவிடும் என்று தோன்றுகிறது.

# அமெரிக்காவிடம் ரஷ்யா தோல்வி





டெனிஸ் ஆட்டத்தில் தனிநபர் ஆட்டமே முக்கியமாக இருந்தாலும், நாடுகளுக்கிடையிலான ஆட்டங்களும் உண்டு. ஆண்களுக்காக 100 வருட வயதை எட்டும் டேவிஸ் கிண்ணப்போட்டிகள் நடைபெறுவதைப்போன்று, பெண்களுக்காகவும் 37 வருடங்களாக `FED CUP' போட்டிகள் நாடுகளுக்கிடையிலான போட்டியாக நடைபெற்றுவருகிறது. இவ்வருடத்திற்கான 'FED CUP' இறுதிப் போட்டியில் அமெரிக்காவும் ரஷ்சியாவும் 18, 19 செப்டெம்பரில் மோதிக்கொண்டன. அமெரிக்காவுக்காக உலகதரத்தில் 2-ம், 3-ம், 4-ம் நிலையிலுள்ளவர்களான முறையே டவன்போட், வீனூஸ் வில்லியம்ஸ், சரினா வில்லியம்ஸ் ஆடினார்கள். ஆனால் ரஷ்சியாவிடம் அவ்வாறு முன்னணியான வீராங்கனைகள் இருக்கவில்லை. அத்தோடு இவ்விறுதிப்போட்டி அமெரிக்காவின் பிரபல நகரமான கலிபோனியாவில் நடைபெறுவதால் முழுக்க முழுக்க அமெரிக்காவுக்கு ஏற்ற சூழலே தென்பட்டது. முதலில் நடைபெற்ற மூன்றுதனியார் போட்டிகளிலும் அமெரிக்கா வெற்றிபெற்றதால் நான்காவது தனியார் போட்டியும் இரட்டையர் போட்டியும் நடைபெறாத நிலையிலேயே அமெரிக்காவிடம் கிண்ணம் உறுதியாகிவிட்டது. 37 வருட சரித்திரத்தில் 16 தடவை அமெரிக்கா வெற்றிவாகை சூடியிருக்கிறது.

# கடந்தவாரம் பற்றிய காதல் பரபரப்புக்கு முற்றுப்புள்ளி

டெனிஸ் விளையாட்டைப் பற்றி தெரியாவிட்டாலும் பலருக்கு ஸ்ரெபி கிறாப்பைத் தெரிந்திருக்கும்.

ஒரு காலத்தில் டெனிஸ் ராணியான இவருக்கும் அமெரிக்க ஒப்பன் ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்ற அகஸிக்கும் இடையில் பற்றிக்கொண்ட காதல் செய்தியானது உண்மையா? கற்பனையா என்பதைப் பலரும் கேட்டு மண்டையைப் பிய்த்துக்கொண்டிருக்கையில் எவரிடமிருந்தும் எந்த அறிவிப்பும் கிடைக்கவில்லை. ஆனால் இச்செய்திக்கு முடிவுகட்டும் வகையில் ஸ்ரெபி, அகஸி இருவரும் கூட்டாகக் கடந்த 18.09.99 குத்துச் சண்டைப் போட்டியை ரசிக்க வந்ததை உலக தொடர்புச் சாதனங்கள் அனைத்தும் படம்பிடித்து பிரதான செய்தியாக்கியிருக்கின்றன.





# விறுவிறுப்பான குத்துச்சண்டை முடிவு



18.09.99 அமெரிக்காவில் நடந்து முடிந்த குத்துச்சண்டை (Welterweight) போட்டியானது மிகவும் கடுமையாகக் காணப்பட்டது. திரினிடாட் (Trinidad), ஒஸ்கார் கோயா (Oscar Hoya) இருவருக்கும் இடையில் நடைபெற்றபோது இருவருமே வெற்றி பெறக்கூடிய வகையில் இருவரிடமும் போதிய பலம் விறுவிறுப்புக் காணப்பட்டது. முதல் சுற்றில் திரினியட் 115:113 என்று முன்னணியில் இருக்க இரண்டாவது சுற்று சற்று கடுமையாகி மீண்டும் திரினிடாட் 115:114 என முன்னணி வகித்தார். ஆனால் மூன்றாவது சுற்று கடுமையிலும் கடுமையாகி யாருக்கும் வெற்றி இல்லை என்ற வகையில் 114:114 என சமபுள்ளிகள் பெறப்பட்டதால் முதல் இரு சுற்றுக்களின் அடிப்படையில் திரினிட்ாட் வெற்றிபெற்றார்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## சிறீலங்காவில்.......

தெரிவித்தார்.

அத்துடன், போரில் ஈடுபட்டுள்ள அனைத்து பகுதியினரும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண முன்வரவேண்டும் என கேட்டுக்கொண்டதுடன் இலங்கையில் இன்னொரு தேர்தல் ஆரம்பமாக உள்ளதால் புதிய அரசாங்கத்தின் கொள்கையை அவதானித்த பின்னரே இந் நாட்டிற்கு எவ்வளவு நிதி உதவி அளிக்கப்படவேண்டும் என்பது தீர்மானிக்கப்படும் எனகவும் தெரிவித்தார்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## செம்மணியில்.......

பட்டுள்ள புதைகுழிகளையும் தோண்டப்படவுள்ள புதைகுழிகளையும் கணிப்பிட்டு ஆய்வு செய்த சர்வதேச அவதானிகள் இக் குழிகளில் 80ல் இருந்து 100 வரையிலான சடலங்கள் இருக்கலாம் என 'தாம் நம்புவதாகத் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி மனித உரிமைகளுக்கான மருத்துவ நிபுணர் குழுவைச் சேர்ந்த மானிடவியல் இரசாயனப் பகுப்பாய்வு நிபுணர் வில்லியம் ஹக் லண்ட் பத்திரிகையாளர் மாநாடொன்றில் தெரிவிக்கையில், சில புதைகுழிகளில் 15 தொடக்கம் 20 வரையிலான சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்ததுடன் அவற்றைத் தோண்டியெடுக்கும் பணி மிகவும் சிக்கலானதாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஜேர்மன்.......

தாக கற்றிங்கன் பொலிசார் அறிவித்துள்ளனர். கழுத்தில் பட்டி ஒன்றைக் கட்டிச் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

38 வயது நிரம்பிய ஜெகன் மோகன் 1500 மார்க் அபராதத் தொகையைச் செலுத்தத் தவறியதனால் சிறையில் இருந்ததாகத் தெரிவித்துள்ள பொலிசார், மாலை ஆறு மணிக்கு சிறையினுள் வைத்து சிறைக்காவலர் பூட்டியதாகவும் மீண்டும் காலை ஆறு மணிக்குச் சிறையைத் திறக்கும்போது அவர் தற்கொலை செய்துகொண்டு இறந்து கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் மரணவிசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அவர் தற்கொலை செய்துகொண்டதற்கான காரணம் என்ன என்பது தெரிவிக்கப்படவில்லை. அவர் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படும் பட்டி எங்கிருந்து வந்ததென்றும் மரண விசாரணையின்போது குறிப்பிடப்படவில்லை. ஜெகன்மோகனின் மரணச்சடங்கு கற்றிங்கன் நகர மயானத்தில் நடைபெற்றது.

- வீ.ஆர்.வரதராஜா

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## அம்பாறை.......

யேற்றப்பட்ட சிங்களவர்கள் மீதே தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர்களில் பெண்களும் குழந்தைகளும் அடங்குவர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை ஊர்காவற்படையினர் ஒருவரின் அந்தியெட்டிக்கிரியைகளில் கலந்துகொண்டிருந்தவர்களிலேயே பெரும்பாலானோர் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இப் பகுதியில் தாக்குதலை நடாத்திவிட்டு இன்னொரு குடியேற்றக் கிராமத்தில் நுழைந்த இவ் ஆயுதம் தாங்கியவர்களால் மூன்று ஊர்காவற் படையினரும் ஒரு சிங்களக் குடியேற்றவாதியும் கொல்லப்பட்டுள்ளனர் என செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. கொல்லப்பட்டவர்களின் இறுதி நிகழ்வுகளுக்கு சிறீலங்கா அரசினால் தீவிர பாதுகாப்பு வழங்கப்பட்டள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## எலக்ரோனிக்.......

பட்ட இரு விமானங்களை பிரித்தானியாவிடம் இருந்து விரைவில் தமது படைகள் வாங்க உள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை விமானப் படைகளுக்க ராடர் மற்றும் லேசர் மூலம் வழிகாட்டப்படும் குண்டுகளையும் பிறரக நவீன குண்டுகளையும் கொள்வனவு செய்ய சிங்கள அரசு முடிவுசெய்துள்ளது. இவ் கொள்வனவுகள் மூலம் விமானப்படையின் பலத்தை பெருமளவு அதிகரிக்க சிறீலங்கா முயல்வதாக ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## புதுக்குடியிருப்பு.......

இத் தாக்குதல்பற்றி இராணுவப் பேச்சாளர், இது பொதுமக்கள் மீது வேண்டுமென்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அல்ல என்று கூறியுள்ளார். அவர் சர்வதேச மன்னிப்பு சபைக்கு இரு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக கூறியுள்ளார். ஒன்று புதுக்குடியிருப்பில் இருந்து நாலரை கிலோமீற்றர் தொலைவில் உள்ள புலிகளின் நந்திக்கடல் முகாம் மீதே தாக்குதல் நடாத்தப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். ஆனால் பொது மக்களே கொல்லப்பட்டும் காயப்படுத்தப்பட்டும் உள்ளனர். இத் தாக்குதலில் பொதுமக்களை பாதுகாக்கும் எந்தவிதமான முன்னேற்பாடு பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாக சர்வதேச மன்னிப்புச்சபை கருதவில்லை. எனவே புதுக்குடியிருப்பில் நடாத்தப்பட்ட விமானத் தாக்குதல் ஒரு சட்டவிரோத நடவடிக்கை என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. இவ் அறிக்கையை சர்வதேச மன்னிப்புச்சபை சிறீலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது. (இவ் விமானத் தாக்குதல் பற்றிய மேலதிக செய்திகளும் கொல்லப்பட்ட பொதுமக்களின் விபரங்களும் உள்ளே.)

# எலும்புக் கூடுகள் முற்றாக மீட்கப்பட்ட பின்னரே மக்களின் பார்வைக்கு

(19.09.99)

செம்மணிப் புதைகுழிகளில் தோண்டப்படும் எலும்புக் கூடுகள் முற்றாக தோண்டி எடுக்கப்பட்டதன் பின்னரே அவை மக்களின் பார்வைக்கு வைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் 30ம் திகதி வரை இப் புதைகுழிகளை தோண்டுவதற்கான திட்டம் இடப்படுள்ளது. அதன் பின்னரே அவ் எலும்புக் கூடுகள் அடையாளம் காண்பதற்காக மக்களின் பார்வைக்கு வைக்கப்பட உள்ளது. ரா்ஜபக்ஷவினால் அடையாளம் காட்டப்பட்ட 25 புதைகுழிகளுடன் அடையாளம் காட்டப்படாத சில புதைகுழிகள் சந்தேகத்தின் பெயரில் தோண்டப்பட்டுள்ளது. இதுவரை தோண்டப்பட்ட 16 புதைகுழிகளில் 15 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

## எழுதுமட்டுவாளில் தேடுதல்

(20.09.99)

யாழ். தென்மராட்சி எழுதுமட்டுவாள் பகுதி இன்று காலை சிறீலங்கா படையினரின் தீவிர தேடுதலுக்கு உள்ளானது. இப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தமக்கு கிடைத்த தகவலையடுத்தே தேடுதல் நடாத்தியதாகவும், இதன்போது தம்மால் சில ஆயுதங்களும் வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

# 1ம் ஆண்டு நினைவாஞ்சலி



திருமதி மல்லிகாதேவி மயில்வாகனம்

மலர்வு: 12.07.50
உதிர்வு: 29.09.98



செல்வன் மயில்வாகனம் சபேஸ்

மலர்வு: 12.07.83
உதிர்வு: 29.09.98

உங்கள் வரவிற்காக நாமெல்லாம்
ஆவலாய்க் காத்திருக்க – விழி பூத்திருக்க
கொடிய அரக்கரின் சதியால்
நடுவானில் – ஆழ்கடலில்?
துடிக்கப் பதைபதைக்க
காலன் உங்களை அழைத்தானோ?
சிறகிழந்த பறவைகளாய் – உலகில்
ஏங்கி அலைகின்றோம்
கண் இமைக்க மறந்து
வழியும் விழிநீரில் – உங்கள்
திருமுகங்களைத் தேடித்தேடி
தேற்றும் வழி எதுவும் தெரியாது
தினமும் கதறியழுகின்றோம்!

எம் அன்புத் தெய்வங்களின் அகால மறைவு குறித்து, எமக்கு சகல வழிகளிலும் ஆறுதல் கூறியும் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்!

*இவர்கள் பிரிவால் துயருறும்*
*கணவன்-தந்தை, பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

தகவல்: தர்மதுரை (மகன்) நோர்வே T.P -22647553
ரமணன் (மகன்) ஜேர்மனி T.P- 8931402760
தர்மலிங்கம் (சகோதரன்) சுவிஸ் T.P- 522321083

Pub


**பன்னாட்டு தொலைத்தொடர்பு நிலையம்**
**புதுக்குடியிருப்பு, ஸ்கந்தபுரம்– தமிழீழம்**

*ஈழத்தமிழ் உறவுகளுக்கு 'இது இனிப்பான செய்தி!*
*தொலை நாடுகளில் வாழும்*
*தொப்புள்கொடி உறவுகளே!*
*தொடர்புகள் துண்டிக்கப்பட்டதென்ற துன்பம் இனி இல்லை*
*உங்கள் உறவுகளுடன்*
*உடனுக்குடன் தொடர்புகளுக்கு*

வன்னிப் பெருநிலப்பரப்பில்

இரவு பகல் தொடரும் இருபத்து நான்கு மணிநேரச் சேவையில்
புதுக்குடியிருப்பு - ஸ்கந்தபுரம் கிளைகள்

மலிவான கட்டணத்தில் தெளிவான சேவை
உறவுகளுக்கு பாலமிட்டு உதவுகின்ற சேவை

★ தமிழீழத்தில் செலுத்த வேண்டிய கட்டணத் தொகையைத் தொடர்பு கொள்ளும் நாடுகளிலேயே செலுத்துவதற்கான ஒழுங்குகள்!

வாடிக்கையாளர்களின் வசதிகளுக்கு ஏற்ப
வன்னித்தளத்தில் வளமான சேவை

– இத்துடன்
துரிதகதியில் தொலைநகல் சேவை
எம்மைப்பிடித்துள்ள இன்னல்கள் போயின
இன்றே கொள்க எம்முடன் தொடர்பு

| | |
|---|---|
| புதுக்குடியிருப்பு தொலைபேசி இல: | 00873 + 761932759 |
| | 00873 + 762077524 |
| புதுக்குடியிருப்பு தொலைநகல் இல: | 00873 + 761932760 |
| ஸ்கந்தபுரம் தொலைபேசி இல: | 00873 + 761932798 |
| ஸ்கந்தபுரம் தொலைநகல் இல: | 00873 + 761932810 |



**தமிழர் தொலைபேசி நிலையம்**

இலங்கை-50 / இந்தியா-50
**1 Card - 90Frs**
சனி, ஞாயிறு, திங்கள் தினங்களில் ஒரு அட்டை வாங்கும்போது அன்பளிப்பையும் கேட்டு வாங்குங்கள், கைத்தொலைபேசிகள் திருத்திக் கொடுக்கப்படும்

புதிய படப் பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

itineris SFR Bouygues Telecom

**ALLO BOX**
59, Rue d'Avron,
75020 Paris
Tel: 01 43 73 76 83 - Fax: 01 43 73 96 31
M°: Maraîchers / Buzenval
Bus: 26

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64



மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub


# செம்மணியில் 20-ற்கு மேற்பட்டோர் புதைக்கப்பட்ட இடத்தில் வீதி அமைக்கப்பட்டு, போக்குவரத்தும் இடம்பெறுகிறது? இன்னும் நூற்றுக்கணக்கான சடலங்கள் உள்ளன

## – சர்வதேச அவதானிகள்

(19.09.99)

கிருஷாந்தி கொலை வழக்கின் மரணதண்டனைக் கைதிகள் செம்மணியில் 400-ற்கும் மேற்பட்ட உடல்கள் புதைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்ததை அடுத்து பல்வேறு உண்மைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. அவற்றில் கைதடி, அச்சுவேலி பகுதிகளில் கைதுசெய்யப்பட்டு படையினரால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 20 தொடக்கம் 30 வரையான சடலங்கள் உழவு இயந்திரத்தில் ஏற்றிவரப்பட்டு விடுதலைப்புலிகள் அமைத்திருந்த காவலரண் ஒன்றினுள் போடப்பட்டு உழவு இயந்திரத்தில் மண் ஏற்றிவரப்பட்டு மூடப்பட்டுள்ளது. பின்னர் அப் புதைகுழி அடையாளம் தெரியாதவாறு படையினரால் செப்பனிடப்பட்டு, வீதியமைக்கப்பட்டு வாகனப்போக்குவரத்தும் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இவ்வீதியை சிறிது ஆழம்வரை தோண்டிப்பார்த்த போது இப்பகுதியில் மண்ணின் இயற்கை நிலை குழம்பாமல் உள்ளதால் புதைகுழி இருப்பதற்கான வாய்ப்பில்லை என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் படையினர் மண்ணைப் போட்டு மூடிய பின்னர் வீதியை அமைப்பதற்காகப் பாரிய புல்டோசர்களைப் பயன்படுத்தியதால் அம் மண் இறுக்கமடைந்திருக்கலாம் எனக் காணாமல் போனவர்களின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை செம்மணியில் ராஜபக்சவினாலும் ஏனைய மரணதண்டனைக் கைதிகளினாலும் அடையாளம் காட்டப்பட்ட 25-ற்கும் மேற்பட்ட புதைகுழிகளில் நூற்றுக்கு மேற்பட்ட சடலங்களைப் புதைத்திருக்கலாம் என தாம் நம்புவதாக சர்வதேச அவதானிகள் தெரிவித்துள்ளனர். தோண்டப்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# சிறீலங்காவில் இராணுவ மேலாதிக்கம் பெருந்தொகைப் பணம் போரில் வீணடிக்கப்படுகிறது – நெதர்லாந்து அமைச்சர்

(19.09.99)

சிறீலங்காவில் இராணுவத்தினரின் ஆதிக்கம் மேலோங்கி காணப்படுவதால் மனித உரிமைகள் பேணப்படுவதில்லை. யுத்தம் மக்கள் மத்தியில் ஆழமான பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இது தமக்கு கவலையை தருவதாக நெதர்லாந்தின் அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கான அமைச்சர் இவெலின் ஹெர்வ் கின்ஸ் தெரிவித்துள்ளார். அண்மையில் சிறீலங்காவிற்கு பயணம்செய்த இவர், நெதர்லாந்து தூதரகத்தில் பத்திரிகையாளரை சந்தித்து உரை நிகழ்த்தியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், இலங்கையில் இடம்பெற்று வரும் போரினால் பாரியளவு மனித உயிரிழப்புகளும், போருக்காக அபிவிருத்திக்கு செலவிடப்படவேண்டிய பெருந்தொகைப் பணமும் செலவிடப்படுவது கவலையளிக்கிறது. யுத்தம் காரணமாக சகல மட்டத்திலும் சீரழிவு ஏற்பட்டுள்ளது எனவும்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# புதுக்குடியிருப்பு தாக்குதல் சட்டவிரோத நடவடிக்கை பொதுமக்களின் உயிர்களை பாதுகாக்க அரசு தவறிவிட்டது

## – சர்வதேச மன்னிப்புசபை கண்டனம்

(20.09.99)

புதுக்குடியிருப்பில் சிறீலங்கா படைகள் மேற்கொண்ட தாக்குதலில் 22 பொதுமக்கள் கொல்லப்பட்டு 40-ற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தமைக்கு சர்வதேச மன்னிப்புச் சபை ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளதுடன் பொதுமக்களின் உயிர்களை பாதுகாக்க அரசு தவறிவிட்டது என கண்டனமும் தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அவ் அறிக்கையில், பொதுமக்கள் பாதிக்காதளவிற்கு சகல பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என்பது சர்வதேச மனிதாபிமான சட்டமாகும். ஆனால் சிறீலங்கா விமானப் படையினர் அதனை மீறிவிட்டனர். சிறீலங்கா விமானப்படையால் குறிப்பிடப்பட்ட இலக்கிற்கும், தாக்கப்பட்டுள்ள இலக்கிற்கும் இடையில் குறிப்பிடத்தக்களவு தூரம் இடைவெளியுள்ளது என்பதை மன்னிப்புசபை நம்புகின்றது. ஆனால் விமானப் படை தாக்குதலை மேற்கொள்வதற்கு முன்னர் சரியான உளவுத் தகவல்கள் பெறப்பட்டதா என்பது தொடர்பாக மிகுந்த சந்தேகம் எழுகின்றது.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# அம்பாறை குடியேற்றக் கிராமங்களில் தாக்குதல் 54 சிங்களவர்கள் பலி

(20.09.99)

அம்பாறை மாவட்டத்தில் உகன, புஞ்சிகிரிய போன்ற கிராமங்கங்களில் நேற்று முன் தினம் காலை 54 குடியேற்ற சிங்களவர்கள் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். தமிழ்க் கிராமங்களில் தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டு அப் பகுதிகளில் ஆயுதங்கள் வழங்கப்பட்டு குடி

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# ஜேர்மன் சிறையில் தமிழர் தற்கொலை

ஜேர்மன் கற்றிங்கன் சிறையிலிருந்த அனலைதீவைச் சேர்ந்த ஜெகன்மோகன் சபாரத்தினம் தற்கொலை செய்துகொண்ட

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# எலக்ரோனிக் – லேசர் ஆயுத தளவாடக் கொள்வனவு

சிறீலங்கா அரசு இலத்திரனியல் யுத்தத்திற்கான கருவிகளையும் லேசர் மூலம் இலக்குகளை நோக்கி ஏவும் குண்டுகளையும் கொள்வனவு செய்யவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான கொள்வனவு அறிவித்தல்களை விடுத்துள்ள அரசு சீ-130 ரக விமானங்களுக்கான இயந்திரங்கள் மற்றும் பராமரிப்பு உபகரணங்களைக் கொள்வனவு செய்யப்போவதாகவும் அறிவித்துள்ளது. தற்போது சிறீலங்காவிடம் சீ-130 ரக விமானங்கள் இல்லையெனினும், பாவிக்கப்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)


ஜே.ஆர்.எஸ்.
என்றப்பிறைசேஸ்
537 High Road, Wembley
Middlesey, Hao 2 Dj, Tel: 0181- 9024590
நிர்வாகி: G.சதீஸ்
Pub
★ Kingfish- 2.59 ல் இருந்து
★ நீலக்கால் [துப்பரவு செய்த] நண்டு £3.89 ல் இருந்து
★ 20 Kg Broken Basmath £7.99 இலிருந்து; 20 கிலோ Broken Basmath £7.99 இலங்கை மரக்கறிவகை 99P
★ CD 2.99 இல் இருந்து
★ Audio 99 இல் இருந்து
★ நல்லெண்ணை £3.49; 1/2 போத்தல் £1.79
★ ஞானம்காட் 10% விலைக் கழிவில்